பக்கங்கள்: இருபத்து எட்டு

# உதயன்

விலை ரூபா 20.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 கார்த்திகை 8 வியாழக்கிழமை (24.11.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 363



21

மீனவர்கள் தாக்கப்படுவது குறித்து உடனடியாக நடவடிக்கை எடுங்கள்



22

உலகுக்கு இலங்கை வழங்கியுள்ள வாய்ப்பு



25

டரன் பிராவோ அதிரடி; விழி பிதுங்கிய இந்தியா

# அரசியல் தீர்வை எட்ட தெரிவுக்குழு அமைப்பு

## நாடாளுமன்றில் நேற்று பிரேரணைக்கு அங்கீகாரம்

கொழும்பு, நவ. 24

இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் வகையில் அரசமைப்பிலுள்ள விடயங்களை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கென நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஒன்றை நியமிக்கக் கோரும் பிரேரணை நாடாளுமன்றில் நேற்று முன்மொழியப்பட்டு அங்கீகரிக்கப்பட்டது.

இந்தப் பிரேரணை நேற்று சபை முதல்வர் நிமால் சிறிபால டி சில்வாவினால் நாடாளுமன்றில் முன்மொழியப்பட்டது. பின்னர் ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டது.

6 மாதங்களுக்குள் தீர்வை முன்வைக்கும் வகையில் இந்தக் குழு அறிக்கை சமர்ப்பிக்கவேண்டும் எனவும், இக்குழுவில் ஆளும் கட்சிப் பிரதிநிதிகள் 19 பேரும் எதிர்க்கட்சிப் பிரதிநிதிகள் 12 பேரும் உள்ளடங்குகின்றனர் எனவும் பிரேரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

"இங்கு வாழும் அனைத்து இனமக்களும் தத்தமது தனித்துவத்தையும், பாதுகாப்பையும் மேம்படுத்தவும், கண்ணியமாகவும் பாதுகாப்பாகவும் ஒரே தேச மக்களாக வாழ்வதற்கான தத்துவம் அளிப்பதை அரசமைப்பின் மூலம் உறுதிப்படுத்தவும் தேவையான விடயங்களை ஆராய்ந்து அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிப்பதற்கென நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஒன்றை நியமிக்கவேண்டும்" எனக் கோரும் பிரேரணையே அங்கீகரிக்கப்பட்டது.

இவ்வாறு தெரிவுசெய்யப்படும் தெரிவுக்குழு, நியமித்த தினத்திலிருந்து ஆறு மாதங்களுக்குள் தமது அறிக்கையைச் சமர்ப்பிக்கவேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இப்பிரேரணையில் ஆளுந்தரப்பு உறுப்பினர்களான அமைச்சர்கள் மைத்திரிபால

பக் 27

## 'பட்ஜெட்'டுக்கு எதிராக நாடு முழுவதும் ஆர்ப்பாட்டம்

கொழும்பு, நவ. 24

ஜனாதிபதியால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள 2012ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்டத்தில் நிவாரணம் எதுவும் வழங்கப்படவில்லை எனத் தெரிவித்து நாடு முழுவதும் ஆர்ப்பாட்டங்களை நடத்த ஜே.வி.பி. தீர்மானித்துள்ளது.

இதன் முதற்கட்ட

பக் 27

## யசூசி அகாசி இலங்கை வருகை

கொழும்பு, நவ. 24

ஜப்பானின், இலங்கைக்கான முன்னாள் சமாதானத் தூதுவர் யசூசி அகாசி இலங்கைக்கு விஜயம் செய்ய உள்ளதாகவும் அதிவேக நெடுஞ்சாலை திறப்பு விழாவில் கலந்து கொள்வார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் 27ஆம் திகதி அதிவேக நெடுஞ்சாலை திறக்கவுள்ளதாகவும் குறித்த வீதி ஆரம்ப நிகழ்வுகளின் பிரதம

பக் 27

## கோயிலில் மணியோசை எழுப்ப மாவீரர் வாரத்தையொட்டி தடை

யாழ்ப்பாணம், நவ. 24

மாவீரர் வாரம் ஆரம்பித்து விட்டதனால், காரைநகரில் உள்ள இந்து ஆலயம் எதிலும் மணி ஓசை எழுப்பக்கூடாது என்று கடற்படையினர் தடைவிதித்துள்ளனர்.

காரைநகர் பிரதேச சபைத் தலைவர் வே.ஆனைமுகன் கடற்படையினரின் இந்த அடாவடித்தனத்தைக் கடுமையாகக் கண்டித்துள்ளார்.

விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இருந்து தமிழ் மக்களின் விடுதலைக்காகத் தமது இன்னுயிர்களை ஈந்த மாவீரர்கள் நினைவாக நவம்பர் 21ஆம் திகதியில் இருந்து மாவீரர் வாரம் கடைப்பிடிக்கப்படுவது மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் வரை வடக்கு - கிழக்குப் பிரதேசங்களில் வழமை நிகழ்வாக இருந்தது.

எனினும், போரில் இலங்கை அரசு வெற்றி பெற்றதன் பின்னர் வடக்கு - கிழக்கில் இருந்த மாவீரர் துயிலும் இல்லங்கள் அனைத்தும் அழிக்கப்பட்டு உழுது தரைமட்டமாக்கப்பட்டன. அதனை அடுத்து வெளிப்படையாக மாவீரர் தினம் கடைப்பிடிக்கப்படுவது வடக்கு - கிழக்கில் நின்று போனது. கடந்த மூன்று வருடங்களில் நவம்பர் இறுதி வாரத்தில்

பக் 27

## தற்போதைய 'பட்ஜெட்' போல வரலாற்றில் வெளியானதில்லை

### அரசின் சாதனை என்கிறார் அமைச்சர் பந்துல

கொழும்பு, நவ 24

தற்போது சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் வரவு - செலவுத் திட்டம் போல வரலாற்றில் எந்த அரசும் சமர்ப்பித்ததில்லை. வழமைபோல் இந்த அரசு நிகழ்த்தியிருக்கின்ற சாதனையைப் போல் எந்த அரசும் நிகழ்த்தியதில்லை என்று அமைச்சர் பந்துல குணவர்தன நேற்று நாடாளுமன்றில் தெரிவித்தார்.

நேற்று நாடாளுமன்றில் இடம்பெற்ற வரவு-செலவுத் திட்ட விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு-

பொருளாதார வளர்ச்சியில் அனைவரது பங்களிப்பையும் பெற்றுக்கொள்ளும் நோக்கிலேயே இந்த வரவு-செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

பக் 27

## அரசுக்கு கே.பி. 850 மில்லியன் டொலர்

கொழும்பு, நவ. 24

தமிழீழ விடுதலைப்புலிகளின் சர்வதேச விவகாரத்துக்கு பொறுப்பாளராக இருந்த கே.பி என்றழைக்கப்படும் குமரன் பத்மநாதன் தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்காக 850 மில்லியன் டொலர்களை இலங்கைக்கு வழங்குள்ளதாக தகவல்கள் வெளியாகி

பக் 27

## தமிழ்மொழியில் தேசிய கீதம் பாடும் உரிமை அரசமைப்பில் உறுதி; சிங்களத்தில் பாட நிர்ப்பந்திப்பது சட்டவிரோதம் என்கிறார் அமைச்சர்

கொழும்பு, நவ. 24

தேசிய கீதத்தைச் சிங்கள மொழியில் மட்டும்தான் பாட வேண்டும் என்று நிர்ப்பந்திப்பதோ அல்லது கட்டாயப்படுத்துவதோ சட்டவிரோதமான செயலாகவே கருதப்படும். தமிழ்மக்கள் தமது தாய்மொழியில் தேசிய கீதத்தைப் பாடும் உரிமை அரசமைப்பின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்று தேசிய மொழிகள், சமூக ஒருங்கிணைப்பு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார நேற்று நாடாளுமன்றத்தில் அறிவித்தார்.

நேற்று வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின்போது ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர் தயாசிறி ஜயசேகர எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

* இலங்கையின் தேசிய கீதம் சிங்களமொழியில் மட்டும்தான் பாடவேண்டும் எனச் சட்டம் இயற்றப்படவுள்ளதா?

* இப்படியான ஒரு சட்டம் இயற்றப்படுவதற்கான காரணம் என்ன?

* சகல இனமக்களும் தாம் விரும்பிய தமது மொழியைப் பாவிக்கும் உரிமை இதன் மூலம் மீறப்படவில்லையா?

* இப்படியான ஒரு சட்டவரைவு கொண்டு வருவதால், சிங்கள மக்

பக் 27

## எதிர்க்கட்சி மீதான தாக்குதல் ஏற்கக்கூடியதல்ல

கொழும்பு, நவ. 24

ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களால் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டமை அனுமதிக்கக்கூடிய ஒன்று அல்ல என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்

பக் 27

## விசாரணை ஏதுமின்றித் தடுப்பில் 259 பேர் சட்டம் படித்த ஜனாதிபதி தலையிட வேண்டும்

### ஜயலத் எம்.பி. கோரிக்கை

கொழும்பு, நவ. 24

யுத்தம் முடிந்து இரண்டரை வருடங்கள் கழிந்த நிலையிலும், பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள 833 பேரில் 259 பேருக்கு எதிராக எவ்வித வழக்குகளும் தாக்கல் செய்யப்படவில்லை என்பதை அரசே ஏற்றுக்கொண்டுள்ளது. இது தொடர்பாகச் சட்டம் படித்த ஜனாதிபதி நேரடியாகத் தலையிட்டுத் தீர்வு வழங்க வேண்டும். இல்லையேல் அவர்களுக்கு விடிவே இல்லை.

- இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிப் பொதுச் செயலாளரும், மனித உரிமை விவகாரங்களுக்குப் பொறுப்பானவருமான டாக்டர் ஜயலத் ஜயவர்

பக் 27

## வெளிநாட்டுத் தொப்பிகளுக்கு வரி குறைப்பு; அத்தியாவசியப் பொருள்கள் விலை அதிகரிப்பு

### அரசின் புத்திக்கூர்மையை விமர்சிக்கிறது ஜே.வி.பி.


கொழும்பு, நவ. 24

வெளிநாட்டுத் தொப்பி மற்றும் அழகுசாதனப் பொருள்களுக்கு வரிகளை குறைத்துள்ள அதேநேரம், உள்நாட்டின் அத்தியாவசியப் பொருள்களின் விலையை அதிகரிக்கும் அளவிற்கு அரசு புத்திக்கூர்மையுடன் செயற்பட்டுள்ளது என்று ஜே.வி.பி. குற்றஞ்சாட்டியுள்ளது.

ஜே.வி.பியின் தலைமை அலுவலகத்தில் நேற்று

பக் 27

உதயன்
தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம்: 021-2229933
தொலைநகல்: 021-2229944
செய்தி/[illegible]ங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com




அனைத்து மாவட்டங்களிலும் வானம் மேகமூட்டத்துடன் காணப்படுவதுடன் இடையிடையே மழைக்கான சாத்தியமும் உள்ளது.

# குற்றச் செயல்கள் இடம்பெறும் சூழலை மாநகர முதல்வரே ஏற்படுத்தியுள்ளார்

### ஆளும் கட்சி, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம்,நவ.24

யாழ். நகரப்பகுதியில் குற்றச் செயல்கள் இடம் பெறுவதற்கான சூழலை யாழ். மாநகர சபை முதல்வர் ஏற்படுத்திக் கொடுத்துள்ளதாகச் சபையின் ஆளும் கட்சி மற்றும் எதிர்க் கட்சி உறுப்பினர்கள் குற்றம் சாட்டியுள்ளனர். யாழ்.மாநகர சபையின் ஆளும் கட்சி உறுப்பினரான எஸ்.நிஷாந்தன், எதிர்க் கட்சி உறுப்பினரான விந்தன் கனகரத்தினம் ஆகியோர் இவ்வாறு குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவிக்கையில்:

யாழ்.மாநகர சபை எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் போதைப்பொருள் விற்பனை, விபசார நடவடிக்கை, கசிப்பு உற்பத்தி உள்ளிட்ட குற்றச்செயல்கள் அதிகரித்து வருகின்றன.

அனுமதியின்றிச் சட்ட விரோதமாக இயங்கி வரும் தனியார் விடுதிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்காமல் அவற்றுக்கு உடந்தையாக மாநகர சபை நடந்து கொள்கின்றது.

மாநகர சபைக்கு உட்பட்ட பகுதியில் சட்ட விரோதமாக இயங்கும் விடுதிகளைத் தடை செய்யுமாறு சபைக் கூட்டத்தில் பல முறை முதல்வரைக் கேட்டிருந்தோம். அவற்றை எல்லாம் தனது காதில் போட்டுக் கொள்ளாது அலட்சியப்படுத்தி வந்தார் முதல்வர்.

சட்ட விரோத விடுதிகளை இயங்கவிடாமல் தடுத்திருந்தால் இன்று குற்றச் செயல்கள் அதிகரித்திருக்க மாட்டா.

சபை முதல்வருக்கு நெருங்கியவர்கள் அவ்வாறான விடுதிகளை நடத்துவதன் காரணமாகவே அவரால் விடுதிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க முடியாதுள்ளதோ எனச் சிந்திக்க வேண்டியுள்ளது.

குற்றச் செயல்களைத் தடுப்பதற்கான வழிவகைகள் இருந்தும் கூட யாழ். மாநகர சபை முதல்வரின் அலட்சியப் போக்கினால் அவை அதிகரித்து வருகின்றன என்றார். (த-14)

# மது போதையில் வாகனம் செலுத்திய இருவருக்கு அபராதம்

யாழ்ப்பாணம்,நவ.24

மதுபோதையில் வாகனம் செலுத்திய குற்றத்துக்காக இருவர் யாழ்.நீதிமன்றில் 12 ஆயிரம் ரூபா அபராதம் செலுத்தினர். இருவரில் ஒருவருக்கு சாரதி அனுமதிப் பத்திரமின்றி வாகனம் செலுத்திய குற்றத்துக்காக மேலும் இரண்டாயிரத்து 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் இவ்வாறு வாகனம் செலுத்தியவர்களில் ஒருவருக்கு5ஆயிரம், ரூபாவும் மற்றையவருக்கு 9 ஆயிரத்து 500 ரூபாவும் அபராதம் விதிக்கப்பட்டது. நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராஜா இருவரையும் குற்றவாளி என இனங்கண்டு இந்த அபராதத் தொகையை விதித்தார். (த-4)

# ஆசனப்பட்டி அணியாதவர்கள் நீதிமன்றில் செலுத்தினர் அபராதம்

யாழ்ப்பாணம், நவ.24

ஆசனப்பட்டி அணியாது வாகனம் செலுத்துபவர்களுக்கு எதிராகவும் வழக்குப் பதிவு செய்து நீதிமன்றில் ஆஜர்படுத்தும் படலத்தை யாழ். பொலிஸார் தொடர்கின்றனர்.

இவ்வாறு ஆசனப்பட்டி அணியாது சென்ற 12 பேர் யாழ். நீதிமன்றில் நேற்று 18 ஆயிரம் ரூபா அபராதம் செலுத்தினர்.

ஆசனப்பட்டி அணியாது செயல்படுபவர்களுக்கு எதிராகப் பொலிஸார் ஏற்கனவே நடவடிக்கை எடுத்திருந்தபோதும் நேற்றையதினம் அவர்களுக்கு எதிராக வழக்குப் பதிவுசெய்யும் நடவடிக்கையை தீவிரப்படுத்தியிருந்தனர்.

இது தவிர 49 சிசி ரக மோட்டார் சைக்கிள்களில் பயணிப்பவர்களும் அதற்கான சகல ஆவணங்களும் மற்றும் தலைக் கவசமும் அணிய வேண்டும் என்பதும் கட்டாயமாக்கப்பட்டுள்ளதுடன் மீறுபவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (த-4)

# வாதரவத்தை வரை பஸ் சேவையை மீண்டும் ஆரம்பிக்க வேண்டும்

### ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் தீர்மானம்

யாழ்ப்பாணம், நவ.24

வாதரவத்தை வரையிலான இ.போ.ச பஸ் சேவையை மீண்டும் ஆரம்பிக்க வேண்டும் எனவும் பஸ் சேவைக்குரிய வீதியைப் புனரமைப்பதெனவும் வலி.கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டதில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வலி. கிழக்குப் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் அண்மையில் பிரதேச செயலர் ம.பிரதீபன் தலைமையில் நடைபெற்றது. இதன் போதே மேற்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

கடந்த ஏப்ரல் மாதம் இடம் பெற்ற ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் வாதரவத்தை வரையில் இ.போ.ச பஸ் சேவை மேற்கொள்ளப்பட வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. இதற்கமைவாக இலங்கை போக்குவரத்துச் சபையின் பஸ் சில காலம் சேவையில் ஈடுபட்டது.

சில மாதங்களின் பின்னர் குறித்த பஸ் சேவை எதுவித காரணங்களுமின்றி நிறுத்தப்பட்டது. இது தொடர்பில் மக்களினால் தெரிவிக்கப்பட்ட முறைப்பாடுகளினை அடுத்து அண்மையில் இடம்பெற்ற ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தின் போது இந்த விடயம் ஆராயப்பட்டது.

பஸ் சேவை நிறுத்தப்பட்டமை தொடர்பில் பிரதேச செயலாளர் இலங்கைப் போக்குவரத்து சபை அதிகாரிகளிடம் கேள்வியெழுப்பிய போது, பாதை சீரின்மை காரணமாகவே பஸ் சேவை நிறுத்தப்பட்டதாக அவர்கள் தெரிவித்தனர்.

இதனையடுத்து மேற்படி பஸ் செல்லும் பாதையின் ஓரங்களிலுள்ள மரக்கிளைகளை அந்தப் பகுதி கிராம சேவகர் தலைமையில் அகற்றுமாறும் தெரிவிக்கப்பட்டது. அத்துடன் மேற்படி வீதியை வீதி அபிவிருத்தித் திணைக்களம் ஊடாகப் புனரமைக்குமாறும் தெரிவிக்கப்பட்டது. (த-15)

# அரச காணிகளைத் தனியாருக்கு வழங்க ஜனாதிபதி செயலணியின் அனுமதி தேவை

### மாவட்ட செயலகத்துக்கு ஜனாதிபதியின் செயலாளர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், நவ.24

யாழ்.மாவட்டத்திலுள் அரச காணிகளைத் தனியாரின் முதலீட்டு வாய்ப்புகளுக்கு வழங்குவதாக இருந்தால் அது தொடர்பாக ஜனாதிபதி விசேட செயலணியின் அனுமதி பெறப்பட வேண்டும் என்று செயலணியின் செயலாளர் லலித் வீரதுங்க மாவட்ட செயலகத்துக்கு அறிவுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் யாழ்.அரச அதிபர் தெரிவித்ததாவது:

அரச காணிகளைத் தனியாருக்கு வழங்குவதானால் ஜனாதிபதி விஷேட செய்லணியின் அனுமதி பெறப்பட வேண்டும் என்று இதன் செயலாளர் லலித் வீரதுங்க அறிவித்துள்ளார். இந்த அறிவித்தலை யாழ். மாவட்ட அரச அதிபர் என்ற வகையில் சகல பிரதேச செயலாளர்களுக்கும் அறிவித்துள்ளேன்.

முதலீட்டுச் சபையினுடாக அரச காணி கேட்கப்படும் போது மாகாணக் காணி ஆணையாளர் ஊடாக விண்ணப்பித்து ஆளுநரின் அனுமதி பெறப்பட வேண்டும். அத்துடன், ஜனாதிபதி விசேட செயலணியின் அனுமதியும் பெறப்பட வேண்டும் என்றார்.

இதேவேளை வடமாகாணத்தில் 26 திட்டங்களில் முதலீடு செய்வதற்கு வெளிநாட்டு நிறுவனங்களும் , தென்பகுதி நிறுவனங்களும் முன்வந்துள்ளன என்று இலங்கை முதலீட்டுச்சபையின் யாழ்.பிராந்திய சிரேஷ்ட பிரதிப் பணிப்பாளர் ஆர்.ஜெயமனோன் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-15)

# வெள்ளைக்கொடி தீர்ப்பை எதிர்த்து பொன்சேகா இன்று மேன்முறையீடு

வெள்ளைக்கொடி விவகார வழக்கில் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவுக்கு கொழும்பு மேல்நீதிமன்றினால் வழங்கப்பட்ட தீர்ப்பை எதிர்த்து இன்று மேன்முறையீடு செய்யவுள்ளார் என சரத் பொன்சேகாவின் பாரியார் அனோமா பொன்சேகா தெரிவித்தார்.

கடந்த 21ஆம் திகதி திங்கட்கிழமை மேன்முறையீடு செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

எனினும், அதற்கான ஏற்பாடுகள் பூர்த்தியாகாத காரணத்தால் அன்றைய தினம் மேன்முறையீடு செய்யமுடியாமல் போனது என்றும் அவர் கூறினார்.

சரத் பொன்சேகாவின் சட்டத்தரணி நளின் லத்துவஹெட்டியின் ஊடாக மேற்படி மேன்முறையீடு செய்யப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார். வெள்ளைக்கொடி வழக்கின் தீர்ப்பை கொழும்பு மேல் நீதிமன்றம் கடந்த 18ஆம் திகதி அறிவித்தது.

அதன்படி, இவ்வழக்கில் குற்றவாளியாக இனங்காணப்பட்ட முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவுக்கு மூன்று வருடகால சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

அத்துடன், ஐயாயிரம் ரூபா அபராதமும் நீதிமன்றினால் விதிக்கப்பட்டதுடன், அந்த அபராதத் தொகையை செலுத்தத் தவறினால் சிறைத்தண்டனை மேலும் 6 மாதங்களுக்கு நீடிக்கப்படும் எனவும் கொழும்பு மேல்நீதிமன்றம் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பொன்சேகாவுக்கு சிகிச்சை புறக்கணிப்பு

முன்னாள் இராணுவ தளபதி சரத் பொன்சேகா நேற்றைய தினம் சிகிச்சைக்காக கொழும்பு நவலோகா வைத்தியசாலைக்கு செல்லவேண்டியிருந்த போதிலும் அதற்கான ஏற்பாடுகளை சிறைச்சாலை அதிகாரிகள் மேற்கொள்ளாத பட்சத்தில் அவருக்கான சிகிச்சைகள் புறக்கணிக்கப்பட்டுள்ளன என்று ஐக்கிய தேசிய கட்சியின் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ அத்தநாயக்கா தெரிவித்தார்.

வெலிக்கடைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சரத் பொன்சேகாவைப் பார்வையிட்டுத்திரும்பிய அவர், மேற்கண்டவாறு குறிப்பிட்டார். ஐ.தே.கவின் பிரதிப் பொதுச் செயலாளர் டாக்டர் ஜயலத் ஜயவர்தனவும் சிறைச்சாலைக்கு இவருடன் சென்றிருந்தார். முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேக்காவை மருத்துவ பரிசோதனைக்காக தனியார் வைத்தியசாலைக்கு நேற்று அழைத்துச் செல்ல வேண்டியிருந்த போதிலும் அவர் வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்படவில்லை. இதற்கு காரணம் என்னவென்று சிறைச்சாலை அதிகாரிகளிடம் வினவிய போது, நீதிமன்ற அனுமதி பெற வேண்டும் என இழுத்தடிப்பை மேற்கொண்டனர் என சரத் பொன்சேனாவின் பாரியார் அனோமா பொன்சேனா நேற்று கூறினார்.

# நிகழ்வுகள் இன்று

**மாற்று வலுவுடையோர் நிகழ்வு**

மாற்றுவலுவுடையோர் தினநிகழ்வு முற்பகல் 10 மணிக்கு ஒலுமடு தமிழ் வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் துணுக்காய் கல்வி வலயப் பாடசாலைகளில் கல்வி கற்கும் விசேட தேவையுடைய மாணவர்கள் கலை நிகழ்வுகளை நடத்தவுள்ளனர். (ம-313)

**செயலமர்வு**

ஜி.ரி.இசற். இ.எஸ்.சி நிறுவனங்களின் அனுசரணையுடன் வடமராட்சி கல்விவலயத்தினால் தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர்களுக்கான, பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பான செயலமர்வு காலை 8.30 மணிக்கு புலோலி மெ.மி.த்.க.பாடசாலையில் நடைபெறவுள்ளது. (ம-3 13)

**கருத்தரங்கு**

நீரிழிவு நோய்க்கான மாற்றமடைந்து வரும் சிகிச்சை முறை தொடர்பான கருத்தரங்கு காலை 8.30 மணிக்கு யாழ்.பொதுநூலக கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது. (ம-313)

**கலந்துரையாடல்**

யாழ்.மாவட்ட தொண்டர் ஆசிரியர்களுக்கான அவசர கலந்துரையாடல் காலை 9 மணிக்கு ஆரிய குளத்தடி புதிய உயர்கலைக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. (ம-313)

# கூடங்குளம் மின்சாரம் தமிழகத்துக்கு மட்டுமே; இலங்கைக்கு வழங்கப்படுவதற்காக அல்ல

## தமிழகக் காங்கிரஸ் தலைவர் ஞானதேசிகன் உதயனுக்கு விசேட

சென்னை, நவ.24

தமிழ்நாடு, கூடங்குளம் அணுமின் உற்பத்தி நிலையத்திலிருந்து தயாரிக்கப்படும் மின்சாரத்தில் 80 சதவீதமானவை தமிழ்நாட்டுக்கு மட்டுமே விநியோகிக்கப்படும். ஏனைய 20 சதவீதமானவை கேரளா, ஆந்திரா போன்ற தென்மாநிலங்களுக்கே வழங்கப்படும். இதுதான் உண்மை. இதற்கு மேலாக ஒன்றுமே நடக்காது.

- இவ்வாறு நேற்று 'உதயனி'டம் பரபரப்புக் கருத்துத் தெரிவித்தார் இந்திய நாடாளுமன்ற உறுப்பினரும், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் புதிய தலைவருமான பி.எஸ். ஞானதேசிகன்.

தமிழ்நாட்டின் கூடங்குளத்திலிருந்து இலங்கைக்கு மின்சாரம் வழங்கப்படவுள்ள தாகத் தெரிவிக்கப்பட்டு அதற்கு எதிராகத் தமிழகத்தில் கடும் எதிர்ப்பு நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், கூடங்குளத்திலிருந்து இலங்கைக்கு மின் விநியோகம் வழங்கும் விடயத்தில் காங்கிரஸின் நிலை என்ன என்று கேட்டபோதே ஞானதேசிகன் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

கூடங்குளம் தொடர்பில் பல தவறான அபிப்பிராயத்தை வைத்துக் கொண்டு இங்குள்ள அரசியல் கட்சிகள் செயற்படுகின்றன. உண்மை நிலைமை அதுவல்ல. இங்கே தமிழ்நாட்டில் மின்பற்றாக்குறை இருப்பது உங்களுக்கே தெரியும். எனவே, அதனை நாம் முதலில் நிவர்த்தி செய்ய வேண்டாமா?

கூடங்குள மின்னுற்பத்தியில் 80 சதவீதம் தமிழ்நாட்டின் பாவனைக்கே பயன்படப் போகிறது. ஏனைய 20 சதவீத மின்சாரத்தை தென்மாநிலங்களான கேரளா, ஆந்திராவுக்கு வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

கூடங்குளத்திலிருந்து மின் விநியோகம் வழங்கப்படுமென்று இலங்கைத் தரப்பு கூறுவதாக நீங்கள் தெரிவித்தாலும் என்னால் அதற்குப் பதிலளிக்க முடியாது. நான் கூறுவ தெல்லாம் கூடங்குள மின்னுற்பத்தி தமிழகத்திற்கே பயன்படுத்தப்படும். மீதி இருந்தாலும் அது இந்தியாவின் ஏனைய மாநிலங் களுக்கே பயன்படுத்தப்படும். இதனை உறுதியாகத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். - இவ்வாறு கூறினார் ஞானதேசிகன். (த-சி)

# சரத் என்.சில்வா மீதான விசாரணை சட்டத்தரணிகள் சங்கம் கடும் எதிர்ப்பு

கொழும்பு, நவ.24

முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வாவின் பதவிக் காலத்தில் அவரால் வழங்கப்பட்ட தீர்ப்புகள் தொடர்பில் ஆராய்வதற்கான நாடாளுமன்றக் குழுவொன்று நியமிக்கப்படுவதற்கு எதிராக அவசர கலந்துரையாடல் ஒன்றை ஏற்பாடு செய்யுமாறு இலங்கை சட்டத்தரணிகள் சங்க உறுப்பினர்கள், அதன் தலைவரிடம் கோரியுள்ளனர்.

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் 153 சட்டத்தரணிகள் கையொப்பத்துடன்இந்த கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

நாட்டினது, நீதியானதும் சுயாதீனம் கருதி நியமிகக்கப்பட்டுள்ள நாடாளுமன்றத் தெரிவுக் குழுவிற்கு எதிராக இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என அதன் உறுப்பினர்கள் கூறியுள்ளனர்.

அரசியலமைப்பின் 107ஆவது சரத்தின்படி நாடாளுமன்ற குழுவொன்றினால் பதவியிலுள்ள உயர்நீதிமன்ற நீதியரசர் ஒருவர் தொடர்பாக மாத்திரமே விசாரணைகளை மேற்கொள்ள முடியும் எனவும் சட்டத்தரணிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

எனவே நீதியரசர் ஒருவர் ஒய்வுபெற்ற பின்னர் அவரின் பதவிக்காலம் தொடர்பில் நாடாளுமன்றக் குழுவொன்று விசாரணை நடத்துவதானது தற்போதுள்ள நீதிபதிகளை பாதிக்கும் ஓர் விடயமாக அமையும் என இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

எனவே இதன் பொருட்டு நாடாளுமன்றக் குழுவொன்றும் நியமிக்கப்படுவதை தடுப்பதற்கு இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் முன்வர வேண்டும் என சட்டத்தரணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். இலங்கை சட்டத்தரணிகள் சங்க யாப்பின்படி அவசர கூட்டம் ஒன்றை கூட்டுவதற்கு சங்கத்தில் அங்கத்துவம் வகிக்கின்ற 100 சட்டத்தரணிகளின் கையொப்பத்துடன் கோரிக்கை விடுக்கப்பட வேண்டும் எனவும் இதற்காக 153 சட்டத்தரணிகள் கையொப்பமிட்டுள்ளனர் என்றும் அவர்கள் கூறியுள்ளனர். (த-சி)

# பாதுகாப்புக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து பழைய பல்லவியுடன் வரவு-செலவுத் திட்டம்

## மக்களுக்கு எதுவும் இல்லை என்கிறார் விநாயகமூர்த்தி

கொழும்பு, நவ.24

மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு ஆக்க பூர்வமான முன்மொழிவுகள் ஏதுமின்றி அடுத்த ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டமும் பாதுகாப்பு அமைச்சுக்கு அதிமுக்கியத்துவம் கொடுத்துப் பழைய பல்லவியையே பாடி நிற்கின்றது.

இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் அ.விநாயகமூர்த்தி.

வரவு-செலவுத் திட்டத்தின் மீதான இரண்டாவது நாள் விவாதம் நேற்று நாடாளுமன்றில் நடைபெற்ற போது கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவித்தமை வருமாறு.

தற்போது மக்கள் எதிர் நோக்கும் உண்மையான பிரச்சினை வாழ்க்கைச் செலவின் அதிகரிப்பே ஆகும். ஆனால் இந்த வரவு-செலவுத் திட்டத்தில் மக்களது வாழ்க்கைச் செலவினத்தைக் குறைக்கக் கூடிய ஆக்க பூர்வமான முன் மொழிவுகள், கருத்திட்டங்கள் எவையும் உள்ளடங்குவதாகத் தெரியவில்லை.

இலங்கை மின்சாரசபை, பெற்றோலியக் கூட்டுத்தாபனம், கிரிக்கெட் சபை, அரச மரக் கூட்டுத்தாபனம், ரூபவாகினிக் கூட்டுத்தாபனம், லங்கா புத்திர வங்கி, மிகின் லங்கா முதலான நிறுவனங்கள் நீண்டகாலமாக நட்டத்தில் இயங்குகின்றன. இந்த நிறுவனங்கள் மீது அரசு அக்கறை காட்டி அதைத் தனியார் துறையினரிடம் ஒப்படைத்தோ அல்லது தாமோ வினைத்திறன் மிக்கதாக மாற்ற வேண்டும்.

யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை ஒவ்வொரு நாளும் மின் வெட்டு அமுல்படுத்தப்படுகின்றது. ஒப்பந்த அடிப்படையில் சீன நிறுவனமொன்று 30 மெகா வாட்ஸ் மின்சாரத்தை வழங்க வேண்டும். ஆனால் அந்த நிறுவனம் 15 மெகா வாட்ஸ் மின்சாரத்தையே வழங்குகின்றது. இந்த நிலை மாறுவது எப்போது? இது போன்ற பிரச்சினைகளைத் தீர்ப்பதாக வரவு செலவுத் திட்டத்தில் ஏதும் இல்லை.

சுகாதாரத்துக்கும் கல்விக்கும் ஒதுக்கப்பட்ட தொகை மிகக் குறைவாவே உள்ளது. எத்தனையோ ஏழை மக்கள் 7 லட்சம் ரூபா செலவளித்து தனியார் வைத்தியசாலையில் இருதய அறுவைச் சிகிச்சை செய்ய முடியாத நிலையில் உள்ளனர். பொது வைத்தியசாலைகளில் ஏழை மக்கள் எல்லாவகையான சிகிச்சைகளையும் பெற ஏற்பாடுகள் செய்யவேண்டும்.

யுத்த நடவடிக்கைகளால் பாடசாலைகள் பல சேதமாக்கப்பட்டுள்ளன. அழிவடைந்தவை மீண்டும் கட்டி எழுப்பப்பட வேண்டும்.

இடம்பெயர்ந்தவர்களில் 95வீதமானோர் மீள் குடியமர்த்தப்பட்டுள்ளனர் என அரசு அறிவித்துள்ளது. ஆனால் உண்மை அதுவல்ல. அண்மையில் ஐ.நா. சபை வெளியிட்ட மீள்குடியேற்ற அறிக்கையில் 117,888 பேர் இன்னமும் நிரந்தரமாக குடியேற்றப்படவில்லை. முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய இடங்களில் இந்த மக்கள் தற்காலிகமாகவே தங்கியுள்ளனர்.

இது போன்று வடக்கில் மக்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கி வரும் நிலையில் அரசு தேவையற்ற வகையில் சாக்குப் போக்குச் சொல்லிப் பாதுகாப்புச் செலவினங்களுக்கே இந்த வரவு செலவுத் திட்டத்தில் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது-என்று கூறினார் விநாயகமூர்த்தி எம்.பி.

(த-10)

# இனப்பிரச்சினைத் தீர்வு, தமிழ்க் கைதிகள் விவகாரம்; இவற்றையும் தேசிய எதிர்ப்பில் சேர்த்துக் கொள்க!

## ஐ.தே.க. அழைப்புக்கு மனோ கணேசன் பதில்

கொழும்பு, நவ.24

கொழும்பில் எதிர்வரும் 29 ஆம் திகதி ஐ.தே.க. நடத்தவுள்ள தேசிய எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் நீண்டகாலமாக இழுத்தடிக்கப்படும் இனப்பிரச்சினை, நீண்டகாலமாக தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ்க் கைதிகள் விடயங்களும் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும். அவ்வாறாயின் நாமும் இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்கிறோம்.

- இவ்வாறு ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிடம் தெரிவித்துள்ளார் என ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தின் அங்குரார்ப்பணம் தொடர்பில் கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றிய போதே மனோ கணேசன் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் அவர் கூறியவை வருமாறு -

வரவு - செலவு திட்டம், நஷ்டமடைந்த நிறுவனங்களைப் பறிமுதல் செய்யும் சட்டம் மற்றும் சரத் பொன்சேகா மீதான பழிவாங்கல் ஆகிய மூன்று விடயங்களை முன்னிறுத்தி ஐ.தே.க. எதிர்வரும் 29 ஆம் திகதி தேசிய எதிர்ப்பு தினத்தை அனுஷ்டிக்கப்போவதாக அறிவித்துள்ளது. இதில் எமது கட்சியையும் கலந்துகொள்ளுமாறு ஐ.தே.கவின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க எமக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

ஆனால், இந்த எதிர்ப்பில் தமிழ் பேசும் மக்கள் சம்மந்தப்பட்ட விடயங்களும் இணைத்துக் கொள்ளப்பட்டால்தான் அது உண்மையான தேசிய எதிர்ப்பாக இருக்கும். எமது மக்களின் பிரச்சினைகளை மறந்து அல்லது புறந்தள்ளி விட்டு நடத்தப்படும் ஆர்ப்பாட்டங்களில் தலைகாட்டிக்கலந்து கொள்ள எனக்கும், எமது கட்சிக்கும் முடியாது.

கொழும்பிலே நடத்தப்படும் ஆர்ப்பாட்டங்களில் தமிழ் மக்களும் கலந்துகொள்வதற்கான நியாயமான காரணங்கள் இருக்க வேண்டும். இதில் கொழும்பிலே தமிழ் மக்களின் பெரும்பான்மையான வாக்குகளை பெற்றுள்ள தமிழர்களின் தலைமைக் கட்சி என்ற முறையில் நாங்கள் இதில் கவனம் செலுத்துகின்றோம்.- என்றார். (த-சி)

# பொலிஸாரின் 3ஆவது குழந்தை பிறந்து 18 வருடங்களின் பின்பே 1 இலட்சம் ரூபா

## சபையில் ஐ.தே.க. கிண்டல்

கொழும்பு, நவ.24

பொலிஸ் உத்தியோகத்தரின் மூன்றாவது குழந்தைக்கு ஒரு லட்சம் ரூபா கொடுப்பனவாக வழங்கப்படும் என்று வரவு - செலவுத்திட்டத்தில் கூறப்பட்டுள்ள போதிலும் குழந்தை பிறந்து 18 வருடங்கள் கழிந்த பின்னரே அந்தப் பணம் வழங்கப்படும் என்று ஐ.தே.க. பொதுச் செயலாளரும் எம்.பியுமான திஸ்ஸ அத்தநாயக்க நேற்று நாடாளுமன்றில் கூறினார்.

வரவு - செலவுத்திட்ட விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் மேலும் கூறியவை வருமாறு:-

சர்வதேச நாணய நிதியத்திற்கு அடிபணிந்தே இந்த வரவு - செலவுத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. இதில் நாட்டு மக்களுக்கு எந்தவொரு நிவாரணமும் இல்லை.

அரச ஊழியர்களுக்கு 2,500 ரூபா சம்பள அதிகரிப்பு வழங்கப்படும் என்று ஜனாதிபதி 2010இல் கூறினார். 2011 இல் அது வழங்கப்படவில்லை. 2012 இலும் அது வழங்கப்படவில்லை.

மாறாக அடிப்படைச் சம்பளத்துடன் சம்பள அதிகரிப்பைச் சேர்க்காது கொடுப்பனவாக அரசு சேர்த்துள்ளது. இதனால் அரச ஊழியர்கள் ஏமாற்றப்பட்டுள்ளனர்.

தனியார் ஊழியர்கள் பற்றி இந்த வரவு - செலவுத் திட்டத்தில் எதுவும் சொல்லப்படவில்லை. அவர்களின் சம்பளத்தை அரசால் அதிகரிக்க முடியாது. ஆனால், அவர்களின் சம்பளத்தை அதிகரிக்குமாறு தனியார் நிறுவன உரிமையாளர்களிடம் கோரியிருக்க வேண்டும். அவ்வாறு செய்யாதது கவலைக்குரிய விடயம்.

ஜனாதிபதியின் வரவு - செலவுத் திட்ட உரையைத் தொடர்ந்து 110 ரூபாவாக இருந்த ஒரு டொலரின் பெறுமதி 113 மற்றும் 114 ரூபாவாக உயர்ந்துள்ளது.

இந்நாட்டுப் பிரஜைகள் ஒவ்வொருவரும் 400 ரூபா கடனாளியாக உள்ளனர். நாட்டின் வறுமை 8.6 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. வருமானம் குறைந்துள்ளது. தனிநபர் நாளாந்த வருமானம் 218 ரூபாவாகவுள்ளது எனப் புள்ளிவிவரவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பொலிஸ் உத்தியோகத்தரின் மூன்றாவது குழந்தைக்கு ஒரு லட்சம் ரூபா கொடுப்பனவு வழங்கப்படும் என்று வரவு - செலவுத் திட்டம் கூறுகின்றது. உண்மையில் குழந்தை பிறந்து 18 வருடங்களின் பின்புதான் இந்தக் கொடுப்பனவு வழங்கப்படும்.

இந்த வாக்குறுதிகள் அனைத்தும் கேட்பதற்கு நன்றாக இருக்கும். இவை அனைத்தும் வெறும் கற்பனை மாத்திரம்தான் என்றார் அவர். (த-சி)

## மனதில் நிறைந்திருப்பவர்...



சான்றோனுக்கு கௌரவம்: வவுனியா பிரதேச செயலகமும் பிரதேச கலாசாரப் பேரவையும் இணைந்து நடத்திய பிரதேச கலை, இலக்கியப் பெருவிழா நகரசபை கலாசார மண்டபத்தில் இடம்பெற்றபோது பிரதேச செயலகத்தால் நகரசபைக்கு வழங்கப்பட்ட தகைசார் பேராசிரியர் கா.சிவத்தம்பியின் திருவுருவப்படத்தை வவுனியா மாவட்ட மேல் நீதிமன்ற நீதிபதி ஜெ.விஸ்வநாதனிடம் இருந்து நகர சபையின் உப - தலைவர் எம்.எம்.ரதன் பெற்றுக் கொள்வதைப் படத்தில் காணலாம்.

## சுய தொழில் உதவிக்கான கூட்டம்

வவுனியா, நவ.24

வவுனியா மாவட்டம் செட்டிகுளம் பிரதேசத்தில் உள்ள நேரியகுளம் பகுதி மகளிருக்குச் சுயதொழில் தொடர்பான கூட்டம் ஒன்று நடத்தப்படவுள்ளது.

எதிர்வரும் 26 ஆம் திகதி நேரியகுளம் பொது நோக்கு மண்டபத்தில் இந்தக் கூட்டம் நடைபெறவுள்ளது. இதில் மகளிரைச் சுயதொழிலில் ஈடுபடுவதற்கு ஊக்குவிக்கும் வகையில் உதவிகள் வழங்குவது தொடர்பாக ஆராயப்படவுள்ளது.

எனவே நேரியகுளத்தைச் சேர்ந்த மகளிர் இந்தக் கூட்டத்தில் பங்குபற்ற வேண்டுமென நேரியகுளம் கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் கேட்டுக் கொண்டுள்ளனர். (க-421)

## சிவில் பாதுகாப்புக் குழுக்களை நிறுவி மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு

### கிளிநொச்சி மக்கள் தொடர்பாடல் அதிகாரி கூறுகிறார்



கிளிநொச்சி, நவ.24

கிராமங்கள் தோறும் சிவில் பாதுகாப்புக் குழுக்களை நிறுவி அதன் மூலம் மக்கள் மத்தியில் ஏற்படுகின்ற பிரச்சினைகளை இலகுவான முறையில் தீர்ப்பதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இவ்வாறு கிளிநொச்சி மாவட்ட மக்கள் தொடர்பாடல் அதிகாரி எம்.எல். அரிப்டீன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் பலவிதமான பிரச்சினைகள் காணப்பட்டன. இவற்றை இலகுவான முறையில் தீர்க்க வேண்டியிருந்தது. இந்த நிலையில் கிராமங்கள் தோறும் சிவில் பாதுகாப்புக் குழுக்களை நிறுவி அதன் மூலம் கிராம மட்டங்களில் ஏற்படுகின்ற பிரச்சினைகளைக் கிராமத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்டே தீர்ப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

குறிப்பாகப் பெண்கள், குழந்தைகளைப் பாதுகாக்கவும் அவர்களது உரிமைகளைப் பெற்றுக் கொள்வதற்கான வழிவகைகளைச் செய்யும் பொருட்டும் மக்கள் தொடர்பாடல் பிரிவு கிளிநொச்சியில் திறந்து வைக்கப்பட்டுள்ளது. அதன் மூலம் பல்வேறு பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான வழி வகைகள் ஏற்படுத்தித் தரப்படும் என அவர் மேலும் தெரி வித்துள்ளார். (க-6)

## குஞ்சுக்குளம் முற்றாக உவரடைந்ததால் வறுமையில் உழலும் அந்தக் கிராம மக்கள்

அக்கராயன், நவ.24

கிளிநொச்சி மாவட்டம் வன்னேரிக்குளத்தின் குஞ்சுக்குளம் கிராமம் முழுமையாக உவரடைந்திருப்பதன் காரணமாக இங்கு வாழும் மக்கள் வறுமையில் வாடும் அவலம் தொடர்கிறது.

இந்தக் கிராமத்தின் வயல் நிலங்கள் முழுமையாக உவரடைந்திருப்பதன் காரணமாகப் பல ஆண்டுகளாக நெற் செய்கையில் இந்தக் கிராம மக்கள் ஈடுபடுவதில்லை. வயல் நிலங்களுக்குப் பதிலாக மாற்றுக் காணிகளும் வழங்கப்படவில்லை. கிராமம் உவரடைந்ததன் காரணமாக இங்குள்ள மக்கள் இடம் பெயர்ந்து பிற இடங்களில் குடியேறி வரும் நிலை காணப்படுகின்றது.

மேலும் குஞ்சுக்குளம் கிராமத்தில் வாழ்கின்ற 25 குடும்பங்கள் அரச உதவிகளை எதிர்பார்த்துள்ளன. அத்துடன் தமக்குப் பயிர்ச்செய்கைக்கான நிலத்தை வழங்குமாறும் வேண்டியுள்ளன.

வன்னேரிக்குளத்தையும் தேவன்கட்டையும் இணைப்பதன் மூலம் பெருமளவு நிலப் பரப்பில் நெற்செய்கை மேற்கொள்ள முடியும். இதன்போது குஞ்சுக்குளம் கிராம மக்களுக்கும் நெற்செய்கைக்கான நிலங்களை வழங்க முடியும்.

வன்னேரிக்குளத்தின் தற்போதைய நிலவரப்படி 375 ஏக்கர் நிலப்பரப்பில் நெற்செய்கை மேற்கொள்ளப்படுவதாக விவசாயிகளால் தெரிவிக்கப்படுகிறது. (க-410)

## ஏற்றுமதிக்கான பயிர்ச்செய்கை

நெடுங்கேணிப் பிரதேசத்திலுள்ள ஒலுமடு கிராமசேவகர் பிரிவில் ஏற்றுமதி இலக்கைக் கொண்ட பயிர்ச் செய்கையை ஊக்குவிக்கும் செயற்பாடுகள் இடம்பெற்றுள்ளன. கெயார் நிறுவனத்தின் உதவியுடன் ஹேலீஸ் நிறுவனத்தின் ஏற்றுமதிப் பிரிவு இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இதன் முதற் கட்டமாக 40 பயனாளிகள் தெரிவுசெய்யப்பட்டு அவர்களுடன் மிளகாய்ச் செய்கை தொடர்பாகவும் கெக்கரிச் செய்கை தொடர்பாகவும் கலந்துரையாடல்கள் நடைபெற்றுள்ளன. இந்தக் கலந்துரையாடல்கள் கடந்த 18 ஆம் திகதி ஒலுமடு சிறுவர் முன்பள்ளியில் நடைபெற்றன.

மேலும் இந்தப் பயிர்ச்செய்கைக்கு உரவகைகளும்,விதைகளும் கடனடிப்படையில் வழங்குவதாகவும் உறுதி வழங்கப்பட்டது.(க-435)

# 3ஆயிரத்து 643 குடும்பங்கள் மீள்குடியமர்வு

### துணுக்காய் பிரதேச செயலர் உதயனுக்குத் தெரிவிப்பு



துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் மூவாயிரத்து 643 குடும்பங்கள் மீளக்குடியமர்ந்துள்ளதாகத் துணுக்காய் பிரதேச செயலர் சி.குணபாலன் தெரிவித்துள்ளார்.

துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் மீள்குடியமர்வு நடைபெற்று இரண்டாண்டுகள் நிறைவடையும் நிலையில் இது தொடர்பாக அவர் உதயனுக்கு விரிவான தகவல்களை வழங்கினார்.

அவர் கூறியவை வருமாறு:

**வீட்டுத் தேவைகள்**

துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் 100 விழுக்காடு மீள்குடியமர்வு நடைபெற்றுள்ளது. மூவாயிரத்து 643 குடும்பங்கள் மீளக்குடியமர்ந்துள்ளன. இவர்களின் வீட்டுத் தேவைகள் என்று பார்க்கின்றபோது 635 வீடுகள் பல்வேறு தரப்பினராலும் வழங்கப்பட்டுள்ளன. இவற்றில் யூ.என் கபினற்றால் வழங்கப்பட்டுள்ள 240 வீடுகளுக்கான கொடுப்பனவுகள் வழங் கப்பட்டு வேலைகள் நடைபெற்று வருகின்றன. ஏனைய 110 வீடுகளுக்கும் எதிர்வரும் மாதங்களில் வேலைகள் இடம்பெறவுள்ளன. 460 வீடுகள் புனரமைக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளன. இதனால் சுமார் ஆயிரம் பேருக்கான வீட்டுத் தேவைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. ஏனையவர்களுக்கான வீட்டுத் தேவைகள் எதிர்காலத்தில் நிறைவு செய்யப்படவுள்ளன. அதுமட்டுமன்றி இந்திய உதவித் திட்டங்களின் கீழ் வீடுகளை வழங்குவதற்கான தகவல்களைச் சேகரித்து வருகின்றோம்.

**ஆரோக்கியபுரம்**

ஆரோக்கியபுரம் மக்களுக்கு நிரந்தர வீடுகள் வழங்கப்படவில்லையென்பது தவறான செய்தியாகும். ஆரோக்கியபுரம் கிராமத்தைப் பொறுத்தவரையில் 25 வீடுகள் வழங்கப்பட்டுள்ளன. கிராமத்தில் வாழ்கின்ற 53 வரையான குடும்பங்களுக்கு 25 வீடுகளை வழங்கியுள்ளோம்.

வீட்டு வேலைகள் தற்போது தான் தொடங்கியுள்ளன. இதே போன்று புத்துவெட்டுவான் கிராமத்துக்கும் 26 வீடுகள் வழங்கப்பட்டுள்ளன. அத்துடன் அமைதிபுரம் கிராமத்தில் 24 வீடுகள், தேறாங்கண்டலில் 50 வீடுகள், ஆலங்குளத்தில் 28 வீடுகள், அம்பலப்பெருமாள்குளத்தில் 29 வீடுகள், தென்னியங்குளத்தில் 30 வீடுகள், பழைய முறிகண்டியில் 27 வீடுகள், ஐயன்கன்குளத்தில் 25 வீடுகள், கோட்டைகட்டிய குளத்தில் 17 வீடுகள், மல்லாவியில் 14 வீடுகள், யோகபுரம் மத்தியில் 11 வீடுகள், யோகபுரம் மேற்கில் 10 வீடுகள், கல்விளானில் 27 வீடுகள் என வழங்கியுள்ளோம்.

கிராமங்களுக்கு நிறையவே வீடுகள் வழங்கியுள்ளோம். நகர்ப்புறத்தைப் பொறுத்தவரையில் குறைந்த வீடுகளை ஒதுக்கியுள்ளோம். இந்திய வீட்டுத் திட்டத்தில் நகர்ப்புற வீடுகளை நிறைவு செய்யக் காத்திருக்கிறோம்.

**வாழ்வாதார உதவிகள்**

வாழ்வாதார உதவிகளைப் பொறுத்தவரையில் 944 குடும்பங்கள்தான் இதிலிருந்து விடுபட்டுள்ளன. ஏனைய குடும்பங்களைப் பொறுத்தவரையில் குறைந்தது 35 ஆயிரம் ரூபா பெறுமதியான வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. நீர் இறைக்கும் இயந்திரங்கள், மாடுகள், ஐ.ஒ.எம். நிறுவனத்தால் 180 பேருக்கு வழங்கப்பட்டுள்ளன. இதுமட்டுமன்றி சமூக சேவைகள் திணைக்களத்தால் பல உதவித் திட்டங்கள் வழங்கப்பட்டுள்ளன. குறிப்பாக மாற்று வலுவுள்ளோருக்கான 3 ஆயிரம் ரூபா கொடுப்பனவுகள் மாதம் தோறும் 48 பேருக்கு வழங்கப்பட்டுவருகின்றன. சுய தொழில் கடன்கள் தலா 50 ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்பட்டு வருகின்றன. மேலும் மீள்குடிய மர்ந்த மக்களுக்குப் பல்வேறு வகையான வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

**வீதிகள்**

வீதி அபிவிருத்திகளைப் பொறுத்தவரையிலும் பிரதான வீதிகள் ஒப்பந்தகாரரிடம் கையளிக்கப்பட்டுள்ளன. மாங்குளம்-வெள்ளாங்குளம் வீதி ஒரு பிரதான வீதியாகும். இது ஒப்பந்தகாரரிடம் கையளிக்கப் பட்டுள்ளது. கொக்காவில் - மல்லாவி வீதியும் தென்னியங்குளம் -துணுக்காய் வீதி என்பனவும் கையளிக்கப்பட்டுள்ளன. ஜனவரியில் இந்த வீதிகளின் வேலைகள் தொடங்கவுள்ளன.

**எல்லை நிர்ணயம்**

துணுக்காயைப் பொறுத்தவரையில் நான்கு கிராமங்களைக் குறைப்பதென்று முடிவுகள் எடுக்கப்பட்ட போதிலும் கிராமங்களின் பரப்பளவு, மக்களின் தேவைகள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு ஒரே ஒரு கிராமம் மட்டுமே இணைக்கப் படுகிறது. திருநகர், யோகபுரம் மேற்கு ஆகிய கிராமங்களை இணைப்பதோடு ஏனைய கிராமங்கள் பழைய மாதிரியே இருக்கும். இருபதாக இருந்த கிராம அலுவலகப் பிரிவுகள் 19 ஆக மாற்றப்படுவதற்கான திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

துணுக்காய், மாந்தை கிழக்கு ஆகிய இரண்டு பிரதேச செயலர் பிரிவுகளையும் இணைக்கும் திட்டம் வரையப்பட்டிருந்த போதிலும் இரண்டையும் இணைப்பதில்லை என்ற உறுதி மொழி வழங்கப்பட்டுள்ளது. இரண்டும் தனித்தனியாக இயங்கும்.

**குளங்கள்**

துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் 19 குளங்கள் உள்ளன. 19 குளங்களின் புனரமைப்பு வேலைகள் இடம்பெறுகின்றன. வவுனிக்குளத்தில் 584 மில்லியன் ரூபா பெறுமதியான வேலைகள் இடம்பெறுகின்றன. தென்னியங்குளம் திட்டத்தின் கீழ் வேலைகள் நிறைவடைந்துள்ளன. அம்பலப்பெருமாள் குளத்தின் திருத்த வேலைகள் இடம்பெறுகின்றன. மருதங்குளத்தில் கெயர் திட்டத்தின் கீழ் வேலைகள் இடம்பெறு கின்றன. தேறாங்கண்டல் குளத்தில் 77 மில்லியன் செலவில் திருத்த வேலைகள் இடம்பெறுகின்றன.

.குளங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதனால் இனிவரும் காலங்களில் விவசாயத்தை அதிகளவில் மேற்கொள்ள முடியும்.

**கல்வி**

துணுக்காய்க் கோட்டத்தில் 19 பாடசாலைகள் உள்ளன. பாடசாலைகளில் சில குறைபாடுகள் உள்ளன. ஆசிரியர்கள் பணிக்கு நியமிக்கப்பட்ட போதும் பணிகளைப் பொறுப்பேற்காத நிலை காணப்படுகின்றது. ஆசிரியர் பற்றாக்குறை காணப்படுகின்றது.

ஐயன்கன்குளம், கோட்டைகட்டியகுளம் பாடசாலைகளில் கணித ஆசிரியர்கள் இல்லை. ஏனைய பாடங்களில் சிறந்த பெறுபேறுகளைப் பெறும் மாணவர்கள் கணித பாடத்தில் சித்தியடையாத நிலையுள்ளது. ஆசிரியர்களும் விடுதிப் பிரச்சினைகளைக் கூறுகிறார்கள்.

எதிர் காலத்தில் வலயக் கல்விப் பணிமனையுடன் இணைத்து பின்தங்கிய பாடசாலைகளில் விடுதிகள் அமைக்கவுள்ளோம்- என்றார் குணபாலன்.

(க-410)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# கூட்டமைப்பை நோக்கி அக்கினிப் பரீட்சை வருகிறது!

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் இறுதி அறிக்கை ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டு மூன்று நாள்களில் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான நாடாளுமன்றத் தெரிவுக் குழு பற்றிய அறிவிப்பும் அதிரடியாக வெளிவந்துவிட்டது.

போர்க் குற்றச்சாட்டு விசாரணைகள், இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு என்று இலங்கை மீது சர்வதேச அழுத்தங்கள் அதிகரித்து வரும் இன்றைய சூழ்நிலையில், அரசு மிகுந்த தந்திரமாக காய் நகர்த்தி வருவது தெரிகிறது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இத் தருணத்தில் மிகுந்த புத்திசாலித்தனமாகவும் ஆழ்ந்த தூரநோக்குடனும் செயற்படுவதன் மூலமே நெருக்கடிகளை எதிர்கொள்ள முடியும்.

அரசுக்கும் கூட்டமைப்புக்கும் இடையிலான பேச்சுக்களில் எட்டப்படும் முடிவுகளை நாடாளுமன்றத் தெரிவுக்குழுவிடம் உடனுக்குடன் பரிசீலனைக்குச் சமர்ப்பிப்பது. தெரிவுக்குழு இறுதியாக ஒரு தீர்வுத் திட்டத்தைத் தயாரித்து நாடாளுமன்றத்தின் அங்கீகாரத்துக்காக சமர்ப்பிப்பது. இவையே அரசு இறுதியாக அறிவித்துள்ள இனப்பிரச்சினைக்கான தீர்வு முயற்சி. நாடாளுமன்றம் அங்கீகரிக்கும் தீர்வு யோசனை எதனையும் தாம் செயற்படுத்தத் தயார் என்று ஜனாதிபதி ஏற்கனவே அறிவித்துவிட்டார்.

தெரிவுக்குழுவில் மக்கள் பிரதிநிதிகள் 31 பேர் இடம்பெறுவர் என்பதும் சபாநாயகர் அதன் தலைவரை நியமிப்பார் என்பதும் தெரிவுக்குழு அமைப்பதற்கான நாடாளுமன்ற முன்னறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. தெரிவுக்குழு ஆறு மாத காலத்தில் தனது இறுதி அறிக்கையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கும் என்பதும் அறிவிப்பு.

கூட்டமைப்புக்கும் அரச தரப்புக்கும் இடையிலான பேச்சுகள் தொடங்கி ஒரு வருடமாகப் போகின்றன. பல ஏமாற்றங்கள், பகிரங்கக் குற்றச்சாட்டுக்களின் பின்னரே என்னென்ன விடயங்கள் குறித்துப் பேசுவது என்று மிகுந்த கால தாமதத்துடன் தற்பொழுது இனம்காணப்பட்டுள்ளது. பேசும் விடயங்களை இனம் காண்பதற்கே ஒரு வருடம் கழிந்துவிட்டது. ஆறு மாத காலத்தில் இறுதித் தீர்வை தயாரிப்பது சாத்தியப்படுமா?

தற்பொழுது நடைபெறும் பேச்சுகள், அரசுக்கும் கூட்டமைப்புக்கும் இடையிலானவை அல்லவாம். சுதந்திரக் கட்சிக்கும் கூட்டமைப்புக்கும் இடையிலேயே பேச்சு நடைபெறுகிறது என்பதே அரசின் நிலைப்பாடு.

பெரும்பான்மை சிங்கள மக்களின் ஆதரவுடனேயே இனப்பிரச்சினைக்குத் தீர்வு என்று அரசு கூறிவருகிறது. கூட்டமைப்பிடமிருந்து பல விட்டுக்கொடுப்புக்களை அரசு எதிர்பார்க்கும். அதனாலேயே கூட்டமைப்பு புத்திசாலித்தனமாகச் செயற்படவேண்டிய அவசியத்தை நாம் ஆரம்பத்திலேயே வலியுறுத்தினோம்.

இந்தப் பேச்சுகளில் எட்டப்படும் முடிவுகளை தெரிவுக்குழு அப்படியே ஏற்கும் என்று கூறமுடியாது. அங்கேயும் மிகப்பல வெட்டுக்கொத்துக்களுடன் இறுதித்தீர்வு தயாரிக்கப்பட்டு நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்போது தமிழ் மக்களுக்கு ஏமாற்றம்தான் மிஞ்சும். தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளைப் பூர்த்திசெய்யக்கூடிய அம்சங்கள் எதுவுமே இல்லாத நிலையில்தான் என்ன செய்வது என்ற உகந்த வியூகத்தை கூட்டமைப்பு இப்போதே வடிவமைப்பது புத்திசாலித்தனம்.

தமிழ் மக்களின் பிரச்சினையில் அரசு இணக்கம் தெரிவித்த எதனையும் அமுல் செய்தது கிடையாது. தமிழ் அரசியல் தலைவர்கள் அனைவரும் தொடர்ந்து ஏமாற்றப்பட்டே வந்துள்ளார்கள். தமிழினம் மிகவும் பலவீனமான நிலையில் இருந்துகொண்டு மிகவும் பலமான, தந்திரமுள்ள அரசுடன் பேச்சு நடத்தி வருகிறோம் என்பதனை மறந்துவிடலாகாது.

பெரும்பான்மை சிங்கள மக்களின் ஆதரவுடன் ஆட்சிக்கு வந்த இந்த அரசு கடைசிவரை சிங்கள மக்கள் எதிர்க்கும் ஒரு தீர்வைக் கொண்டுவரப் போவதில்லை. தமிழ் மக்களுக்குச் சேரவேண்டிய உரிமைகள் வழங்கப்படக்கூடாது என்ற நிலைப்பாட்டில் இருந்து தென்னிலங்கை இம்மியளவும் நகரவில்லை. இனியும் நகரப்போவதில்லை. இவை எல்லாம் தெரிந்தும், அரசுடன் பேச்சு நடத்த வேண்டிய கட்டாய நிலைமையை கூட்டமைப்பு தவிர்க்கமுடியாது என்பதும் வாஸ்தவம் தான்.

''இங்கு வாழும் அனைத்து இன மக்களும் தத்தமது தனித்துவத்தையும் பாதுகாப்பையும் மேம்படுத்தவும், கண்ணியமாகவும் பாதுகாப்பாகவும் ஒரே தேச மக்களாய் வாழவும் ஏற்ற சூழ்நிலையை அரசமைப்பு மூலம் உறுதிப்படுத்துவதற்கான விடயங்களை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதே நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் நோக்கம்'' - என்று தெரிவுக்குழு அமைப்பதற்கான முன்னறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கான அறிக்கையைச் சமர்ப்பிப்பதற்கு என்ற வாசகம் தவிர்க்கப்பட்டதன் காரணமே அரசுக்குள் இனவாதிகள் செலுத்தும் ஆதிக்கம்தான். ஆகவே, கூட்டமைப்புக்கு இது பெரும் சோதனைக் காலமாக மாறும். எதற்கும் கடந்த தேர்தலில் தமிழ்த் தேசியத்துக்கே மக்கள் வாக்களித்தனர் என்பதைக் கூட்டமைப்புத் தலைவர்கள் மறந்துவிடக்கூடாது என்பதனை ஆணித்தரமாக, அழுத்திக் கூற விரும்புகிறோம்.**

# 'நீதிவாரம்' 26 ஆம் திகதி ஆரம்பமாகும்

## சட்டத்தரணிகள் சங்கம் தகவல்

கொழும்பு, நவ.24

இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் வருடாவருடம் நடத்தும் நீதிவாரம் இம்முறை நவம்பர் 26 ஆம் திகதி ஆரம்பித்து ஒருவார காலத்துக்கு நீடிக்கும் எனவும், இந்நிகழ்வு கொழும்பு 'ஹல்ஸ்டோர்ப் நீதிமன்றக் கட்டடத் தொகுதியில் நடக்கும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

நீதிமன்றத் தொகுதியிலுள்ள அனுபவம் வாய்ந்த சட்டத்தரணிகளிடம் இந்த நீதி வாரம் முழுவதும் இலவச சட்ட ஆலோசனைகளைப் பொதுமக்கள் பெறமுடியும் என இலங்கை சட்டத்தரணி மகிந்த லொக்குகே தெரிவித்தார்.

தினமும் காலை 9.00 மணி முதல் மாலை ஐந்துமணிவரை நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் தொழில், காணி, விவகாரத்து, ஜீவனாம்சம், ஊழியர் சேமலாப நிதியம், குற்றங்கள், வங்கி, அடிப்படை மனித உரிமைகள் போன்ற விவகாரங்கள் சம்பந்தமாக இலவச சட்ட ஆலோசனைகளைப் பெற முடியும்.

நீதிவாரம் சம்பந்தமான மேலதிக விவரங்களுக்கு 0727 660 660 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளலாம் என லொக்குகே மேலும் தெரிவித்தார்.

(சி)

# சேமலாப நிதிய அங்கத்தவர்களின் கைவிரல் அடையாளங்கள் பதிவு

## கரைச்சியில் டிசெம்பர் முதலாம் திகதி

யாழ்ப்பாணம்,நவ.24

ஊழியர் சேமலாப நிதித் திட்டத்தில் உள்ளடங்குகின்ற அங்கத்தவர்களின் கைவிரல் அடையாளங்களைப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கை அடுத்த மாதம் முதலாம் திகதி இடம்பெறவுள்ளது.

கரைச்சிப் பிரதேச செயலக பொது மாநாட்டு மண்டபத்தில் இதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக கிளிநொச்சி தொழில் அலுவலக சிரேஷ்ட தொழில் உத்தியோகத்தர் கே.பிரசன்னா அறிவித்துள்ளார்.

அங்கத்தவர்கள் கைவிரல் அடையாளங்களை வழங்க வரும் போது தேசிய அடையாள அட்டை, தொழில் தருநரால் உறுதிப்படுத்தி வழங்கப்பட்ட கடிதம் ஆகியவற்றை எடுத்து வர வேண்டும்.

ஊழியர் சேமலாப நிதித் திட்டத்தில் இணைந்துள்ளவர்கள் தமது கைவிரல் அடையாளங்களைப் பதிவு செய்வதற்காகக் குறித்த தினங்களில் தொழில் தருநர்கள் அவர்களுக்கு விசேட விடுமுறை வழங்கி ஒத்துழைக்க வேண்டும்.

ஊழியர் சேமலாப நிதி மீளளித்தல் செயற்பாட்டை இலகுபடுத்தவும் ஊழியர் சேமலாபநிதி மீளளிப்பில் மோசடிகள் இடம்பெறுவதைத் தவிர்க்கும் வகையிலும் இந்தக் கைவிரல் அடையாளம் பெறப்படுவதாக சிரேஷ்ட தொழில் உத்தியோகத்தர் தெரிவித்தார். (ம-14)

# திண்ணபுரம் அந்தாதி நூல் அறிமுகம்

காரைநகர், நவ.24

காரைநகர் கார்த்திகேயப் புலவர் யாத்த திண்ணபுரம் அந்தாதி நூல் அறிமுகவிழா எதிர்வரும் 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொழும்பு தமிழ்ச் சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் கொழும்பு தமிழ் சங்கத் தலைவர் மு.கதிர்காமநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத் தலைவரும் அதிபருமான கலாநிதி ஆறு. திருமுருகன் பிரதம விருந்தினராகவும் தென்கிழக்குப் பல்கலைக்கழக மொழித்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் க.இரகுபரன் சிறப்பு விருந்தினராகவும், அருள்மொழி அரசி வசந்தா வைத்தியநாதன் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்வர்.

காரைநகர் கலாநிதி சிவஸ்ரீ க. வைத்தீஸ்வரக் குருக்களின் ஏற்பாட்டில் கனடா சைவ சித்தாந்த மன்றத்தால் வெளியிடப்பட்ட திண்ணபுர அந்தாதி என்னும் இந் நூல் காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தில் கோயில் கொண்டெழுந்தருளி உள்ள இறைவன், இறைவியையும், ஊர் சிறப்பையும் எடுத்து விளக்கும் நூலாகும்.

(ம-250)

## மனித குணங்களில் தெய்வீகம் பிரதிபலிக்கவேண்டும்

மிருக குணங்களைத் தவிர்த்து தெய்வீக குணங்களை வளர்த்துக் கொள்ளுங்கள். மனிதர்களில் இரண்டு வகையினர் உண்டு. மிருக மனித குணங்கள் நிறைந்தவர். இவர்களிடம் எப்போதும் வெறுப்பு, கோபம், பொறாமை, பேராசை போன்ற உணர்வுகள் வெளிப்பட்டுக் கொண்டேயிருக்கும். மனித மற்றும் தெய்வீக குணநலன்களை தன்னகத்தே கொண்டவர்கள். இவர்கள் எப்போதும் மகிழ்ச்சியாகவும், அமைதியாகவும், அன்பு நிறைந்தும் காணப்படுவார்கள். எப்போதும் உண்மைக்குப் பக்கத்திலேயே இருப்பார்கள். இத்தகைய குணங்கள் இன்றி எந்த ஒரு ஆன்மீகச் சாதனைகள் செய்தும் பயனில்லை.

*(நன்றி: தெய்வீகம் மலரும் பொழுது)*



**சாயி சிந்தனை**

**நாளை**

*கார்த்திகை 09, வெள்ளிக்கிழமை 25.11.2011*

*திதி: அமாவாசை பிற்பகல் 12.35 வரை*

*நட்சத்திரம்: அனுசம் பி.ப.2.43 வரை*

*சுபநேரம்: 6.12-7.42 வரை, ராகு காலம்:10.42-12.12 வரை*

# ஜீரணிக்க முடியாத நிலையில் யாழ். பொது நூலகச் சூழல்

கொழும்புத்துறை, நவ. 24

யாழ்.நகர் அழகான பகுதியாகவும் வரலாற்று சின்னங்கள், அமைவிடங்களைக் கொண்டதாகவும் விளங்கிய யாழ். பொது நூலகச் சூழல் அலங்கோலமாகக் காணப்படுவதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

புல்லுக்குளத்துக்கு வந்து சேரும் கழிவு நீரைக் கடலுக்குத் திருப்ப அமைக்கப்பட்ட நிலக்கீழ் கால்வாய் மூடும் பணிகள் சீராக இடம்பெறாமை, புல்லுக்குளத்தை ஆழமாக்க அகழ்ந்து எடுக்கப்பட்ட சேறும் கழிவுகளும் கலந்த சகதியைத் திறந்த வெளியரங்க வளாகத்தில் நிரப்பியுள்ளமை இந்தப் பகுதிகளை திரும்பிக்கூட பார்க்க முடியாத நிலையைத் தோற்றுவித்துள்ளது.

இந்தக் கழிவுகள் கொட்டப்பட்ட இடத்தை மீண்டும் கலை நிகழ்வுகளுக்காகப் பயன்படுத்த முடியுமா எனமக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

அதேவேளை, கோட்டை அகழியில் இருந்து அகழப்பட்ட சேறுகொண்ட கழிவு மண் மற்றும் இடிபாடுகள் முற்றவெளியில் கொட்டப்பட்டு சீர்செய்யப்படாது காணப்படுகிறது. இதனால் வெள்ளம் வழிந்தோடத் தடையாக உள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்தப் பகுதிகளைச் சீர் செய்து யாழ். நகரின் நுழைவாயில்களின் தூய்மையைப் பாதுகாப்பதில் உரிய அதிகாரிகள் கவனமெடுக்க வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (ம-135)

# காரைநகர் பிரதேச மக்களுக்கு நெருப்புக் காய்ச்சலுக்கான தடுப்பூசி

காரைநகர், நவ. 24

காரைநகர் பிரதேசத்தில் நெருப்புக் காய்ச்சல் பரவுவதைத் தடுக்குமுகமாக நெருப்புக் காய்ச்சல் தடுப்பூசிகள் போடப்பட்டு வருகின்றன.

முதற்கட்டமாக உணவகங்களில் உணவு கையாளும் வேலையாள்கள், பாடசாலைகளில் சமையல் பணியில் ஈடுபடுவோர், பலசரக்குக் கடைகளில் பணியில் ஈடுபடுவோர், நெருப்புக்காய்ச்சல் வந்த குடும்ப அங்கத்தவர்களுக்கும் இந்த தடுப்பு மருந்து ஏற்றப்பட்டுள்ளது.

இதுவரை 110 பேர் இந்த தடுப்பு ஊசியைப் பெற்றுக் கொண்டதாகக் காரைநகர் பிரதேச பொதுச் சுகாதார பரிசோதகர் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து அரச, அரச சார்பற்ற நிறுவனங்களில் பணிபுரிவோர், தடுப்பு மருந்தை விரும்பிப் பெற்றுக்கொள்ள வருவோருக்கும் காரைநகர் வைத்தியசாலையில் வைத்து தடுப்பு ஊசி வழங்கப்படும் எனவும் இந்தத் தடுப்பு ஊசி மருந்து ஒரு வருட காலத்துக்குப் பாதுகாப்பு அளிப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ம-250)

# சுடலையிலும் திருடும் கும்பல்

கொழும்புத்துறை, நவ. 24

பழைய இரும்புக்காக மயானத்தில் சடலங்களை எரியூட்ட அணையாக அமைக்கப்பட்ட இரும்புத் தண்டவாளங்களைக் கூட திருடி விற்கின்றது திருட்டுக் கும்பல்.


கடந்த திங்கட்கிழமை கொழும்புத்துறை துண்டி இந்து மயானத்தில் இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது.

இந்த மயானத்தில் சடலங்களை எரிப்பதற்காக விறகுகள் அடுக்குவதற்கு ஏதுவாக நடப்பட்டிருந்த இரும்புத் தூண்களில் இரண்டு காணாமல் போயுள்ளன.

மறுநாள் மயானத்துக்கு எடுத்துவரப்பட்ட ஒரு சடலத்தை எரியூட்டுவதில் பல சிரமங்களை எதிர்நோக்கியதாகக் கூறப்பட்டது.

இந்த மயானத்தில் இருந்த தங்குமடம் முற்றாகச் சேதமடைந்துள்ளதுடன் மழைகாலங்களில் எரியூட்டுவதற்குக் கொட்டகையும் இல்லை. இதனால் இங்கு இறுதிக் கிரியைகளை நிறைவேற்ற வருவோர் பெரும் நெருக்கடிகளை எதிர்கொள்கின்றனர். இந்த நிலையில் இந்தச் சம்பவமும் இடம்பெற்றுள்ளது.

பழைய இரும்புக்கு மீண்டும் கிராக்கி ஏற்பட்டுள்ளதையடுத்து இந்தப் பகுதியில் மக்கள் மீள்குடியமர்வுக்காகச் சுத்தம் செய்து வரும் வீடுகளிலும் உள்ள இரும்புகள், ஜன்னல் கம்பிகள் பழைய-இரும்புக்காக திருடப்பட்டு வருவதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (ம-135)



காக்கைதீவு வீதியோரங்களில் பாரஊர்திகள் சில நிறுத்தப்படுவதால் போக்குவரத்தில் இடையூறுகள் ஏற்படுகின்றன. பாதை வளைவிலும் இவ்வாறு பாரஊர்திகள் நிறுத்தப்படுவதாகப் பயணிகள் விசனம் தெரிவிக்கின்றனர். (ம-149)

# சீரற்ற வாய்க்காலில் தேங்கி நிற்கும் வெள்ளம்

கொழும்புத்துறை, நவ. 24

கொழும்புத்துறை சுவாமியார் வீதிச் சந்தியில் உள்ள மூடிய வாய்க்கால் கழிவுகளால் தடைப்பட்டுள்ளதால் வெள்ளம் பிரதான கால்வாய்க்கு செல்வது தடைப்பட்டுள்ளது.

அண்மையில் இக்கால்வாயின் சில பகுதிகள் யாழ். மாநகர சபையால் துப்புரவு செய்யப்பட்ட போதிலும் தடைப்படுத்தும் மண்திட்டுக்கள் அகற்றப்படாது உள்ளன. இதனால் நீர் வழிந்தோட முடியாது உள்ளது.

பாடசாலை மற்றும் வியாபார நிலையங்கள் காணப்படும் இந்தப் பகுதியில் நீண்ட நாள்களாக வாய்க்காலில் நீர்தேங்கி நிற்பதால் நுளம்புப் பெருக்கம் ஏற்படும் அபாயம் தோன்றியுள்ளதாகக் கூறப்படுகிறது. (ம-135)

# படையினர் அமைத்த இரு வீடுகள் கையளிப்பு




தென்மராட்சி, நவ. 24

52 ஆவது படையணியின் ஏற்பாட்டில் மட்டுவில் பகுதியில் தலா 5 லட்சம் செலவில் நிர்மாணிக்கப்பட்ட இரு வீடுகள் நேற்று அவற்றின் உரிமையாளர்களிடம் கையளிக்கப்பட்டன.

கொழும்பு அற்லஸ் நிறுவன அனுசரணையுடன் 523 ஆவது படையணியினரால் கட்டப்பட்ட இரு வீடுகளும் 52 ஆவது படையணி கட்டளைத் தளபதி பிரிகேடியர் டபிள்யு.ஏ. வீ.ஏ.சுதசிங்கவால் உத்தியோகபூர்வமாக அவற்றின் உரிமையாளர்களிடம் கையளிக்கப்பட்டன.

523 ஆவது படையணி கட்டளைத் தளபதி பிரிகேடியர் டி.ஏ.பீ.என். தெமட்டம்பிட்டிய தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலன், தென்மராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் கோ.வரதராஜமூர்த்தி, 523 ஆவது படையணி சிவில் நிர்வாக அதிகாரி ஹர்ஸா அபேவர்த்தன உட்பட பலர் கலந்து கொண்டனர். (ம-207)

# காலாவதியான பொருள்களை வைத்திருந்தோர் அகப்பட்டனர்

சண்டிலிப்பாய், நவ.24

சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் திகதி காலாவதியான பொருள்களை வைத்திருந்த மூன்று வர்த்தகர்கள் சுகாதார உத்தியோகத்தரிடம் அகப்பட்டுக் கொண்டனர்.

இவர்களுக்கு எதிராகச் சுகாதாரப் பகுதியினரால் மல்லாகம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் மூவரும் குற்றத்தை ஏற்றுக் கொண்டதைத் தொடர்ந்து 4 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

சண்டிலிப்பாய் பிரதேச சுகாதார பரிசோதகர் வி.பிரபாகரன் தலைமையில் சென்ற சுகாதார உத்தியோகத்தர், சாவல்கட்டு பகுதியில் திகதி காலாவதியான பொருள்களை வைத்திருந்த மூன்று வியாபாரிகளைக் கண்டுபிடித்தார்.

இவர்களுக்கு எதிராக மல்லாகம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் மூவரும் குற்றத்தை ஏற்றுக் கொண்டதைத் தொடர்ந்து நீதிவான் இவர்களுக்கு இந்த அபராதத்தை விதித்தார். (ம-115)

# அடிக்கடி தடைப்படும் வடதாரகைக்குப் பதிலாக குமுதினியை சேவையில் ஈடுபடுத்தக் கோரிக்கை

யாழ்ப்பாணம், நவ. 24

நெடுந்தீவு குறிகாட்டுவான் சேவையில் உள்ள அரச படகு வடதாரகை II தனது சேவையை வழங்க முடியாத நிலையில் அதற்குப் பதிலாகக் குமுதினிப் படகை சேவையில் ஈடுபடுத்த வேண்டும் எனப் பொது மக்கள் கோருகின்றனர்.

வடதாரகை II படகு நெடுந்தீவில் இருந்து காலை 6.15 மணிக்கு பயணிகளுடன் குறிகாட்டுவானுக்குப் புறப்படுகின்றது.

எனினும் துறைமுகப் பாலத்தினுள் செல்ல முடியாத காரணத்தால் வெளிக்கடலில் நங்கூரமிட்டே பயணிகளை ஏற்றி இறக்குகின்றது.

தற்போது வாடைக்காற்று ஆரம்பமாகியதை அடுத்து காற்றும் கடல் கொந்தளிப்பும் அதிகமாகக் காணப்படுகிறது.

இந்த நிலையில் வடதாரகை II பயணிகளை ஏற்றி இறக்கமுடியாது சேவை தடைப்படுகிறது.

காலை 6.45 மணிக்கு நெடுந்தீவுத் துறைமுகத்துக்கு வரும் பயணிகள், காலையில் நெடுந்தீவில் இருந்து வெளியிடங்களுக்குச் செல்லும் ஊழியர்கள் தமது பயணத்தைத் தொடர முடியாது காலை 7 மணிக்குப் புறப்படும் படகிலேயே பயணிக்க வேண்டியுள்ளது.

இதனால் இவர்கள் தமது அலுவலகங்களுக்கு மிகவும் தாமதித்தே செல்ல வேண்டியுள்ளது.

வாடைக்காற்றுக் காலம் ஆரம்பமானதை அடுத்து வடதாரகை II படகுச் சேவை பெரும்பாலும் எதிர்வரும் தைப் பொங்கல் தினம் வரை அடிக்கடி ஸ்தம்பிக்கவே செய்யும்.

காலை 6.45 மணிக்குப் பயணம் செய்யவரும் பயணிகளின் வசதிக்ருதி குமுதினி படகை வடதாரகை சேவை செய்ய முடியாத நாள்களில் சேவையில் ஈடுபடுத்துமாறு கோரப்பட்டுள்ளது.

இதனால் காலை 6.45 மணிக்கு நெடுந்தீவில் இருந்தும் காலை 8.30 மணிக்கு குறிகாட்டுவானில் இருந்தும் உத்தியோகத்தர்கள் தங்கள் கடமைக்குச் செல்ல வசதியாக இருக்கும் எனவும் கூறப்படுகின்றது. (ம-7)

# 'யாழ்ப்பாணத் திருவிழா'வாகும் தைப்பொங்கல்

## 15 நாள்களுக்கு போட்டிகள், கலைநிகழ்வுகள்

யாழ்ப்பாணம், நவ.24

தமிழர் திருநாளாகிய 2012 தைப்பொங்கல் பண்டிகை யாழ்ப்பாணத் திருவிழாவாக மிகவும் கோலாகலமாக நடத்த யாழ்.மாநகரசபை ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது. இதுதான் யாழ்ப்பாணம் என்பதை தென்பகுதி மக்கள் மாத்திரமின்றி உலகமே தெரிந்து கொள்ளக் கூடியதாகத் தமிழர்களின் பாரம்பரியத்தை முற்று முழுதாக வெளிக்கொணரும் விழாவாக யாழ்ப்பாணத் திருவிழா அமையவுள்ளது.

எந்த ஓர் அரசியல் கலப்புமற்ற நிகழ்வாக இது இடம்பெறும் என்று யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா கூறினார்.

யாழ்ப்பாணத் திருவிழா பற்றிய முதல்வரின் செய்தியாளர் சந்திப்புநேற்று புதன்கிழமை நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது. விழாவின் அனுசரணையாளர்களாக இலங்கை சுற்றுலாத்துறை, யாழ் பல்கலைக்கழகம், யாழ்.வணிகர் கழகம், தமிழர் பாரம்பரிய கலை இலக்கிய அமைப்பு என்பனவும் இருக்கும்.

விழாவில் முக்கிய போட்டியாக தமிழன், தமிழிச்சி இடம்பெறும். தமிழன் போட்டியில் வீரம், உழவு, சிலம்படி போன்ற தமிழரின் பாரம்பரியத்தைக் கொண்டவரும் தமிழிச்சி போட்டியில் தமிழர்களின் பாரம்பரிய சமையல், கோலம்போடுதல், உடை போன்ற பண்டைய தமிழ்ப் பெண்கள் எவ்வாறு இருந்தார்கள் என்ற அம்சங்களைச் சித்திரிக்கும் வகையில் அமையும். இந்தப் போட்டியில் கலந்து கொண்டு வெற்றிபெறுபவருக்கு இறுதி நாளன்று பரிசில்கள் வழங்கப்படும்.

இவைதவிர நாடகப்போட்டிகள், நாட்டுக்கூத்து, கர்நாடகத் தமிழ் இசைப்போட்டிகள், பாடல்கள், பரதநாட்டியம், பேச்சு, கவிதைப்போட்டிகளும் தனித்தமிழ் கலாசாரத்தைப் பிரதிபலிக்கும் வகையில் நடத்தப்படும்.

மாட்டுவண்டிச்சவாரி, முட்டியுடைத்தல், கபடி, கரகாட்டம், காவடி, கோலாட்டம், சிலம்படி, பொய்க்கால் குதிரை, நீச்சல், படகோட்டப்போட்டி, கிட்டியடித்தல் என்பனவும் நடத்தப்படவுள்ளன.

தமிழ் மணம் கமழும் விழாவாக ஜனவரி ஐந்தாம் திகதி முதல் பதினைந்தாம் திகதிவரை நிகழ்வுகள் இடம்பெறும்.

ஜனவரி 3ஆம் திகதி தொடக்கம் 15 ஆம் திகதி வரை பொங்கல், போகிப்பொங்கல், மாட்டுப்பொங்கல் என்பன இடம்பெறும்.

யாழ்ப்பாணத் திருவிழா, யாழ்ப்பாணப் பெஸ்ரிவெல், யாழ்ப்பாண உத்தவய என்றவாறு மூன்று மொழிகளிலும் பெயர் அமையும்.

சிங்கள, ஆங்கில மொழிகளில் குறிப்பிடுவது போன்று பெயர் அமையாது. யாழ்ப்பாணம் என்ற பெயரிலேயே இது வழங்கப்படும் என்று கூறப்பட்டது.

செய்தியாளர் மாநாட்டில் யாழ். மாநகர ஆணையாளர் மு.செ.சரவணபவ, ஆசிரியர் இரா. செல்வவடிவேல், அசோக வதிக கொலிடேஸ் தலைவர் எஸ். சுந்தரேசன், நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஏ.மாணிக்கராசா, யாழ். மாநகர சபை உறுப்பினர் எஸ். விஜயகாந் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

(ம-7)

## வர்த்தக நிலையத்தில் பொருள்கள் திருட்டு

யாழ்ப்பாணம், நவ. 24

உடுவில் அம்பலவாணர் வீதியில் உள்ள வர்த்தக நிலையமொன்றினுள் ஒடு பிரித்து உள்நுழைந்த திருடர்கள் அங்கிருந்த பத்தாயிரம் ரூபாவுக்கும் அதிக பெறுமதியான சோடாப் போத்தல்கள், பிஸ்கட் பைக்கற்றுக்கள் உள்ளிட்ட பல பொருள்களை திருடிச் சென்றுள்ளனர். இது தொடர்பாக சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

வர்த்தக நிலையத்தில் பெறுமதியான பொருள்கள் வைக்கப்பட்டிருந்த போதும் அதற்குள் நுழைய முடியாததனால் வெளிப்புற அறையில் வைக்கப்பட்டிருந்த பொருள்களைத் திருடிச் சென்றுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

(ம-4)

# நெடுந்தீவு மீன் சந்தையில் தொடரும் சச்சரவுகள்

## நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம், நவ. 24

நெடுந்தீவு மத்திய சந்தைப் பகுதியில் உள்ள மீன் சந்தையில் பொதுமக்களுக்கும் குத்தகைக்காரருக்கும் அடிக்கடி சச்சரவுகள் ஏற்படுவதாகப் பொது மக்கள் அதிருப்தி தெரிவிக்கின்றனர்.

மீன்களின் விலையை நிர்ணயிக்க வேண்டியது மீன்பிடிச் சங்கங்களும் பொதுமக்களுமே என்று பிரதேச சபை உத்தியோகத்தர்கள் தெரிவிக்கின்றனர்.

அதேவேளை சந்தைக் குத்தகைக்காரருக்கு மீனை விற்பனை செய்வதற்கு உரிமை இல்லை என்றும் பிரதேச சபை உத்தியோகத்தர்கள் தெரிவித்தனர்.

சந்தைக் குத்தகைக்காரர் அங்கு வரும் மீன்களை எடுத்து வைத்து தமக்கு வேண்டியவர்களுக்கு அவற்றைக் கொடுப்பதாகவும் ஏனையோர் தமக்குத் தேவையான மீன்களை வாங்க முடியாதிருப்பதாகவும் கூறப்படுகிறது.

சிறிய மீன்களும் ஒருசில பெரிய மீன்களும் ஒன்றாகச் சேர்க்கப்பட்டு நிறுத்து அதிக விலைக்கு விற்கப்படுகிறது. மீன்களின் விலை அதிகமாக நிர்ணயித்து வழங்கப்படுகிறது. இதனால் பாவனையாளர்கள் பெரிதும் அதிருப்தியடைந்துள்ளனர்.

நல்லரக மீன்களை வாங்க முடியாமல் கூடுதல் விலை கொடுத்து சிறிய மீன்களை வாங்க வேண்டியுள்ளதே எனவும் பாவனையாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

பிரதேசசபை இந்த விடயத்தைக் கவனத்தில் எடுத்து நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

(ம-7)

## வேலணைப் பிரதேச செயலருக்கு விடுதி அமைக்க ரூ.85 லட்சம்

யாழ்ப்பாணம், நவ24

வேலணைப் பிரதேச செயலருக்கான விடுதியை அமைப்பதற்குப் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

தற்சமயம் அங்கு விடுதி வசதிகள் இன்மையால் பிரதேச செயலர் தினமும் வேலணைக்குச் சென்று திரும்பவும் தமது வதிவிடத்துக்குச் செல்ல வேண்டியுள்ளது.

இதனால் நேர விரயம் ஏற்படுவதுடன் கடமைகளையும் உரிய வேளையில் மேற்கொள்ள முடியாதமை குறித்துச் சுட்டிக் காட்டப்பட்டது.

இதனால் உடனுக்குடன் செய்யவேண்டிய வேலைகள் தடைப்படும் நிலைமை தோன்றுவதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

விடுதி அமைக்கும் பட்சத்தில் பிரதேச செயலர் சிரமமின்றித் தனது பணியை மேற்கொள்ளக் கூடியதாக இருக்கும் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதன் மூலம் மக்கள் தமது தேவைகளை உரியவகையில் நிறைவேற்ற முடியும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

புதிய விடுதி அமைப்பதற்கென 85 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று கூறப்பட்டுள்ளது. (ம-7)

# நெடுந்தீவில் முக்கிய வீதிகள் கவனிப்பார் அற்ற நிலையில்



நெடுந்தீவின் முக்கிய வீதிகளான வெல்லை வீதி, கிழக்கு ஆலமாவனப் பிள்ளையார் கோயில் வீதி என்பன மிகவும் மோசமாகச் சேதமடைந்துள்ளன.

வெல்லை வீதி நெடுந்தீவுப் பிரதேச சபையின் அன்மையில் இருந்து வெல்லை கடற்கரை வரை சுமார் மூன்றரை மைல் தூரம் மோசமாகப் பாதிக்கப்பட்டு குன்றும் குழியுமாக மழை நீர் தேங்கிக் காணப்படுகின்றது. இது போக்குவரத்துக்குப் பெரும் இடையூறாகக் காணப்படுகின்றது.

தற்சமயம் வெல்லைப் பகுதியிலேயே மீனவர்கள் தமது தொழிலை மேற்கொண்டு பிடிக்கும் மீன்களை விற்பனைக்காக மத்திய சந்தைக்குக் கொண்டு வரவேண்டியுள்ளது.

முக்கிய பாடசாலை மற்றும் குடிசன அடர்த்தி கொண்ட பகுதியாகவும் இந்த வீதி உள்ளது.

வெல்லை மற்றும் ஆலமாவனப் பிள்ளையார் கோயில் வீதிகளை உடன் திருத்தியமைக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

(ம-7)

# நடைபாதை வியாபாரிகளுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை

யாழ்ப்பாணம்,நவ.24

திருநெல்வேலி பொதுச் சந்தைக்கு அருகில் நடைபாதைகளில் வியாபாரத்தை மேற்கொள்ளும் வியாபாரிகளுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

நல்லூர் பிரதேச சபைக் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகச் சபைத் தலைவர் ப.வசந்தகுமார் தெரிவித்தார்.

நல்லூர் பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டம் நேற்று முன்தினம் நல்லூர் பிரதேச சபை மண்டபத்தில் இடம்பெற்றது. இதில் நடைபாதை வியாபாரிகளால் ஏற்படும் நெருக்கடி நிலைமைகள் குறித்துச் சுட்டிக்காட்டப்பட்டது. இதனையடுத்து இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

நடைபாதைகளில் வியாபாரத்தை மேற்கொள்ளும் வியாபாரிகளிடம் நல்லூர் பிரதேச சபையின் சுகாதாரப் பிரிவினர் மற்றும் பிரதேச சபையினர் நேரடியாகச் சென்று பார்வையிட்டு எச்சரித்த பின்னரும் வர்த்தகர்கள் மீறி நடந்து கொள்கின்றனர்.

வர்த்தகர்களுக்கான இட வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தும் நடைபாதைகளில் வியாபாரம் செய்து நடைபயணிகளுக்கு இடையூறுகளை ஏற்படுத்துவதோடு, வாகன நெரிசலும் ஏற்படுகிறது.

நடைபாதை வியாபாரிகள் பிரதேச சபையுடன் ஒத்துழைத்து, தமக்கென ஒதுக்கப்பட்ட பகுதிகளில் வியாபாரங்களை மேற்கொள்ள வேண்டும். தவறும் பட்சத்தில் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று சபை தீர்மானித்துள்ளது.

பொதுச்சந்தையில் உள்ள கழிவுகளை அகற்றுவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று கூறப்பட்டது. (ம-311)

# குடாநாட்டில் கொள்ளைச் சம்பவங்கள்; 50 லட்சம் பெறுமதியான நகைகள் அபேஸ்

யாழ்ப்பாணம், நவ.24

யாழ்.கச்சேரியடிப்பகுதி, புன்னாலைக்கட்டுவன் பகுதிகளில் நேற்று முன்தினம் இரண்டு வீடுகளில் புகுந்த கொள்ளையர்கள் அங்கிருந்த 83 பவுண் நகைகளைக் கொள்ளையடித்துச் சென்றனர்.

இவற்றுடன் இரண்டு கையடக்கத் தொலைபேசிகள், வீடியோக்கமரா என்பனவும் புன்னாலைக்கட்டுவனில் திருடப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவங்கள் தொடர்பாக யாழ்ப்பாணம் மற்றும் சுன்னாகம் பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இதுதொடர்பான விசாரணை மேற்கொண்டுள்ளதாக அந்தப்பகுதி பொலிஸார் தெரிவித்தனர்.

புன்னாலைக்கட்டுவன் மணியகாரர் வீதியில் உள்ள வீடொன்றினுள் அதிகாலை 1.30 மணியளவில் ஓடுபிரித்து உள்நுழைந்த திருடர்கள் அங்கிருந்தவர்களை அச்சுறுத்தி 33 லட்சம் பெறுமதியான 66 பவுண் நகையையும் 90 ஆயிரம் பெறுமதியான இரண்டு கைத்தொலைபேசிகள், வீடியோக்கமரா என்பவற்றையும் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

இந்தக் கொள்ளைக் கும்பல் முகமூடி அணிந்துள்ள நிலையில் குறித்த வீடுகளுக்குள் புகுந்துள்ளனர் என்று சுன்னாகம் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, கச்சேரியடியில் நேற்று முன்தினம் நடந்த கொள்ளைச் சம்பவத்தில் தாக்குதலுக்குள்ளான துரைரட்ணம் திரேசம்மா என்பவர் காயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். இது தொடர்பாக யாழ்.பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

(ம-4)

Hunters
Trusted Quality Since 1911



ஹன்டர் அன்ட் கம்பனி பிஎல்சி

மூன்று நாள்
சேல்

சர்வதேச புகழ்பெற்ற தயரிப்பு வகைகள் குறைக்கப்பட்ட விலைகளில் வீட்டு மற்றும் தோட்ட தயாரிப்புகள், கைத்தொழில் மற்றும் மென் பொறியியல் தயாரிப்புகள், சைக்கிள்கள், உபகரணங்கள்

2011 நவம்பர் 24, 25, 26
காலை 9 - மாலை 7

*at the following showroom*

யாழ்ப்பாணம்
320 பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலை: 021-4923112.

# மாணவியுடன் தவறாக நடக்க முயன்ற ஆசிரியர்

கிளிநொச்சி, நவ.24

13 வயது மாணவி ஒருவருடன் தவறாக நடக்க முயன்ற பாடசாலை ஆசிரியர் ஒருவர் உடனடியாகத் தண்டனை இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

கிளிநொச்சியில் பிரதேச பாடசாலை ஒன்றில் கற்பிக்கும் இந்த ஆசிரியர் அந்தப் பாடசாலையில் உள்ள 13 வயது மாணவி ஒருவருடன் தவறாக நடக்க முயன்றுள்ளார்.

இது குறித்துக் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டை அடுத்து குறித்த ஆசிரியருக்குக் கல்வி வலயத்தால் உடனடியாகத் தண்டனை இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

இப்பகுதி சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தருக்கும் இது குறித்து முறையிடப்பட்டுள்ளது. இது குறித்து அவர் பொலிஸாருக்குத் தெரியப்படுத்தியதை அடுத்துப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (த-6)

## தேவை

இத்தாலி Work Permit
Canada Work Permit
முற்பணம் ஏதும் கொடுக்கப்பட மாட்டாது.
Contact No - 0774469962

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியை திருமதி வெல்ரீனா இளங்கோவன் அவர்களின் அன்புத் தந்தை

### ஆ.சி. நடராசா

அவர்களின் மரணச்செய்தி கேட்டு துயரடைவதுடன் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

*அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்விசாரா ஊழியர்கள்.*
*யாழ். இந்து மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்.*

(C/6775)(2-6-8)

## கண்ணீர் அஞ்சலி



நல் அதிபராய், கலை ஆர்வலராய், மனிதருள் மாணிக்கமாய், கருணைப் பாலத்தின், ஒளி விளக்காய் மாநிலம் போற்றும் மாமனிதராய் வாழ்ந்த உயர்திரு. ஆ.சி. நடராசா அவர்களை இழந்து நிற்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

திரு. திருமதி மனோகரன் குடும்பத்தினர்
(நடன ஆசிரியை, யா/வயாவிளான் ம.ம.வி)

(C/6148)(6-8)

## கண்ணீர் அஞ்சலி

எமது வித்தியாலய ஆசிரியை திருமதி சா. ஸ்ரீதெத்ஸசர்மா அவர்களின் அன்புத் தாய்

*திருமதி ஸ்ரீமதி சாரதாம்பாள் குமாரசாமி ஐயர்* அவர்கள்

22.11.2011 அன்று மரணமடைந்தமையையிட்டு ஆழ்ந்த கவலை அடைவதுடன் அவர்களின் குடும்பத்தினருக்கு அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மாசாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்,
யா/மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம்.

(7854)(6-8)

## அந்தியேட்டி ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும் நன்றி நவிலலும்

### அமரர் வைரமுத்து குலவீரசிங்கம்

*(இளைப்பாறிய புகையிரத நிலைய அதிபர்)*



தோற்றம்: 24.03.1934



மறைவு: 27.10.2011

எமது அன்புக்குரிய குடும்பத்தலைவர் இறைவனடி சேர்ந்த செய்தி கேட்டு நேரில் வந்தும் மற்றும் பல்வேறு வழிகளிலும் அனுதாபங்களைத் தெரிவித்தோருக்கும், இறுதி யாத்திரையில் கலந்து கொண்டோருக்கும், மலர் வளையங்கள் வைத்து அஞ்சலி செலுத்தியோருக்கும், பத்திரிகைகள், பிரசுரங்கள் மூலம் கண்ணீர் அஞ்சலி செலுத்தியோருக்கும் நோய்வாய்ப்பட்டு வீட்டிலும் வைத்தியசாலையிலும் இருந்தபோது நேரகாலம் பாராது மருத்துவசேவை ஆற்றியோருக்கும் மற்றும் பல்வேறு வழிகளிலும் உதவிகள், ஒத்தாசைகள் வழங்கிய உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதுடன்,

26.11.2011 சனிக்கிழமை காலை 6.00 மணியளவில் பருத்தித்துறை திருநாவலூர் மகாமாரி அம்மன் கோயில் மடத்தில் நடைபெறவுள்ள அந்தியேட்டிக் கிரியைகளிலும் தொடர்ந்து மு.ப. 11 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ள ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

*கு.பிரேமகாந்தன்,*
*(வலயக்கல்விப் பணிப்பாளர், தென்மராட்சி)*
*விநாயகமுதலியார் வீதி, பருத்தித்துறை.* குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி ஆறுமுகசாமி நீலாம்பிகை



மயிலிட்டி வடக்கைப் பிறப்பிடமாகவும், யாமா வளவு தெல்லிப்பழையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஆறுமுகசாமி நீலாம்பிகை நேற்று (23.11.2011) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகசாமியின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சிவசக்திதேவி மற்றும் சிவகெங்காதேவி ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்ற யோகநாதனின் பாசமிகு மாமியும், மற்றும் கமலநாதன், திருமதி சிவபிருந்தா கமலநாதன், சிவதர்சன் (பிரான்ஸ்), திருமதி சுனித்தா சிவதர்சன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், வர்ணவி, சுவாதிகா, சாகித்தியன் ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.11.2011) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று காலை 9.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக தெல்லிப்பழை கட்டுப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*"ராமகிரி",*
K.K.S. வீதி, தெல்லிப்பழை.

தகவல்:
குடும்பத்தினர்.

## வலிகாமம் வடக்கு பிரதேச சபை காங்கேசன்துறை (மல்லாகம்)

சந்தைகள், இறைச்சிக் கடை கள், சந்தைக் கடை த் தொகுதிகள் என்பன குத்தகைக்கு/வாடகைக்கு விடுவதற்கான

# கேள்வி அறிவித்தல் - 2012

கேள்விப் பத்திரம் வழங்கும் கடைசித் திகதி : 01.12.2011 வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணி வரை
கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி : 02.12.2011 வெள்ளிக்கழமை நண்பகல் 12.00 மணி வரை
கேள்விகள் திறக்கப்படும் திகதி : 02.12.2011 வெள்ளிக்கிழமை பி.ப 2.00 மணி

| இல | குத்தகை விவரம் | மாத வாடகை | ஆகக்குறைந்த கேள்வித் தொகை | கேள்விப் பிணைப்பணம் (மீளளிக்கக் கூடியது) | கேள்விப் பத்திரப் பணம் (மீளளிக்க முடியாதது) |
|---|---|---|---|---|---|
| | மல்லாகம் உப அலுவலகம் | | | | |
| 01 | அளவெட்டி மலைவேம்படிச் சந்தை | - | 100,000.00 | 1,000.00 | 150.00 |
| 02 | மல்லாகம் பொதுச் சந்தை | - | 35,000.00 | 500.00 | 150.00 |
| 03 | இறால் மடம் சந்தை | - | 1,000.00 | 250.00 | 150.00 |
| 04 | மல்லாகம் மாட்டிறைச்சிக் கடை | 500.00 | 100,000.00 | 1,000.00 | 500.00 |
| 05 | மல்லாகம் ஆட்டிறைச்சிக் கடை | 500.00 | 15,000.00 | 500.00 | 150.00 |
| 06 | கும்பலை மாட்டிறைச்சிக் கடை | 250.00 | 100,000.00 | 1,000.00 | 500.00 |
| 07 | மல்லாகம் சந்தை கருவாட்டுக் கடை | 500.00 | 20,000.00 | 250.00 | 100.00 |
| 08 | அளவெட்டி மலைவேம்படி கருவாட்டுக் கடை இல 6 | 250.00 | 5,000.00 | 500.00 | 150.00 |
| 09 | அளவெட்டி மலைவேம்படி கருவாட்டுக் கடை இல 7 | 250.00 | 5,000.00 | 500.00 | 150.00 |
| | தெல்லிப்பழை உப அலுவலகம் | | | | |
| 01 | கூத்தன் சீமாச் சந்தை | - | 45,000.00 | 500.00 | 250.00 |
| 02 | கூத்தன் சீமாச் சந்தை கடை இல -01 | 250.00 | 10,000.00 | 500.00 | 250.00 |
| 03 | கூத்தன் சீமாச் சந்தை கடை இல -02 | 250.00 | 10,000.00 | 500.00 | 250.00 |

குறிப்பு:

* மாத வாடகை யாவும் விலை மதிப்பீட்டுத் திணைக்களம் மதிப்பீட்டின் பிரகாரம் அறவிடப்படும். கேள்விப்பத்திரப் பணம், கேள்வித்தொகை , மாத வாடகை ஆகியவற்றிற்கு பெறுமதி சேர்க்கப்பட்ட வரி (VAT 12%), தேசத்தை கட்டியெழுப்பும் வரி (NBT 2%) யும் மேலதிகமாகச் செலுத்தப்படல் வேண்டும்.
* கேள்விப்பத்திரம் கோருபவர்கள் ஆள் அடையாள அட்டையுடன் அதன் போட்டோப் பிரதியையும் கொண்டு வருதல் வேண்டும்.
* இறைச்சிக் கடை விண்ணப்பம் பெறுபவர்கள் முன்பு கடை நடத்திய பிரதேச சபையிடமிருந்து எதுவித நிலுவையும் இல்லை என்பதை உறுதிப்படுத்திய கடிதம் சமர்ப்பிக்க வேண்டும்.
* போதிய காரணங்களால் கேள்வியை ஏற்றுக் கொள்ளும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் தவிசாளருக்கு உண்டு.
* கேள்விப் படிவம் பூரணப்படுத்தப்பட்டு அரக்கு முத்திரையிட்ட கடித உறையில் குறித்த தினத்திற்கு முன்னர் எமக்குக் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலிலோ அல்லது தலைமை அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியிலோ சேர்ப்பதுடன் கேள்விப் படிவத்தின் ஒரு பிரதியை ''பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம்'' அவர்களுக்கு அனுப்புதல் வேண்டும்.
* ஏனைய மேலதிக விவரங்களை தலைமை அலுவலகத்திலும், மல்லாகம், தெல்லிப்பழை உப அலுவலகங்களிலும் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

சோமசுந்தரம் சுகிர்தன்,
தவிசாளர்,
வலிகாமம் வடக்கு பிரதேச சபை,
காங்கேசன்துறை (மல்லாகம்).

*வலிகாமம் வடக்கு பிரதேச சபை,*
*காங்கேசன்துறை (மல்லாகம்)*
*23.11.2011* (சி/6142) (2-6)

# வியளம் கேட்டீர்களா?

## வெங்காயம் சுக்கானால் வெந்தயத்தால் ஆவதென்ன...?

சந்தைக்குப் போய் வெங்காயம் வாங்கும் போதெல்லாம் உரிக்க உரிக்கத் தோல் அது என்ன? என்று சிறு வயதில் படித்த விடுகதைதான் ஞாபகத்துக்கு வருகிறது.

ஒரு வேலையைச் செய்யச் சொன்னால் அந்த வேலையைச் செய்யாது வேறு வேலையைச் செய்பவர்களை, அறிவிலிகளை வெங்காயம் என்றே அழைப்பர்.


வெங்காயம் சுக்கானால் வெந்தயத்தால் ஆவதென்ன? என்பது சித்தர் பாடல்.

இங்கே வெங்காயம், சுக்கு, வெந்தயம் ஆகியன வருகின்றன. மூன்றும் மருத்துவப் பயன்பாடுடையவை. சமையலில் பயன்படுத்தப்படுபவை. ஆனால் இந்தப் பாட்டின் கருத்து அதுவல்ல. காயம் என்பது உடம்பைக் குறிக்கும். இந்த வெம்மையான உடம்பு என்றோ ஒருநாள் சுக்குநூறாக அழியப் போகிறது. அவ்வாறு அழியும்போது எம்மிடம் உள்ள அவா, பொறாமை, வஞ்சகம்,பெருமை பேசுதல், திமிர் எல்லாமே அழிந்துவிடும். எனவே, இந்த உண்மையை உணர்ந்து கொள்ளுங்கள் என்பதை இப்பாடல் வெளிப்படுத்துகிறது.

வெங்காயம் தமிழர்களின் சமையலில் முக்கியமான சுவைச்சரக்காகும். வெங்காயக்குழம்பு, வெங்காயச் சம்பல்(சீனிச்சம்பல்) என்பன முக்கியமானவை.சின்ன வெங்காயம்,வேதாளக்காய் எனப்படும் பெரிய வெங்காயம் இரண்டும் இங்கு செய்கை பண்ணப்படுகின்றன. இற்றைக்கு முப்பது வருடங்களுக்கு முன்புவரை யாழ்ப்பாணத்து வெங்காயமே இலங்கை முழுவதற்கும் ஏற்றுமதியானது. கூடவே செத்தல் மிளகாயும். அந்தப் பொற்காலத்திலேயே வன்னி, யாழ்ப்பாண விவசாயிகள் லட்சாதிபதிகள் ஆகினர். ஏழை விவசாயிகளின் குடிசை வீடுகள் கல்வீடுகளாயின. ஸ்ரீமாவோ அம்மையாரின் ஆட்சியில்தான் இது நடந்தது. அப்போதுவரும் அரசியல் விருந்தினர்களுக்கு வெங்காய மாலை, மிளகாய் மாலை போட்டு விவசாயிகள் வரவேற்றனர்.

இன்று நிலைமை அப்படியல்ல. ஜே.ஆர். ஜெயவர்த்தன அரசாங்கம் திறந்த பொருளாதாரக் கொள்கையை அமுல்படுத்தியதைத் தொடர்ந்தும், மகாவலி அபிவிருத்தித் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டதாலும், தொடர்ந்த யுத்தம், பாதைபூட்டு என வந்த தடைகளாலும் அதிகளவில் பாதிக்கப்பட்டது விவசாயிகள்தான்!

இன்று கொழும்பிலுள்ள தமிழர்கள் சின்ன வெங்காயம் பயன்படுத்துவதில்லை. பதிலாக இறக்குமதியாகும் பம்பாய் வெங்காயமே பயன்படுத்துகின்றனர். சின்ன வெங்காயம் யுத்த காலத்தில் வாங்க முடியாத பொருளாயிருந்தது. எனவே, அவர்கள் பம்பாய் வெங்காயத்துக்குப் பழக்கப்பட்டனர். இன்று யாழ்ப்பாணத்தில் இருந்து சின்ன வெங்காயம் கொழும்பை அடையும்போதும் அவர்களால் அதை நாடமுடியவில்லை.



ஆனால் இலங்கையின் ஏனைய பிரதேசங்களில் சின்ன வெங்காயத்துக்குக் கிராக்கி உள்ளது. அதை மகாவலி பீ வலயம், புத்தளம் முதலான இடங்களில் விளையும் வெங்காயம் ஈடுசெய்தது. ஆயினும் யாழ்ப்பாணத்தில் விளையும் வெங்காயத்தின் சுவையும்,நீண்ட காலத்துக்குப் பயன்படுத்தத்தக்க தன்மையும் காரணமாக அதற்கான கிராக்கி குறையவில்லை. எனவே, இங்குள்ள தோட்டங்களையும், வயல்களையும் மழைக்காலம் வரை வெங்காயமே ஆக்கிரமித்திருந்தது. அதனால் வெங்காயத்தின் விலையும் குறைந்திருந்தது.

உள்ளூர்ச் சந்தைகளையல்ல தம்புள்ளவை நம்பியே அனேக விவசாயிகள் வெங்காயத்தை விதைத்தனர் என்பது முக்கியமானது. அது போலவே கரட், பீற்றூட், முள்ளங்கி, லீக்ஸ் என்பனவும் அதை நம்பியே பயிரிடப்படுகின்றன. தம்புள்ள வியாபாரிகளிடம் கடனுக்கு விற்றுக் காசிழந்த கதைகளும் இங்குண்டு.

இன்று உள்ளூர்ச் சந்தைகள் தம்புள்ள மரக்கறிகளையே எதிர்பார்த்திருக்கின்றன. தம்புள்ள மரக்கறிகள் வராவிட்டால் விலைகள் ஏறும். வந்தால் இறங்கும். கத்தரியும் தக்காளியும் விளையும் தோட்டங்களில் வெங்காயம் விளைந்ததன் விளைவு இது. போகிற போக்கைப் பார்த்தால் இங்கு விளையும் வெங்காயமும் தம்புள்ள போய் அங்கிருந்து சூடாகவரும் போலத்தான் நிலைமை இருக்கிறது.

விழிச்சான் குஞ்சு.

# தெற்காசிய வலயத்தில் இலங்கைதான் மனித வள அபிவிருத்தியில் முதலிடம்

கொழும்பு,நவ.24

மனிதவள அபிவிருத்தியில் தெற்காசிய வலயத்தில் இலங்கை முதலிடத்தைப் பெற்றுள்ளது.

ஐக்கிய நாடுகளின் அபிவிருத்திச் செயற்திட்டம் நேற்று முன்தினம் வெளியிட்டுள்ள 2011 ஆம் ஆண்டிற்கான மனிதவள அபிவிருத்தி அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

187 உலக நாடுகளை உள்ளடக்கியுள்ள இந்த அறிக்கைக்கு அமைய இலங்கை மனித வள அபிவிருத்தியில் 97 ஆவது இடத்தை வகிக்கின்றது.

அயல் நாடுகளான இந்தியா 134 ஆவது இடத்திலும், பாகிஸ்தான் 145 ஆவது இடத்திலும் உள்ளன.

பங்களாதேஷுக்கு 146 ஆவது இடமும், நேபாளத்திற்கு 157 ஆவது இடமும் கிடைத்துள்ளன.

இதனைத் தவிர பூட்டான் 141 ஆவது இடத்திலும், ஆப்கானிஸ்தான் 172ஆவது இடத்திலும் இருப்பதாக ஐக்கிய நாடுகளின் அபிவிருத்திச் செயற் திட்டம் வெளியிட்டுள்ள 2011 ஆம் ஆண்டுக்கான மனிதவள அபிவிருத்தி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)




மாலபே தனியார் மருத்துவ கல்லூரிக்கு சட்ட அங்கீகாரம் வழங்கும் அரசின் தீர்மானத்தை எதிர்த்து கொழும்பு, றுகுணு, பேராதனை மற்றும் ஸ்ரீ ஜெயவர்தனபுர பல்கலைக் கழகங்களின் மருத்துவ பீட மாணவர்கள் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவுக்கு முன்னால் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (ச)

# தொலைபேசி அழைப்புக் கட்டணம் அதிகரிப்பு

கொழும்பு,நவ.24

வெளிநாடுகளுக்கான தொலைபேசி அழைப்புக் கட்டணங்களை அதிகரிக்கப் போவதாக அரசு அறிவித்துள்ளது.

2012 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் வெளிநாட்டுத் தொலைபேசி அழைப்புகளுக்கு, நிமிடம் ஒன்றுக்கு விதிக்கப்படும் வரி ஒரு ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

முன்னர் 2 ரூபா அறவிடப்பட்ட நிமிடம் ஒன்றுக்கான வெளிநாட்டுத் தொலைபேசி அழைப்புக்கான வரி இனிமேல் 3 ரூபாவாக அதிகரிக்கப்படவுள்ளது. (ச)

# நாடாளுமன்றில் போத்தல் வீச்சு சம்பவம்; ஜனாதிபதியின் பாதுகாப்பில் குறைபாடு

### சுட்டிக்காட்டுகிறார் எதிர்க்கட்சி எம்.பி.

கொழும்பு, நவ 24

ஜனாதிபதியின் பாதுகாப்பு தொடர்பில் பிரச்சினை இருப்பதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பாலித ரங்கே பண்டார தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் நாடாளுமன்றில் இடம்பெற்ற வரவு - செலவுத் திட்ட விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இதுதொடர்பாக அவர் மேலும் கூறியதாவது:

ஜனாதிபதியின் வரவு செலவுத் திட்ட உரையைச் செவிமடுப்பதற்காக இந்த சபையின் பார்வையாளர் கூடத்தில் பலர் அமர்ந்திருந்தனர். ஜனாதிபதியின் முன்னிலையில் அரச உறுப்பினர்கள் எம் மீது தாக்குதல் நடத்தினர்.

எம்மீது தாக்குதல் நடத்தப்பட்டுக் கொண்டிருந்தபோது பார்வையாளர் கூடத்திலிருந்து ஜனாதிபதியை நோக்கி தண்ணீர் போத்தல் எறியப்பட்டது எனக் கூறி அது பற்றி தேடிப்பார்க்குமாறு பொலிஸாரிடம் தெரிவிக்குமாறு ஜனாதிபதி கூறினார்.

நாடாளுமன்ற பார்வையாளர் கூடத்திற்கு வருபவர்கள் கடுமையாகச் சோதிக்கப்படுவர். ஜனாதிபதி வருகின்றபோது பாதுகாப்பு மேலும் பலப்படுத்தப்பட்டிருந்த நிலையில் ஜனாதிபதி மீது போத்தல் தாக்குதல் நடத்தப்பட்டது என்றால் ஜனாதிபதியின் பாதுகாப்பில் பிரச்சினை உள்ளது. இதே வேளை, எம்மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலை சபாநாயகர் கண்டிக்கவில்லை. இது கவலைக்குரிய விடயம் - என்றார். (ச-சி)

# தெற்கின் பாதுகாப்பு நிலைமைகளை ஆராய்ந்தார் இராணுவத் தளபதி

கொழும்பு,நவ.24

தென் பகுதி பாதுகாப்பு நிலைமைகள் குறித்து இராணுவத் தளபதி ஜகத் ஜயசூரிய ஆராய்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தென் பகுதியில் இராணுவ நடவடிக்கைகளை எவ்வாறு அபிவிருத்தி செய்வது என்பது குறித்து கண்காணிக்கப்பட்டதாக சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

கடந்த 19ஆம், 20 ஆம் திகதிகளில் யால மற்றும் ஹம்பாந்தோட்டை பிரதேசங்களுக்கு இராணுவத் தளபதி நேரில் சென்று கண்காணிப்புப் பணிகளை மேற்கொண்டுள்ளார்.

அரசின் அபிவிருத்தித் திட்டங்களுக்கு படையினர் வழங்கி வரும் பங்களிப்புக் குறித்து தென் பகுதி இராணுவ உயரதிகாரிகளுடன், இராணுவத் தளபதி பேச்சு நடத்தியுள்ளார். (ச)

# தமிழ் மொழி அமுலாக்கத்தை நாடு முழுவதும் விரிவுபடுத்துக

### பிரபாகணேசன் கோரிக்கை

கொழும்பு,நவ.24

அதிகாரப்பரவலாக்கல் மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் அதேசமயத்தில் தமிழ் மொழி அமுலாக்கம் தமிழ் மக்கள் வாழும் அனைத்துப் பகுதிகளிலும் முழுமையான முறையில் நடைமுறைப்படுத்த வேண்டும்.

- இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினரும், ஜனநாயக மக்கள் காங்கிரஸின் தலைவருமான பிரபா கணேசன் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

தமிழ் மொழி அமுலாக்கம் நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் 12.5 வீதம் தமிழ் பேசும் மக்கள் வாழ்வார்களேயானால் அரச கரும மொழியாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்ற சட்டம் நடைமுறையிலுள்ளது.

ஆனால், இவை எந்த மாவட்டத்திலும் முழுமையான முறையில் நடைமுறைப்படுத்தப்படவில்லை. இது சம்பந்தமாக எவரும் அக்கறைப்படவுமில்லை.

இனப்பிரச்சினைத் தீர்வுக்காக யுத்த காலத்திலும் சரி, அதன் பின்னரும் கவனம் செலுத்தாத காரணத்தினால் இது குறித்து எந்தவொரு அரசியல்வாதிகளினாலும் கருத்தில் எடுத்துக்கொள்ளப்படவில்லை.

இந்த அரசு மூலம் மொழி அமுலாக்கலுக்குத் தனியான ஓர் அமைச்சு ஏற்படுத்தப்பட்டுள்ளமை வரவேற்கத்தக்க விடயமாக இருக்கிறது- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-சி)

# இலங்கையில் கருத்துச் சுதந்திரம் தொடர்ந்தும் பலவீனமான நிலையில்

## சீ.பி.ஏ. தகவல்

இலங்கையில் கருத்துச் சுதந்திரம் தொடர்ந்தும் பலவீனமாகவே காணப்படுகின்றது என்று மாற்றுக் கொள்கைகளுக்கான கேந்திர நிலையம் (C.P.A) அறிவித் துள்ளது.

கடந்த 2009 ஆம் ஆண்டு மே மாதம் யுத்தம் நிறைவடைந்த போதிலும் தொடர்ந்தும் கருத்துச் சுதந்திர உரிமை பலவீனமாகவே தொடர் கின்றது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இணைய ஊடகவியலாளர்கள் மற்றும் இணையத் தளங்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்கள் தொடர்பில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவோர் இது வரையில் எந்தவித காத்திரமான நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. இணையக் கருத்து சுதந்திரம் தொடர்பில் புதிய சட்டங்கள் உருவாக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

கருத்துச் சுதந்திரம் தொடர்பில் சர்வதேச தர நிர்ணயங்கள் பின்பற்றப்பட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இணைய ஊடக சுதந்திரத்தை நிலை நாட்டுவதற்கு பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.




கைதடியிலுள்ள வடமாகாண சமூக சேவைகள் திணைக்களம் தனது அலுவலக முன்றலில் மாமரக் கிளையொன்றில் தனது செயற்பாடுகளைப் பலகைகளில் எழுதி காட்சிப்படுத்தியுள்ளது. (ம-121)

# வெளிநாடுகளுக்கு உளவுத் தகவல் வழங்குவோர் குறித்து விசாரணை

இலங்கையிலிருந்து வெளி நாடுகளுக்கு உளவுத் தகவல் களை வழங்குவோர் குறித்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக சிங்கள பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இரட்டைக் குடியுரிமைப் பெற்றுக் கொண்டு இலங்கையில் வாழும் நபர்கள் இவ்வாறு வெளிநாட்டு உளவு நிறுவனங்களுக்குத் தகவல்களை வழங்குவதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

உளவுப் பணியில் ஈடுபடும் வெளிநாட்டுப் பிரஜைகள் குறித்து தீவிர விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

இதேவேளை நாட்டின் தேசியப் பாதுகாப்பு மற்றும் ஜனாதிபதி தொடர்பில் உளவுத் தகவல்களைத் திரட்டிய வெளி நாட்டுப் பிரஜை ஒருவரை புலனாய்வுப் பிரிவினர் அண்மையில் கைது செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த நபர் இலங்கைப் பெண் ஒருவரைத் திருமணம் செய்து இலங்கையில் தங்கியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நாட்டின் பல முக்கியஸ்தர்களுடன் குறித்த வெளிநாட்டுப் பிரஜை தொடர்புகளை பேணி வந்ததாகப் புலனாய்வுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேலும், உளவுப் பணியில் ஈடுபடுவது குறித்து நிரூபிக்கப்பட்டால் அவர்கள் நாடு கடத்தப்படுவார்கள் என்று புலனாய்வுப் பிரிவினர் எச்சரித்துள்ளனர்.

# ரூபா மறுமதிப்பீடு நாணய நிதியம் பாராட்டு

இலங்கை தனது ரூபா பெறுமதியை மறுமதிப்பீடு செய்துள்ளமை சிறந்த ஓர் தீர்வு என்றும் அது உள்நாட்டு உற்பத்தி மற்றும் ஏற்றுமதிக்கும் வளங்கள் பாதுகாப்புக்கும் உறு துணையாக அமையும் என்று சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

மத்திய காலத்தில் இலங் கையின் ஏற்றுமதி மற் றும் வளப்பாதுகாப்பை போட்டிக்கு இட்டுச் செல்ல ரூபா பெறு மதியை மறுமதிப்பீடு செய்துள்ள நடவடிக்கை உகந்தது என்று சர்வதேச நாணய நிதி யத்தின் இலங்கை பிரதிநிதி கொஷி மத்தாய் ரொய்டர் செய் திச் சேவைக்கு அனுப்பி வைத் துள்ள மின்னஞ்சலில் தெரிவித் துள்ளார்.

இலங்கை ரூபாவை 3 சதவீத மறுமதிப்பீடு செய்ய அடுத்த வருட வரவு செலவுத் திட்டத்தைச் சமர்ப்பித்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ யோசனை முன்வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வலம்புரிச் சங்கை கொள்வனவு செய்து பணம் கொடுக்காத இரு பொலிஸார்

தம்புள்ளை,நவ.24

வலம்புரிச் சங்கொன்றைக் கொள்வனவு செய்து நிதி மோசடியில் ஈடுபட்ட தம்புள்ளை பொலிஸ் நிலையத்தின் உத்தியோகத்தர் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் சார்ஜன்ட் ஒருவரும், பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவருமே கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

ஹற்றன் பகுதியிலிருந்து வருகைதந்த ஒருவரிடம் சங்கைப் பெற்றுக் கொள்வதாகத் தெரிவித்த குறித்த பொலிஸ் உத்தியோகத்தர்கள் அதற்காக 25 இலட்சம் ரூபா வழங்குவதாகவும் உறுதியளித்துள்ளனர்.

பின்னர் குறித்த நபரை அச்சுறுத்தி, பணம் செலுத்தாது சங்கைப் பெற்றுக் கொண்டுள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், குறித்த வலம்புரி சங்கை பொலிஸார் தற் போது கைப்பற்றியுள்ளனர். கைது செய்யப்பட்டுள்ள இரு பொலிஸ் உத்தியோகத்தர்களும் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்படவுள்ளனர்.

# கள்ள நோட்டுக்களை அச்சிட்டு விநியோகித்தவர் கைது

கொழும்பு,நவ.24

கள்ள நோட்டுக்களை அச் சிட்டு நாடு முழுவதும் விநியோகித்து வந்த சந்தேகநபர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரிடம் இருந்து 1000 ரூபா இருபது கள்ள நோட்டு களை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கெஸ்பேவ பகுதியில் வைத்து குறித்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கள்ள நோட்டு அச்சிடப் பயன்படுத்தப்பட்ட உபகரணம், கள்ள முத்திரைகள் 49, போலி தற்காலிக சாரதி அனுமதிப் பத்திரம், போலி மணல் அகழ்வு அனுமதிப்பத்திரம் உள்ளிட்ட பலவற்றை பொலிஸார் சந்தேக நபரிடம் இருந்து கைப்பற்றியுள்ளனர்.

சந்தேகநபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகள் மூலம் அவர் 30 லட்சம் ரூபா கள்ள நோட்டுக் களை இதுவரை அச்சிட்டுள்ளதாகத் தெரிய வந்துள்ளது. (வ)


## உளம் கனிந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்



21.11.2011 திங்கட்கிழமை BMICH
கொழும்பு மண்ட
பத்தல் பேராதனைப்
பல்கலைக்கழகத்தினால் நடத்தப்
பட்ட பட்டமளிப்பு விழாவில்
கலைமாணிப்பட்டம் பெற்ற
ஆசிரியை
செல்வி
**விஜிகலா தர்மராசா**
(யா/சங்கரத்தை சின்னம்மா
வித்தியாலயம்)
அவர்களை மேலும் மேலும்
கல்வியுலகில் உயர்பட்டங்கள்
பெற்று பார்போற்ற சகல
செல்வப் பேறும் பெற்று வாழ
வாழ்த்துகின்றோம்.

*உளம் கனிந்து வாழ்த்துவோர்:*
க.நித்தியானந்தன்,
திருமதி நி.பராசக்தி,
பிள்ளைகள்,
(சித்தி, சித்தப்பா) குடும்பத்தினர்.

பன்னாலை,
தெல்லிப்பழை.
(சங்குவேலி).
(0758)(2-6-9)



## அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்



அருணாசலம் கயிலாயபிள்ளை
(B.A. Hons, PGDE, M.Ed., SLPS-I S.L.E.A.S. III)



இராமலிங்கம் கயிலைநாதன்
(B.A., PGDE, S.L.P.S. I)

(C/2869)

எமது கல்லூரியின் அதிபர் அருணாசலம் கயிலாயபிள்ளை அவர்களும் முன்னாள் அதிபர் இராமலிங்கம் கயிலைநாதன் அவர்களும் 16.11.2011 அன்று சாவகச்சேரி மாவட்ட நீதிபதி உயர்திரு மா.கணேசராசா முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதிவான்களாக பதவிப் பிரமாணம் செய்து கொண்டமையையிட்டு அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.

யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி. பழைய மாணவர் சங்கம்



## கண்ணீர் அஞ்சலி



கைதடி வீரகத்திப் பிள்ளையார்
கோயில் பரிபாலனசபையின் பரம்
பரைத் தலைவர்களில் ஒருவரும்,
கைதடி தென்கிழக்கைப் பிறப்பிட
மாகவும் லண்டன் மாநகரை
வதிவிடமாகவும்ள கொண்ட
அமரர் **காமலாஷ்சி**
**சுந்தரலிங்கம்** அவர்கள்
16.11.2011 புதன்கிழமை லண்டனில்
சிவபதமடைந்தார்.
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
வீரகத்தி விநாயகப் பெருமானை வேண்டுவதுடன்
அவரது குடும்பத்தினருக்கும், உறவினருக்கும்
நண்பர்களுக்கும் எம ஆழ்ந்த அனுதாபத்தைத்
தெரிவித்துக்கொள்கின்றோம்.
**நம்பிக்கை பொறுப்பாளர் பரிபாலன சபை,**
**வீரகத்தி பிள்ளையார் கோயில்,**
**கைதடி.**



## 6ஆம் ஆண்டு நினைவலைகள்

**அமரர் சின்னையா சிவகரன்**

தோற்றம்
02.04.1980



*6 ஆண்டுகள் சென்றென்ன*
*60 ஆண்டுகள் சென்றாலும்*
*ஆறாது நம் துயரம்*
*அன்பின் உறைவிடமாய்*
*பாசத்தின் இருப்பிடமாய்*
*குடும்பத்தின் ஒளி விளக்காய்,*
*நல்லதொரு பிள்ளையாய்*
*உலகில் நீ சிறந்து வர*
*காலனவன் உன் உயிரை*
*கவர்ந்துதான் சென்றதென்ன?*
*கை கூப்பி நின்றவனும்*
*கைவிட்டுப் போனதென்ன?*
*நீ உலகில் சிறந்து வரக்*
*காலனவன் கண்பட்டு*
*எமைக் கலங்க வைத்ததேனோ?*
*என்றும் இறையுலகில் இனிது வாழ*
*இறைவனை நாம் இறைஞ்சுகின்றோம்.*

மறைவு
01.12.2005

என்றும் உங்கள் நினைவில் வாழ்ந்து
கொண்டிருக்கும் அம்மா, அப்பா,
சகோதரர்கள், மனைவி, மகன், அம்மம்மா.

*அளவெட்டி வடக்கு,*
*அளவெட்டி.*

# கூரையில்லா வீடுகளில் மக்கள் தவிக்கையில் கிளிநொச்சியில் யாருக்கு விமான நிலையம்?

"ஜனாதிபதி நுவரெலியாவிலும் இரணைமடுவிலும் விமான நிலையங்களை அமைக்கப் போவதாகக் கூறுகின்றார். வானில் விமானங்கள் பறந்தால் இன்னும் கூட கிளிநொச்சி மக்கள் அச்சத்துடன் ஓடி மறைந்து கொள்கின்றனர். அங்கே புலிகள் அமைத்த ஓடு பாதைகள் இருக்கின்றன. அவற்றைத்தான் ஜனாதிபதி விமான நிலையமாக்கப் போகிறார். ஆனால், இந்தப் பிரதேச மக்கள் இன்னும் கூரைகள் இல்லாத கொட்டகைகளில் தான் வாழுகின்றனர்.

"இந்த மக்களுக்கு இப்பொழுது அதிமுக்கியமானது வீடுகளே தவிர விமான நிலையங்கள் அல்ல. இந்த மக்களுக்கு வீடுகளைக் கட்டிக்கொடுக்க முடியாத அரசு, குடிசைகளுக்கு மத்தியில் விமான நிலையத்தை விரிவாக்க கோடிக்கணக்கில் பணத்தை வாரி இறைக்கிறது. இது தேவைதானா?"

-- இவ்வாறு கேள்வி எழுப்பினார் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினரான ஆர்.யோகராஜன்.

அரசின் அடுத்த ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கை மீதான இரண்டாவது நாள் விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

நாடாளுமன்றம் நேற்றுக் காலை 9.30 மணிக்குப் பிரதி சபாநாயகர் சந்திம வீரக்கொடி தலைமையில் கூடியது. ஜனாதிபதியினால் முன்வைக்கப்பட்ட நிதி நிலை அறிக்கை மீதான இரண்டாவது நாள் விவாதத்தை ஐ.தே.க. பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க ஆரம்பித்து வைத்தார்.

**ஏமாற்றம் அளித்த பொய்யான அறிக்கை**

"ஜனாதிபதியினால் முன்வைக்கப்பட்டுள்ள நிதி நிலை அறிக்கையில் எந்தவிதமான புதுமையும் இல்லை. பழைய பல்லவியையே பாடி உள்ளார்.

"போர் முடிந்து விட்டது; போர்ச் செலவுகள் குறைந்து விட்டன. எனவே அபிவிருத்திக்குக் கூடுதல் நிதி வழங்கப்படும் என்று மக்கள் எதிர்பார்த்தனர். ஆனால் ஜனாதிபதியோ வரவு-செலவுத் திட்டத்துக்கு முன்னரே மக்களின் அன்றாடத் தேவைகள் மற்றும் அத்தியாவசியப் பொருள்களின் விலைகளை எல்லாம் அதிகரித்து விட்டார். கல்வி, சுகாதாரம், மீள்குடியமர்வு போன்ற விடயங்களுக்குப் போதிய நிதி ஒதுக்கப்படவில்லை.

"ஜனாதிபதி நாட்டு மக்களை ஏமாற்றிவிட்டார். மக்கள் மீது மேலும் சுமைகளைச் சுமத்தி உள்ளார்" என்றார் திஸ்ஸ அத்தநாயக்க.

**ஆளும் கட்சியினர் இடையூறு**

நேற்றைய அமர்வின்போது ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் உருப்படியான கருத்துக்களை கூறுவதை விடுத்து, எதிர்க் கட்சியினர் பேசும்போது இடையூறுகளைத்தான் அதிகம் விளைவித்துக் கொண்டிருந்தனர்.

**சிங்களத்தில் மட்டுமா? அது சட்ட விரோதம்**

வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின்போது ஐ.தே.க. உறுப்பினர் தயாசிறி ஜயசேகர ஒரு சர்ச்சையைக் கிளப்பினார். "தேசிய கீதத்தைச் சிங்களத்தில் மட்டும்தான் பாடமுடியும் என்று ஒரு சட்டம் கொண்டு வரப்பட்டுள்ளதாக அறிகிறோம். அது உண்மையா? அது உண்மையானால் ஏனைய இன மக்களுக்கும் சிங்கள மக்களுக்கும் இடையில் மோதல்களையும் கசப்புணர்வையும் ஏற்படுத்தும் அல்லவா?" என்று கேட்டார் அவர்.

**சில அதிகார வர்க்கத்தினரின் தன்னிச்சையான செயல்**

"இல்லை. அப்படியான ஒரு திட்டம் எம்மிடம் இல்லை. யாழ்ப்பாணத்தில் சில அதிகாரிகளின் தன்னிச்சையான செயல்களினால்தான் இந்தப் பிரச்சினை ஏற்பட்டது. சிங்களத்தில் மட்டும்தான் தேசிய கீதத்தைப் பாடவேண்டும் என்று எவராவது கட்டாயப்படுத்தினால் அது சட்டவிரோதமானது" என்றார் தேசிய மொழிகள் சமூக ஒருங்கிணைப்பு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார.

**எல்லாச் சலுகைகளும் பொலிஸாருக்கு இல்லை**

தயாசிறி ஜயசேகர மற்றொரு கேள்வியை எழுப்பினார். அதாவது "கடந்த காலப் போரின் போது முப்படையினருடன் பொலிஸாரும் பெரும் பங்களிப்பை வழங்கி உள்ளனர். ஆனால் படையினருக்கு வழங்கப்படும் சலுகைகள் எல்லாம் பொலிஸாருக்குக் கிடைப்பதில்லை. போரில் ஊனமுற்ற பொலிஸார் எத்தனையோ பேருக்கு, படையினரைப் போன்ற கொடுப்பனவுகள் எவையும் கொடுக்கப்படவில்லை. ஏன் இந்தப் பாரபட்சம்? இந்தக் கொடுப்பனவுகளை அரசு வழங்குமா?" என்றார்.

பதிலளித்த பிரதமர், "உங்களுக்குக் கிடைத்த தகவல் பிழையானது. போரின் போது 1317 பொலிஸார் ஊனமுற்றனர். இவர்களுக்கும் படையினருக்கு வழங்கப்பட்ட அனைத்துக் கொடுப்பனவுகளும் வழங்கப்பட்டுள்ளன. படையினர் சிறப்பு வேலைத் திட்டத்திற்கு




உட்பட்டவர்கள். பொலிஸார் பொதுமக்கள் சேவகர்கள். இதனால் சில சலுகைகள் இவர்களுக்குக் கிடைப்பதில்லை" என்றார்.

**குண்டர்களால் ஆளப்படும் இலங்கை நாடாளுமன்றம்**

"ஆளும் கட்சி உறுப்பினர்கள் எதிர்க் கட்சியினரிடமிருந்து பெரும் விவாதம் ஒன்றை எதிர்பார்ப்பார்கள். ஆனால், இங்கோ நடப்பது வேறு. எதிர்க் கட்சி உறுப்பினர்கள் பேசும்போது கூட்டமாக கூச்சல்போட்டு இடையூறு செய்கிறார்கள். பின்னர் எப்படி எம்மால் பேசமுடியும்? ஆனால், எதிர்க் கட்சியினர் பேசவில்லை என்று தாங்கள் கவலைப்படுகிறார்கள் என்பதுபோல் பாசாங்கு செய்கிறார்கள். எந்த ஒரு கட்சியினருக்கும் நாடாளுமன்றத்தில் ஆதரவையோ எதிர்ப்பையோ காட்ட உரிமையுண்டு. ஆனால் இங்கோ அமைதியாக எங்கள் எதிர்ப்பைக்கூடக் காட்ட முடியவில்லை" என்றார் ஐ.தே.க. உறுப்பினர் அகிலவிராஜ் காரியவாசம்.

அவர் இதனைக் கூறிக்கொண்டிருந்த போதும் ஆளும் தரப்பின் பின் வரிசையினர் கூச்சல் போடுவதை நிறுத்தியபாடாக இல்லை. தொடர்ந்தும் இடையூறு செய்து கொண்டே இருந்தனர்.

எனினும் ஆளும் கட்சி உறுப்பினரான அச்சல ஜயகொட மட்டும் ஓர் உண்மையை ஒப்புக் கொண்டார். அதாவது ஐ.தே.க. ஆட்சியில் இருந்தபோது தாங்கள் ஆர்ப்பாட்டங்களை நாடாளுமன்றத்தில் நடத்தியிருந்தார்கள் என்று அவர் ஒப்புக் கொண்டார். "நாங்களும் முன்பு ஆர்ப்பாட்டங்களைச் செய்தோம் தான். ஆனால் ஜனாதிபதியோ நிதி அமைச்சரோ நிதி நிலை அறிக்கை சமர்ப்பித்து உரையாற்றும்போது இப்படியான ஆர்ப்பாட்டங்களை நடத்தவில்லை" என்றார் அவர்.

எதிர்க் கட்சியினர் ஜனாதிபதியை அவமதிப்பது போன்று திட்டமிட்டுச் செயற்பட்டனர் என்று அவர் குற்றஞ்சாட்டினார். உடனே குறுக்கிட்ட எதிர்க் கட்சியினர் "நீங்கள் சவப்பெட்டிகளையும் மலர் வளையங்களையும் சபைக்குள் கொண்டு வரலாம். நாங்கள் காட்போட் மட்டைகளைக் கொண்டு வரக்கூடாதா" என்று கூச்சலிட்டனர்.

"நாங்களும் செய்தோம் தான். ஆனால் ஜனாதிபதியின் முன்னால் செய்யவில்லை" என்று கூறிச் சமாளித்துவிட்டார் அச்சல.

**அமைச்சர்களுக்கா விமான நிலையம்**

எதிர்க்கட்சி உறுப்பினர் ஆர்.யோகராஜன் ஜனாதிபதியின் வரவு-செலவுத் திட்டத்தை வன்மையாக விமர்சித்தார். வழங்கிய வாக்குறுதிகளைக் கூட நிறைவேற்றத் திராணி இல்லாத அரசு என்று பட்டியல் போட்டுக் காட்டினார்.

"நுவரெலியாவுக்கு இப்போதும் சிறு விமான சேவை நடக்கிறது. அதில் பத்துப் பேர் மட்டுமே செல்ல முடியும். அமைச்சர்களும் அதிகாரிகளும் தான் அவற்றில் இதுவரை பயணம் செய்திருக்கிறார்கள். விவசாயிகளோ தொழிலாளர்களோ அந்த விமானத்தில் செல்வதில்லை. இந்த விமான நிலையத்துக்காகச் செலவிடப்பட உள்ள பல கோடி ரூபாவைத் தொழிலாளர்களின் வீடமைப்புத் திட்டங்களுக்குப் பயன்படுத்த வேண்டும்" என்றார் யோகராஜன்.

"நாடாளுமன்றத்தில் கடந்த திங்கட்கிழமை ஜனாதிபதி உரையாற்றிக் கொண்டிருந்தபோது, முஷ்டியை முறுக்கிக் கொண்டு மல்யுத்தம் புரிந்த ஆளும் கட்சி உறுப்பினர்கள் சிலர் நாடாளுமன்றத்திற்கு வெளியே வந்து கூறிய காரணம் வேடிக்கையானது. ஜனாதிபதியை மகிழ்ச்சிப்படுத்தவே தாங்கள் நாடாளுமன்றத்தில் சண்டித்தனம் காட்டினார்கள் என்று அவர்கள் கூறி மகிழ்ச்சிப்பட்டுக் கொண்டனர்" என்று சுட்டிக் காட்டினார் வசந்த அலுவிகார.

**படையினருக்கு நட்டஈடு! பொதுமக்களுக்கு கிடையாது!!**

மட்டக்களப்பு மாவட்டத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.யோகேஸ்வரன் ஒரு முக்கியமான வேண்டுகோளை நாடாளுமன்றத்தில் விடுத்தார். "போரின்போது ஊனமடைந்த படையினருக்கும் பொலிஸாருக்கும் நட்டஈடு வழங்க வரவு-செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனால், அதேவேளை 30 ஆயிரத்துக்கும் அதிகமான பொது மக்களும் இந்தப் போரினால் அங்கவீனர்களாக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கும் மனிதாபிமான அடிப்படையில் நட்டஈடு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்றார்.

இந்த வரவு-செலவுத் திட்டத்தில் மதுபான மற்றும் சிகரெட் வரிகள் அதிகரிக்கப்படவில்லை என்பதைச் சுட்டிக்காட்டிய யோகேஸ்வரன், அவற்றை அதிகரித்து அதன் மூலம் கிடைக்கும் பணத்தை மக்கள் நலத் திட்டங்களுக்கு அரசு செலவிட வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

(உ)

# எம்.பிக்களின் குடும்பங்களுக்குக் காப்புறுதி; வருடம் 70 லட்சம் என்கிறது கூட்டுத்தாபனம்

கொழும்பு, நவ. 24

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் காப்புறுதியை அவர்களது குடும்பங்களுக்கும் விஸ்தரிப்பதாயின், வருடாந்தம் 70 லட்ச ரூபாவைக் கட்டணமாக செலுத்த வேண்டும் என இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் நாடாளுமன்ற அலுவல்கள் அமைச்சுக்கு தெரிவித்துள்ளது.

நாடாளுமன்ற அலுவல்கள் அமைச்சு தற்போது நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள காப்புறுதியை அவர்களது குடும்பத்தினருக்கும் விஸ்தரிக்கக் கூடிய சாத்தியக்கூறுகள் பற்றி தெரிவிக்குமாறு கேட்டமையையடுத்தே காப்புறுதிக் கூட்டுத்தாபனம் இந்த விளக் கத்தைக் கொடுத்துள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு உச்சபட்சமாக 2 இலட்ச ரூபா காப்புறுதி வழங்கப்பட்டுள்ளது. இதற்கான கட்டணத்தை நாடாளுமன்ற அலுவல்கள் அமைச்சே செலுத்துகிறது.

தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள காப்புறுதியைத் தங்கள் குடும்பத்தினருக்கும் விஸ்தரிக்குமாறு ஏராளமானவர்கள் நாடாளுமன்ற அலுவல்கள் அமைச்சர் திருமதி. சுமேதா ஜீ.ஜயசேனவிடம் வேண்டுகோள் விடுத்ததையடுத்தே அமைச்சர் காப்புறுதித் திணைக்களத்திடம் மேற்படி விளக்கத்தைக் கோரினார்.

# நாட்டுக்கு இன்னும் இருக்கிறது ஆபத்து அதனால்தான் பாதுகாப்புக்கு அதிக நிதி!

கொழும்பு, நவ. 24

இலங்கைக்கு இன்னமும் ஆபத்து இருப்பதால் பாதுகாப்புக்கு அதிக நிதியை ஒதுக்குவதை விட வேறு வழி ஏதும் இல்லை என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அலரிமாளிகையில் நேற்றுப் பிற்பகல், கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக் கழகத்தின் பட்டமளிப்பு விழாவில் கலந்து கொண்டு பட்டங்களை வழங்கினார் ஜனாதிபதி.

"இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் விடுதலைப் புலிகளைத் தோற்கடித்தபோதும், இலங்கை எதிர் கொள்ளும் சவால்கள் இன்னமும் முடிவுக்கு வரவில்லை. 'வெள்ளைக்கொடி' குற்றச்சாட்டை இன்னமும் எதிர்கொள்ள வேண்டியுள்ளது" என்று அவர் தனது உரையில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையின் பெயரைக் கெடுக்கும் வகையில் தொலைக்காட்சி ஆவணப் படங்களை ஒளிபரப்புகின்றனர், இலங்கையின் இராணுவ மற்றும் அரசியல் தலைவர்கள் மீது அனைத்துலக நீதிமன்றத்தில் குற்றச் சாட்டுகளைச் சுமத்த முனைகின்றனர்.

அமெரிக்காவுக்கு, பிரிட்டனுக்கு அல்லது ஆஸ்திரேலியாவுக்கு நாம் செல்லும் போது நெருக்கடிகளைச் சமாளிக்க வேண்டியுள்ளது.

பாதுகாப்பு அமைச்சுக்கு எதற்காக பெருந்தொகை நிதி ஒதுக்கப்படுகிறது என்று எதிர்க் கட்சிகள் கேள்வி எழுப்புகின்றன.

இலங்கைக்கு எதிரான உள்நாட்டு வெளிநாட்டு சக்திகளை எதிர்கொள்வதற்கு, ஆயுதப் படைகளுக்கு சம்பளங்கள், மேலதிக படிகளை வழங்குவதற்கு, படையினரின் குடும்பங்களுக்கான நலத்திட்டங்களுக்கு, நாட்டின் இறைமையையும் அமைதியையும் பாதுகாப்பதற்காக உயிரைக் கொடுத்த படையினரின் பெற்றோருக்கு உதவிகளை வழங்குவதற்கு என்று நிதி தேவையாக உள்ளது. இதற்கெல்லாம் தான் நிதி ஒதுக்கப்படுகிறது - என்றார் அவர்.

(உ)

## ஆரோக்கியமற்றது

தொடர்பாடல் தொழில் நுட்பத்துறையில் மிகவும் முக்கியமான அம்சமாகத் திகழ்வது இணையம். இதுவும் கணினியின் வரவால் எமக்கு அறிமுகமாகிய விடயம் தான். ஆயினும் இன்று எல்லோராலும் ஒதுக்கப்படுகின்ற ஒரு தொடர்பாடல் சாதனமாக மாறியுள்ளது. இந்த இணையமானது முதன்முதலாக அமெரிக்கப் பாதுகாப்புத் துறையில் துப்பறியும் பிரிவின் செயற்பாட்டிற்கெனவே அறிமுகம் செய்யப்பட்டது.

ஆனால் இணையத்தை இன்றைய இளம் சமுதாயத்தினர் தவறான முறையில் கையாள்கின்றனர். ஆபாசப்படங்கள் பார்த்தல், பேஸ்புக் பாவனை போன்ற பாவனைகளின் மூலம் இளம் சமுதாயத்தினர் இணையத்தில் நல்லவற்றைப் புறந்தள்ளி விட்டு தீயவற்றை எடுத்துக் கொள்கின்றார்கள்.

பேஸ்புக் பாவனையால் தவறான தொடர்பு கள் ஏற்படுகின்றன. இது போன்ற பிரச்சினைகளால் இணையப் பாவனையாளர்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்.

அதிகளவு பாதிக்கப்படுவோர் இளம் சமுதாயத்தினரே. பேஸ்புக் நண்பர்களின் தகவல்களுக்கு அடிமைப்பட்டு பல இளம் சமுதாயத்தினர் பல பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றனர்.

''அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு'' என்பது போல கூடிய இணையப் பாவனையில் தவறான நடத்தையில் ஈடுபடுகின்றனர்.எனவே இன்றைய இளம் சமுதாயத்தினரின் இணையப் பாவனை ஆரோக்கியமற்றது என்பதை எவரும் மறுப்பதற்கில்லை.

நா.நிதர்ஷா,
சாவகச்சேரி.

## ஆரோக்கியமானது

இளம் சமுதாயத்தின் இணையப் பாவனை என்றவுடன் எமது நாட்டில் அதிலும் யாழ்ப்பாணத்தில் ஒரு தவறான எண்ணம் மக்கள் மனதில் உருவாகியுள்ளது. இளையோராகிய நாம் அவ்வாறானதொரு சூழ்நிலையை உருவாக்கி விட்டிருக்கின்றோம்.

இன்று எமது நாட்டின் இதயத்துடிப்பு இளையோர் சமூகம் அவர்களை பல்துறை விற்பனர்களாக ஆக்குவதில் இணையம் முக்கிய பங்கினை ஆற்றுகின்றது. Face book மூலமாக இளையோர்கள் ஏமாற்றப்படுகிறார்கள் என்கிறார்களே! இதன் மூலம் தொடர்பாடல் திறன், மொழி, நல்ல தொடர்புகள் போன்றவற்றை வளம்படுத்தமுடியும். இதிலிருந்து காதல் கதைகள், ஆபாச வசனங்கள் உங்களுக்கு வரும் போது நீங்களும் உடனே யார் என்று கூடத் தெரியாமல் பதிலை Type பண்ணுவது பின் ஏமாற்றிவிட்டார்கள் என்று தம்பட்டம் அடிப்பது. இது எந்த வகையில் பொருத்தம்?

இன்று வளர்ந்து வரும் தொழில்நுட்பவியல் உலகில் இளையோர் தம்மை ஒரு உதாரண புருஷர்களாக எதிர்கால சந்ததியினருக்கு காண்பிப்பதற்கு இணையம் எல்லா வகையிலும் உதவுகிறது என்பதில் எவ்வித ஐயமுமில்லை. இன்றைய இளம் சமூகம் நாளைய தலைவர்களாக உருவாக இணையப் பாவனை எப்போதும் ஆரோக்கியமானதே.

ஏஞ்சல் றக்ஷனா இராசதுரை
27/17, புங்கன்குளம் வீதி.

## இளவல்கள் வட்டம் வாக்குச் சீட்டு

**இன்றைய இலங்கையின் கல்வி முறை**

| ஆக்கபூர்வமானது | ஆக்கபூர்வமற்றது |
|---|---|
| ☐ | ☐ |

பெயர்: ..............................

முகவரி: ..............................

அடையாள அட்டை இல..

..............................

உங்கள் தீர்ப்புக்களை 29.12.2011 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவும். இந்த வாக்குச் சீட்டுடன் அனுப்பப்படும் வாக்குகள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.

# இன்றைய இளம் சமுதாயத்தின் இணையப் பாவனை...




# வன்முறையைக் கட்டுப்படுத்தும் பொறுப்பு அனைவருக்கும் உண்டு

''மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம்'' என்ற வீரமுழக்கம் செய்த புரட்சிக்கவி பாரதியாரின் கூற்றுக்கிணங்க பெண்கள் தொடர்பான அழுத்தங்களை நோக்கு போது பெண்கள் மீதான வன்முறை அதிகரிப்புக்கு பொதுமக்கள்தான் காரணம். பொது மக்களின் கண் முன் அநியாயம் நடந்தாலும் எதுவுமே நடக்காது போல தங்கள் வேலைகளை மட்டும் பார்த்துக் கொள்கிறார்கள். எங்களுக்கு ஏன் வீண் பிரச்சினை என்ற சுயநல எண்ணத்துடன் கண்முன் நடக்கின்ற அநியாயங்களைத் தட்டிக் கேட்காமல் விலகிப் போவதனால் தான் பெண்கள் மீதான வன்முறைகளும் வன்முறை புரிவோர்களும் தலைவிரித்து ஆடுகின்றார்கள்.

சமுதாயம் என்பது ஒரு கூட்டுக் குடும்பம்தான். அந்தக் குடும்பத்தில் ஒருவருக்குப் பிரச்சினை ஏற்பட்டால் அனைவருக்கும் அது பிரச்சினை தான். அதேபோல் சமுதாயத்தில் ஒருவருக்கு ஏற்படும் பிரச்சினைகளை அனைவரும் ஒன்று சேர்ந்து துணிந்து எதிர்த்து நின்றால் பெண்கள் மீதான வன்முறைகள் தவிர்க்கப்படும்; தடுக்கப்படும்.

மாலை வேளைகளில் வீதிகளில் கூட்டம் கூட்டமாக நின்று அரட்டையடிக்கும் வாலிபர்களாலும் மதுபோதையில் தள்ளாடும் வயோதிபர்களாலும் பெண்களைத் துச்சமாக மதிக்கும் ஆண்வர்க்கத்தினராலும் இன்று பெண்கள் பெரியளவில் வன்முறைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

பொதுமக்கள் மட்டுமன்றி பெற்றோரும் தங்கள் பிள்ளைகளைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். கல்விபயிலும் மாணவர்கள் தனியார் கல்வி நிறுவனங்களுக்கு மாலை வேளைகளில் தனியாகச் சென்று வருவதும் வன்முறை அதிகரிப்புக்கு ஒரு காரணமாக விளங்குகிறது.

எனவே பெற்றோர்கள் மாலை வேளைகளில் பிள்ளைகளை தனியே செல்லவிடாது, தங்களின் பாதுகாப்பு நிழலில் அழைத்து வருவதனால் வன்முறைகளைத் தவிர்ப்பதுடன் உங்கள் பிள்ளைகளையும் பாதுகாத்துக்கொள்ள முடியும். பெண்கள் மீதான வன்முறைகளுக்கு பெண்களும் ஒரு வகையில் காரணமாக அமைகின்றார்கள். அவர்களின் அறியாமையும், எதிர்கால விளைவுகளை எண்ணிப் பார்க்காமல் உணர்ச்சிகளுக்கு அடிமையாகின்ற செயற்பாடுகளிலும் அவர்கள் மீதான வன்முறைகளுக்கு காரணமாகவும் அமைகின்றன.

எனவே எதிர் காலத்தில் முத்துக் களாய் மிளிரப் போகும் பெண்களே! உணர்ச்சிகளுக்கும், அறியாமைக்கும் இடமளிக்கும் உங்கள் வசந்தமான எதிர்காலத்தை இருள்மயமாக்கி விடாமல் எச்சரிக்கையுடனும் அவதானத்துடனும் செயற்பட்டு உங்கள் மீது பிரயோகிக்கப்படும் வன்முறைகளைப் புத்திசாலித்தனத்துடனும், சாமர்த்தியத்துடனும் வெற்றிகொண்டு உங்களை நீங்களே பாதுகாத்துக் கொள்ளுங்கள்.

ஆத்மீகா பகவத்சிங்,
நீர்வேலி.





### ஒன்றை மறப்பதற்கு...

ஒன்றை மறப்பதற்கு
ஒன்றை நாடினால்
கன்றை மறப்பதற்கு
பசுவாங்கிய கதைதான்
மதுவை மறப்பதற்கு
மங்கையை தேடினால்
மதுவும் மங்கையும்
மயானத்துக்கு
வழிகாட்டுவர்.

ச.கம்சிகா,
சரசாலை வடக்கு.

### பாதை மாறிய தடங்கள்

பயணம் ஒன்று நான் போனேன்
பழைமை கண்ட தடயம் வழி
கிராமம் தாண்டி நகரம் வந்தேன்
கிழிந்து போன இதயத்துடன்
சுற்று முற்றும் தேடி நின்றேன்
சுற்றமதை அங்கு காணாததால்
திக்கது மாறினேனோ- இல்லை
திசைதான் வேறானதோ...!
என்னவர் பண்பாட்டைக் காணவில்லை
எங்களூர் மொழியுமது விக்கி நிற்கின்றது
நல்ல வேளை என் நகரமதைத் தாண்டவில்லை
தாண்டிச் சென்றிருந்தால் மோகமது
என்னைத் தீண்டியிருக்குமே!
பாரதியின் குழந்தைகளே- உங்கள்
பாதையது சரிதானா?
சற்றே, திரும்பிப் பாருங்களேன்
சான்றோர் வாழ்வியலைப் படியுங்களேன்.

ம.பிரதாயினி,
வடமராட்சி.

### தாஜ்மஹால்

மும்தாஜின் மூச்சுக் காற்றை
ஷாஜகான் தன்
இதயத்தில் இருந்து தரையில்
இறக்கி வைத்தான்- அது
தாஜ்மஹால் ஆனது

ச.கம்சிகா,
யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

## இயற்கை

கடவுள் கொடுத்த
காணிக்கையாய் காலையில்
உதிக்கும் கதிரவன்
கண்மூடாமல்
காத்திருக்கும் காலவன்
வானம் கொடுத்த
வசந்தமாய் வண்ணமாய் வானவில்
மேகம் கொடுத்த
முத்தமாய் மிளிரும் மின்னல்
இடி கொடுத்த
சத்தமாய் பொழியும் ஈரமழை
பூமி கொடுத்த
புன்னகையால் புனிதமான மலர்கள்
அலைகள் கொடுத்த
தாலாட்டாய் உறங்கும் ஆழ்கடல்
அருவிகள் கொடுத்த
அழகான ஆறுகள்
இன்பம் கொடுத்த
நிலவாய் இரவில் வருகின்ற ஒளியாய்
இறைவன் கொடுத்த
நன் கொடையாய்
கிடைத்த இயற்கையே
நமக்கெல்லாம்
பெருங்கொடையே!

வி.சிவா,
ஐங்கரன் வீதி,சுதுமலை தெற்கு,
மானிப்பாய்.



### இளைஞர், யுவதிகளே!

உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும் பிரச்சினைகள் பற்றிப் பேசவும் தேடல்களுக்குத் தீனி போடவும் 'இளவல்கள் வட்டம்' என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இந்தப் பகுதிக்கான உங்கள் படைப்புக்களையும் ஏதாவது சந்தேகங்களையும் விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.

*'இளவல்கள் வட்டம்',*
*'உதயன்',*
*361, கஸ்தூரியார் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

பெயர் : ..............................

முகவரி : ..............................

..............................

.................. திகதி

.................. கையொப்பம்

# தோட்டத் தொழிலாளர்கள் பட்ஜெட்டில் புறக்கணிப்பு

## தொழிலாளர் விடுதலை முன்னணியின் தலைவர்

நுவரெலியா, நவ.24

2012 இற்கான பட்ஜெட் பெருந்தோட்ட தொழிலாளர்களை ஏமாற்றிவிட்டது. தொழிலாளர்கள், உழைப்பாளர்களை மதிக்காத நாடு எத்தனை அழகான மாயாஜால வித்தைகளுடன் வரவு - செலவுத் திட்டத்தை சமர்ப்பித்தாலும் செழிப்படையாது - இவ்வாறு தொழிலாளர் விடுதலை முன்னணியின் தலைவர் டி. அய்யாத்துரை தெரிவித்துள்ளார்.

அடுத்த ஆண்டுக்கான வரவு - செலவு திட்டம் குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

நாடு செழிப்படைய மக்கள் மகிழ்வுடன் வாழ, இனங்களுக்கிடையே சமத்துவம், சகோதரத்துவம் மேலோங்க அறுபதாண்டுகளாக மக்களை ஆட்டிப் படைக்கும் இனப்பிரச்சினைக்கு புதிய அரசமைப்பு மூலம் தீர்வு காணப்படவேண்டும்.

இந்த நாட்டின் செழிப்புக்காக, பொருளாதார வளர்ச்சிக்காக இருநூறு ஆண்டுகளாக உழைக்கும் பெருந்தோட்டத் தொழிலாளர்கள் மதிக்கப்படவேண்டும். பாதுகாக்கப்படவேண்டும். அவர்களின் வறுமை, பசி, பட்டினி நீங்க நிவாரணம் வேண்டும்.

நாட்டில் அறுபதாண்டுகளுக்கு மேலாக ஆண்டுதோறும் சமர்ப்பிக்கப்படும் வரவு - செலவுத் திட்டம் பெருந்தோட்டத் தொழிலாளர்களைப் புறந்தள்ளியே வந்துள்ளதைப் போன்று இந்தாண்டு வரவு - செலவு திட்டமும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இதுவொரு பாரபட்சமான வரவு - செலவு திட்டமாகும்.

நாட்டின் அபிவிருத்தி, பாதுகாப்பு தொழில்துறை தொழிலாளர்கள், தனியார்துறை பற்றியெல்லாம் கவனித்து சம்பள உயர்வு - நிவாரணம் வழங்கும் அரசு தோட்டத் தொழில்துறையில் உடலுழைப்பு மூலம் நாட்டுக்கு பொருளாதாரத்தை பெற்றுக்கொடுக்கும் லட்சக்கணக்கான தொழிலாளர்கள் விடயத்தில் பாரபட்சம் காட்டியுள்ளது.

அந்த மக்கள் பசி, பட்டினி என்பவற்றிலிருந்து விடுபடுவதற்காக இந்த நாட்டை ஆட்சி செய்த எந்தவொரு அரசும் வரவு - செலவு திட்டம் மூலம் நிவாரணம் வழங்க முன்வர வில்லை - நடவடிக்கை எடுக்கவும் இல்லை.

தோட்ட முதலாளிகளும், கம்பனிகளும் கொடுக்கும் அரைச் சம்பளத்திலிருந்து மீட்சி பெற - நல்வாழ்வு வாழ அந்த மக்களுக்கு வழியுமில்லை.

ஒரு நாடு செழிக்க, பொருளாதார மேன்மையடைய இனங்களுக்கிடையே சமத்துவம், சகோதரத்துவம் ஏற்பட வேண்டும். இனங்களுக்கிடையே ஏற்பட்டுள்ள ஏற்றத்தாழ்வு பாரபட்சம் நீங்கி வாழ இனங்களுக்கிடையே சமத்துவம் ஏற்படவேண்டும். அதற்கு இந்த நாட்டில் 65 ஆண்டுகளுக்கு மேலாக புரையோடிப்போய்க் கிடக்கும் இனப்பிரச்சினைக்கு அரசமைப்பு மூலம் நீதியான தீர்வுகாணப்பட வேண்டும்- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# சர்வதேசத்துக்கு பலத்தைக் காட்ட குழப்பத்தை ஏற்படுத்திய ஐ.தே.க.

## விமல் வீரவன்ச குற்றச்சாட்டு

கேகாலை, நவ.24



வெளிநாட்டு இராஜதந்திரிகள் பார்க்க வேண்டும் என்பதற்காக ஐக்கிய தேசியக்கட்சி நாடாளுமன்றில் குழப்பம் ஏற்படுத்தியதாகத் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச குற்றம் சாட்டியுள்ளார்.

கேகாலைப் பிரதேசத்தில் வீடமைப்புத் திட்டமொன்றின் அங்குரார்ப்பண நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நாட்டின் எதிர்க்கட்சி பலவீனமானது என்பது மக்கள் புரிந்து கொண்டுள்ள நிலையில் வெளிநாட்டு இராஜதந்திரிகளிடம் தமது பலத்தைக் காண்பிக்க இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்றில் எதிர்ப்பை வெளியிட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

வரவு- செலவுத் திட்ட யோசனை தொடர்பான உரை ஆரம்பிக்கப்பட்டதும் ஐக்கிய தேசியக் கட்சி எதிர்ப்பை வெளியிட்டதாகத் தெரிவித்துள்ளார்.

வரவு- செலவுத் திட்டத்தின் நன்மை, தீமைகளை அறிந்து கொள்ளாது எதிர்ப்பை வெளியிடுவது எந்த வகையிலும் ஏற்றுக் கொள்ள முடியாது.

நாட்டை அபிவிருத்தி செய்யும் அரசின் நடவடிக்கைகளைக் கண்டு ஐக்கிய தேசியக் கட்சி வெட்கமடைந்துள்ளது என்று அவர் மேலும் சுட்டிக் காட்டியுள்ளார். (ச)

# வெண் சந்தனம் வைத்திருந்தவர் கைது

வெண் சந்தனம் 30 கிலோவை சட்ட விரோதமாக தன்வசம் வைத்திருந்த நபரொருவரை வெலிமடை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

சட்டவிரோதமான முறையில் நீண்டகாலமாக வெண் சந்தனம் கடத்தும் வியாபாரத்தில் ஈடுபட்ட நபர் தொடர்பாகக் கிடைக்கப்பெற்ற தகவலொன்றின் அடிப்படையில் வெலிமடை, அராவோவ பகு திக்குச் சென்ற பொலிஸ் குழு சந்தேகநபரைக் கைதுசெய்ததுடன் 30 கிலோ எடையுள்ள வெண் சந்தனத்தையும் கைப்பற்றியுள்ளனர்.(ச)

# கொள்ளை போனதாக முறையிட்ட கணக்காளரே பின்னர் கைதானார்

## சம்பளப் பணத்தை மோசடி செய்தவர் அவரே

நிவித்திகல,நவ.24

நிவித்திகலதேல நகருக் கருகில் அமைந்துள்ள அடைத் தொழிற்சாலை ஊழியர்களுக்கு சம்பளம் வழங்குவதற்காக இரத்தினபுரி நகரில் உள்ள தனியார் வங்கியொன்றில் இருந்து எடுத்துவரப்பட்ட 20 லட்சம் ரூபா பணம் கொள்ளையடிக்கப்பட்டதாக இரத்தினபுரி பொலிஸில் பொய் முறைப்பாடு கொடுத்த அந்த தொழிற்சாலையின் கணக்காளர் கைது செய்யப்பட்டுள்ளார்.

வங்கியில் இருந்துதான் பணத்தைப் பெற்றுக்கொண்டு வாகனத்தில் ஏறி வந்தபோது தன்னைத் தொடர்ந்து மோட்டார் சைக்கிளில் வந்தவர் குருவிட்ட பிரதேசத்தில் தன்னை வழிமறித்து பணப்பையை பறித்துக் கொண்டு மோட்டார் சைக்கிளில் தப்பிச் சென்று விட்டார் என இந்த கணக்காளர் செய்த முறைப்பாடு பொய் யென விசாரணைகளின்போது தெரிய வந்துள்ளது. விசாரணைகளின்போது இந்தப்பணம் கணக்காளரின் வங்கிக் கணக்கொன்றில் வைப்பில் இடப்பட்டுள்ளமை தெரிய வந்தது.

இரத்தினபுரி பொலிஸார் மேலதிக விசாரணை நடத்தி வருகின்றனர். (ச)



இலங்கைக்கான பிரித்தானிய தூதர் ஜோன் ரேங்கினுக்கும் கல்முனை முதல்வர் சிராஸ் மீராசாஹிபுக்கும் இடையில் அம்பாறை விமான நிலையத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை சந்திப்பு இடம்பெற்றது.

# பேரிடர் ஆய்வுக் குழுவினர் கிழக்கு மாகாணத்தில்

ஐக்கிய நாடுகளின் பேரிடர் தொடர்பான தகவல் சேகரிப்பு, ஆய்வு தொடர்பான குழுவினர் கிழக்கு மாகாணத்திற்குச் சென்று அங்குள்ள அரச, அரசசார்பற்ற நிறுவனத் தலைவர்களைச் சந்தித்துக் கலந்துரையாடி வருகின்றனர்.

இந்தக் குழுவினர் எஹெட் கரித்தாஸ்நிறுவனத்தின் அனர்த்த முன்னாயத்த நடவடிக்கைகளுக்கான குழுவினரை கோட்டைக் கல்லாற்றில் கடந்த திங்கட்கிழமை சந்தித்துக் கலந்துரையாடினர். இந்தச் சந்திப்பில் அனர்த்தம் தொடர்பான பல்வேறு விடயங்கள் இங்கு ஆராயப்பட்டன என்று எஹெட் கரித்தாஸ் நிறுவனத்தின் ஊடக இணைப்பாளர் மைக்கல் தெரிவித்தார்.

# மட்டக்களப்பில் அடைமழை; வெள்ளத்தில் மூழ்கும் வீடுகள்



மட்டக்களப்பு,நவ.24

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த சில நாள்களாக தொடர்ச்சியாகப் பெய்துவரும் அடை மழை காரணமாக அந்த மாவட்டத்தின் பல பகுதிகளில் வெள்ளம் ஏற்பட்டுள்ளதுடன், வீடுகள் பலவும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

கடந்த மூன்று நாள்களில் இந்த மாவட்டத்தில் 140 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளதாக மாவட்ட வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.

ஆரையம்பதி, வெல்லாவெளி, ஏறாவூர், காத்தான்குடி, செங்கலடி, கொக்கட்டிச்சோலை உட்பட பல பிரதேச செயலகப் பிரிவுகளில் மழைநீர் நிறைந்துள்ளது. அத்துடன், மழையுடன் கூடிய கடும் காற்று காரணமாக பல இடங்களில் வீடுகளும் சேதமடைந்துள்ளன. (ச)

# வீதி ஒழுங்குகளைப் பின்பற்றாமையே விபத்துகளுக்குப் பிரதான காரணம்

## அக்கரைப்பற்று போக்குவரத்துப் பிரிவு தெரிவிப்பு

அக்கரைப்பற்று,நவ.24

அக்கரைப்பற்றுப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரதேசங்களில் கடந்த 2010 ஆம் ஆண்டு 65 வீதி விபத்துகள் இடம் பெற்றன. ஆனால், இந்த வருடம் நிறைவடைவதற்குள் 87 வீதி விபத்துகள் நிகழ்ந்துள்ளன. இந்த வருடம் இடம் பெற்ற விபத்துகளில்7 பேர் மரணமடைந்தனர். இந்த விபத்துகளுக்கெல்லாம் பிரதான காரணம், வீதி ஒழுங்குகளைப் பின்பற்றாமையே என்று அக்கரைப்பற்று பொலிஸ் நிலையத்தின் போக்குவரத்துப் பிரிவு பொறுப்பதிகாரி ஏ.ஜே. சலாம் தெரிவித்தார்.

வீதி விபத்துகளில் பலியானவர்களுக்கு மௌன அஞ்சலி செலுத்தும் தேசிய நிகழ்வையொட்டி அட்டாளைச்சேனை பிரதேச சபையின் ஏற்பாட்டில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவித்தாவது:

வீதி ஒழுங்கைப் பின்பற்றினால் வீதி விபத்துகள் இடம்பெறுவது கணிசமான அளவு குறைவடையும். குறிப்பாக, தலைக்கவசம் அணிய வேண்டும். அவ்வாறு அணிவதால் வீதி விபத்தின் போது பாதூரமான காயங்கள் ஏற்படாமல் தப்பிக்கமுடியும் - என்றார். (ச)

# குருநாகல் நகரில் புதிய போக்குவரத்து நடைமுறை

குருநாகல் நகரில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள புதிய போக்குவரத்து நடைமுறையின்படி பாதசாரிகள் கடிகாரக் கோபுரத்திற்கு அருகிலுள்ள சுரங்கப் பாதையை கட்டாயமாகப் பயன்படுத்த வேண்டும் என்று குருநாகல் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் வாஸ் குணவர்தன தெரிவித்தார்.

நகரிலுள்ள சகல பிரதான பாதைகளுக்குமான வழிகள் சுரங்கத்தில் அமைக்கப்பட்டுள்ளன.

எனினும், அதிகமான பாதசாரிகள் அந்தப் பாதையைப் பயன்படுத்துவதில்லை. எனவே, இனிமேல் கண்ட கண்ட இடங்களில் பாதையைக் கடப்பதற்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளது - என்றும் அவர் தெரிவித்தார்.

# 8 ஆவது ஆண்டு நிறைவு தினமும்

# ✚ சுஜீவா

வைத்
(சுஜீவா தாய்
கல
(தட்டாதெருச் சந்திக்கும்

அனுராதபுரம் களத்தாவ, ஈரற்பெரியகுளம்,நேரியகுளம், தருமபுரம், வவுனிக்குளம், காரைநகர் முதலிய இடங்களில் இயங்கி வந்ததும் பல நூற்றாண்டுகளுக்கு முற்பட்ட எமது பரம்பரைகளுக்குரிய ஓலைச் சுவடிகளிலுள்ள வைத்திய நுணுக்கங்கள், எமக்குக் கிடைத்த பல வைத்திய மேதைகளின் (நல்லூர் அரசர்கள் செகராச சேகரன் பரராஜசேகரன் உட்பட) கைகண்ட வைத்திய முறைகள், யாழ்ப்பாணம் லங்கா சித்த ஆயுள் வேத வைத்தியக் கல்லூரியின் ஆசான்கள் தந்த மருத்துவ முறைகள் என்பவை ஒருங்கிணைக்கப்பட்டதால் உருவான அதி சிறந்த சித்த ஆயுள் வேத நுணுக்கங்கள் மூலமாகவும், எம்மால் தயாரிக்கப்பட்ட மருந்துகள், இலங்கை மற்றும் இந்தியாவில் நன்கு செயற்படக் கூடியதெனப் பெயர் பெற்றவைகளில் தெரிந்தெடுக்கப்பட்டு தருவிக்கப்பட்ட பக்க விளைவற்ற இயற்கை மருந்துகள் மூலமாகவும் மாற்ற முடியாது எனக் கருதி கைவிடப்பட்ட வியாதிகளை (வாதம், முட்டு, குடற்புண், தோல்நோய், சிறுநீரக கல், முடிஉதிரல்)நீக்குவதில் பெயர் பெற்றதும் குழந்தையின்மைக்கான சிகிச்சையில் நூற்றுக்கணக்கான குழந்தைகளை உருவாக்கி இலங்கையின் பல்வேறு மாவட்டங்களிலிருந்தும் நோயாளர் வருமளவுக்கு பிரசித்தி பெற்றதுமான எமது வைத்தியசாலை கலட்டி அம்மன் வீதியில் ஆரம்பிக்கப்பட்டு இன்றுடன் 8 வருடங்கள் பூர்த்தியாகிறது.

எமது வைத்தியசாலையில் தாய்மைப் பேற்றுப்பிரிவு புதிதாக அமையவிருக்குமிடத்தில் பூர்வாங்க அத்திபார கிரியைகள் அடிக்கல் நாட்டுதல் பொதுக் கூட்டம் என்பவற்றுடன் எமது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று உருவாகிய குழந்தைகளில் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்பட்ட 10 குழந்தைகளுக்கு பராம்பரிய சித்த ஆயுள்வேத வைத்திய முறைகளை ஊக்குவிக்குமுகமாக பரிசில்கள் வழங்கல் என்பன 14.10.2011 அன்று இடம்பெற்றது.

இதில் விருந்தினர்களாக சுதேச வைத்திய அமைச்சர் சாலிந்த திஸாநாயக்க, தேசிய வைத்திய பிரதியமைச்சர் பண்டு பண்டாரநாயக்க நாடாளுமன்ற உறுப்பினர் சி ல்வஸ்ரர் அலன்ரீன் (உதயன்) அமைச்சின் செயலாளர் பந்துல தகநாயக்க, ஆயுள்வேத ஆணையாளர் பாலித வீரக்கோன்,கொழும்பு தேசிய ஆயுள்வேத போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் தென்னக்கோன், யாழ். தொழில் நுட்பக் கல்லூரி, மற்றும் வட இலங்கை சுதேச மருத்துவசபைப் பணிப்பாளர் பேராசிரியர் ந. யோகராஜன் ஆகியோருடன் வடஇலங்கை சுதேச மருத்துவ சபை பணிப்பாளர் Dr. சு. ஸ்ரீவிக்னேஸ்வரா, யாழ்ப்பாணம், லங்கா சித்த ஆயுள்வேத மருத்துவக் கல்லூரி அதிபர் திருமதி க. பரமசிவம்,பிரதேச செயலர் , J/100 கிராமசேவையாளர் க. பஞ்சலிங்கம், பா. கிசோக்குமார் உட்பட பொது சுகாதார பரிசோதகர்கள், வைத்தியர்கள், வைத்திய மாணவர்கள் பிரமுகர்கள் உட்பட ஆயிரக் கணக்கானோர் கலந்து கொண்டனர். இதுவொரு வைத்தியத் துறை சார்ந்த நிகழ்ச்சி என்பதால் உதயன் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட அழைப்பைத் தவிர நேரடியான அழைப்புகள் விடுக்கவில்லை. வைத்திய சேவையாலும் விழா ஆயத்தங்களாலும் இது ஏற்பட்டது. தெரிந்திருந்தால் நாமும் கலந்து கொண்டிருப்போம் என்ற ஆதங்கம் எம்மீது அன்பு கொண்ட நல்லுள்ளங்கள் மத்தியிலிருந்து கிளம்பியதை காணக்கூடியதாக இருந்தது. இதை சிறிய நிகழ்வாக ஏற்பாடு செய்த போதிலும் பெரிதாக பரிணமித்து இருப்பது இறைவன் செயலே. அன்றைய தினம் வருகை தந்த அனைத்து அன்புள்ளங்களுக்கும் என்றும் எமது மனமார்ந்த நன்றிகள்.


யாகத்தின் போது வைத்திய ருடன் தாயார் திருமதி ப.ஜெயசோதி அவர்கள். இதில் சிவஸ்ரீ து. விவேகானந்தக் குருக்களுடன் சிவஸ்ரீ பிரணவன்சர்மா, சிவஸ்ரீ விசாகரத்னக் குருக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.


இந்துமத கிரியைகள். சிவஸ்ரீ.து.விவேகானந்தக் குருக்களுடன் வைத்தியர் திருமதி ச.ஜெயலன்.


பௌத்த
மீகஹஜந்
க.ஒ.இரா



விருந்தினர்களுக்குத் தலைப்பாகை அணிவி
சுஜீவா வைத்தியசாலை நோக்கிய பயணம் ஆ
அணிவித்தும் மிகச் சிறப்பான வரவேற்பு வழங்



மங்கல விளக்கேற்றல் - யாழ்.தொழில்நுட்பக் கல்லூரி மற்றும் வட இலங்கை சுதேச வைத்தியசபைப் பணிப்பாளர்


அமைச்சர் மங்கல விளக்கேற்றல்


அமைச்சர் அடிக்கல் நடுதல்


பிரதி அமைச்சர் அடிக்கல் நடுதல்


அமைச்சின் செயலாளர்


ஆ


வைத்தியர்
ஜெ.ஜெயலன்
DAM.RIMP Regd
No. 13461
7 ஆவது பரம்பரை
மருத்துவர்.

வைத்தியர்
திருமதி. ச. ஜெயலன்
DAM.RIMP Regd
No. 12128
25 ஆவது பரம்பரை
மருத்துவர்




# ம் அடிக்கல் நடும் விழா நன்றி தெரிவிப்பும்

# வைத்தியசாலை

த்தியசாலை பதிவு இலக்கம் - ஆயு/யாப/ம.சா/63
பெருமைப்பேற்று சிறப்பு சித்த ஆயுள்வேத வைத்தியசாலை)
லட்டி அம்மன் வீதி, K.K.S. வீதி, யாழ்ப்பாணம்.
ம் நாச்சிமார் கோயிலுக்குமிடையில்) T.P. 0775594147, 0215685333


த்தமத கிரியைகள். ஸ்ரீ நாகவிகாரை வண. றஜந்துரே சிறிவிமல தேரருடன் வைத்தியர் இராஜரத்னம்.


கலட்டி எச்சாட்டி மகாமாரியம்மன் ஆலய முன்றிலில் விருந்தினர்கள் வைத்தியர் ஜெ.ஜெயலன் அவர்களால் வரவேற்கப்பட்டபோது.


கோயிலில் விசேட பூஜையின்போது சிவஸ்ரீ விசாகரதனக் குருக்கள்


வைத்தியசாலை வாசலில் பொன்னாடைகள் போர்க்கப்பட்டு வரவேற்கப்பட்ட போது.




விக்கப்பட்டு மங்கல வாத்தியங்கள் முழங்க அங்கு திரண்டிருந்த ஆயிரக்கணக்கானோர் சகிதம் ஆரம்பிக்கப்பட்டது. இதன் போது பாதையின் இருமருங்கிலும் மலர்கள் தூவியும் பூரண கும்பங்கள் வைத்தும் மலர் மாலைகள் ழங்கப்பட்ட போது.


மங்கல விளக்கேற்றல் - கொழும்பு தேசிய ஆயுள்வேத போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் தென்னக்கோன்.


அமைச்சர் நினைவுக் கல்லைத் திறந்து வைக்கும்போது


வைத்தியர் உரையாற்றுகிறார்


அமைச்சர் உரையாற்றுகிறார்


பிரதி அமைச்சர் உரையாற்றுகிறார்


ஆயுள் வேத ஆணையாளர்


அமைச்சர் எமது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று உருவாகிய குழந்தைகளுக்குப் பரிசு வழங்குகிறார்




தேசிய வைத்திய பிரதியமைச்சர் பரிசு வழங்குகிறார்


ஆச்சரியப்படும் வகையில் இன்றைய தினமே (14.10.2011) முதலாவது பிறந்ததினமாகவுள்ள குழந்தைக்கு நாடாளுமன்ற உறுப்பினர் உதயன் அவர்கள் பரிசு வழங்குகிறார்.


வைத்தியர்
க. ஓ. இராஜரட்ணம்
RIMP Regd No. 6067
24 ஆவது பரம்பரை மருத்துவர்.

திருமதி.
ப. ஜெயசோதி
ஓய்வுபெற்ற பிரபல கணித ஆசிரியை



## சேவை நேரம்

காலை 7.00 மணிமுதல் 11.00 மணி வரை
மாலை 3.00 மணிமுதல் 7.00மணி வரை
(வெள்ளிக்கிழமை விடுமுறை தினம்.)

(10724) (2-6-9)



நீர்வேலி பண்பாட்டு விழா அண்மையில் இடம் பெற்றது. இதில் குறித்த கிராமத்தைச் சேர்ந்த ஆறுபேருக்கு 'நீர்வைக் குரிசில்' எனும் விருது வழங்கப்பட்டது. எழுத்துப் பணிக்கு சிவஸ்ரீ.கு.தியாகராஜக் குருக்களுக்கும் பல்துறைக்கு த.பரராஜசிங்கத்துக்கும் மரச் சிற்பத்துக்கு செல்லையா விஸ்வலிங்கத்துக்கும் மகளிர் எழுச்சிக்கு ருக்மணி ஆனந்த வேலுக்கும் ஆன்மீகப் பணிக்கு கந்தையா முருகையாவுக்கும் கூத்துக்கு செ.சிதம்பரநாதனுக்கும் இந்த விருதுகள் வழங்கப்பட்டுள்ளன. விருது பெற்ற கலைஞர்கள் ஒரே மேடையில். (ம-38)

# பெற்றோர்களின் கௌரவப் பரீட்சையாக மாறிவிட்டது புலமைப் பரிசில் பரீட்சை

## கிளிநொச்சி புனித தெரேசாள் அதிபர் கவலை

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை, மாணவர்களின் பரீட்சையாக இல்லாது பெற்றோர்களின் கௌரவப் பரீட்சையாகவே உள்ளது. இந்த நிலை மாற வேண்டும்.

கிளிநொச்சி புனித பெண்கள் திரேசா கல்லூரி அதிபர் திருமதி ஜெயந்தினி தனபாலசிங்கம் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு மதிப்பளிக்கும் நிகழ்வு கிளிநொச்சி புனித பெண்கள் திரேசா கல்லூரியில் அண்மையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றும் போது தெரிவித்ததாவது:

கடந்த காலங்களிலும் எமது பாடசாலை மாணவர்கள் கல்வியில் உயர் புள்ளிகளைப் பெற்று பாடசாலைக்கும் மாவட்டத்துக்கும் பெருமை சேர்த்துள்ளார்கள்.

அதுபோல் இவ்வாண்டும் இவர்கள் பெருமை சேர்த்துள்ளனர். இங்கு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற இந்த மாணவர்களின் கால்கோள் விழா நடக்கின்ற போது பெரும் அச்சத்துடன் தான் இடம்பெறும்.

இதனையடுத்து இந்த மாணவர்களின் அரைவாசிக் காலங்கள் இடப்பெயர்வு நலன் புரி நிலையவாழ்க்கை என்று போய் விட்டது. எனினும் நல்ல பெறுபேறுகளை எமது மாணவர்கள் பெற்றுள்ளனர்.

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை என்பது இன்று மாணவர்களின் பரீட்சை என்று இல்லாமல் பெற்றோர்களின் கௌரவப் பரீட்சையாக மாறியுள்ளது. இந்த நிலை மாற வேண்டும்.-என்றார்.

நிகழ்வில் முன்னதாக சித்தியடைந்த மற்றும் நூறு புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களும் முதன்மை விருந்தினர்களும் மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டு பிரதான மண்டபத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

நிகழ்வில் கிளிநொச்சி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர்களான தங்கேஸ்வரி தவசோதி, பெ.கணேசன், கிராம அலுவலர், அயற்பாடசாலை அதிபர்கள் , வங்கி உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ம-6)

# சமாதான நீதிவான்

வரணி, நவ.24

சாவகச்சேரியைச் சேர்ந்த அருணசலம் கயிலாயபிள்ளை அண்மையில் அகில இலங்கை சமாதான நீதிவானாக நீதி அமைச்சால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

சாவகச்சேரி மாவட்ட நீதிபதி உயர்திரு மா.கணேசராசா முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. இவர் சாவகச்சேரி இந்துக் கல்லூரி முதல்வருமாவார். (ம-122)

* * *

வரணி, நவ.24

மீசாலை விக்கினேஸ்வர வித்தியாலய அதிபர் தம்பிராசா அம்பலவாணர் சமாதான நீதிவானாக நீதி அமைச்சால் நியமனம் பெற்றுள்ளார்.

கடந்த 16.11.2011 புதன் கிழமை சாவகச்சேரி மாவட்ட நீதிமன்ற நீதிபதி மா.கணேசராசா முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார். (ம-122)

# எழுத்தாளருக்கு வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டும்

யாழ்ப்பாணம், நவ.24

சமூகத்தை மேம்படுத்தும் சிறந்த கருத்துக்களை எழுதும் எழுத்தாளர்களுக்கு அதற்கான வாய்ப்புகளை வழங்க முன்வர வேண்டும்.

பொது மக்களின் ஒத்துழைப்புக் கிடைக்கும் போது தான் அவை மக்களை உரிய வகையில் சென்றடையும்.

இவ்வாறு தெரிவித்தார் தென்மராட்சிக் கல்வி வலயத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி.

குப்பிளான் சண்முகம் எழுதிய ''உதிரிகளும்'' சிறு கதைத் தொகுப்பு நூலின் அறிமுக விழா குப்பிளான் வீரமனை கௌரியம்பாள் ஆலய மண்டபத்தில் கிராம அலுவலர் சோ.பரமநாதன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து வாழ்த்துரை நிகழ்த்தும் போது தெரிவித்ததாவது:

பொது மக்களின் நலன் கருதியே எழுத்தாளர்கள் தமது எழுத்தின் மூலம் கருத்துக்களை முன்வைக்கின்றார்கள். சமூகத்தில் நடைபெறும் ஒவ்வொரு விடயங்களையும் எழுத்தின் மூலம் வெளிக் கொணர முடியும்.

இவ்வாறு சிறந்த சமூக நோக்குடன் செயலாற்றும் எழுத்தாளர்களுக்கு அதிக பட்ச வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டும். அத்துடன் அவர்களுக்கு மதிப்பு அளிக்கப்பட வேண்டும்.

எழுத்தாளர்கள் சமூகத்தால் வரவேற்கப்படும் போது இன்னும் பல கருத்துக்களை சமூகத்துக்கு எடுத்துக் கூற வேண்டும் என நினைப்பார்கள்.

எனவே, ஒவ்வொரு பிரதேசங்களிலும் மறைமுகமாகத் தமது கருத்துக்களை வெளிப்படுத்தும் எழுத்தாளர்களை இனங்கண்டு அவர்களை ஊக்கப்படுத்த வேண்டும். - என்றார். (ம-313-38)

# விளையாட்டுத்துறையில் ஆர்வம் காட்டாத யாழ். பல்கலைக்கழக மாணவர்கள்

## துணைவேந்தர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ.24

பல்கலைக்கழகத்தில் மாணவர்கள் கல்வியில் மட்டும் தமது ஆர்வத்தைக் காட்டாமல் விளையாட்டுத்துறையிலும் தம்மை ஈடுபடுத்தவேண்டும்.

ஏனெனில் விளையாட்டு உடல், உள ஆரோக்கியத்தை மேம்படுத்துவதுடன் போட்டியுடன் கூடிய கற்றல் செயற்பாடுகளுக்கும் வழிவகுக்கும்.

இவ்வாறு தெரிவித்தார் யாழ்.பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் விளையாட்டு அவையால் நடத்தப்பட்ட அகில இலங்கை பல்கலைக்கழகங்களுக்கு இடையேயான விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்றோரைக் கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் யாழ்.பல்கலைக்கழக மைதானத்தில் உள்ள உடற்கல்வி அலகில் இடம்பெற்றது.

அவையின் தலைவர் சி.கோபிநாத் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்தும் போதே அவர் தெரிவித்தார். அவர் தொடர்ந்து உரை நிகழ்த்தும் போது தெரிவித்ததாவது;

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தில் நான்காயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் கற்கின்ற போதும் விளையாட்டில் பங்கு கொள்ளும் மாணவர்களின் எண்ணிக்கை மிகக் குறைவாகவே உள்ளது.

மாணவர்களின் திறன்களை விருத்திசெய்யக் கல்வி எந்தளவுக்கு உதவுகின்றதோ அதனைப் போல் விளையாட்டுத் துறையும் முக்கியமானதாகும். உடல், உளம் சார்ந்த ஆரோக்கியத்துக்கு இது பெரிதும் துணை நிற்கின்றது.

எனவே மாணவர்கள் தமது ஆளுமையை வளர்த்துக் கொள்ளும் சிறந்த வழிகளைக் கையாள வேண்டும் என்றார். (ம-313-86)

# கிராம ரீதியான வரலாறுகளை இறுவட்டில் ஆவணப்படுத்தி வைப்பது சிறந்தது

## கல்வி அமைச்சின் செயலாளர் உரை

சுன்னாகம், நவ.24

கிராம ரீதியான வரலாறுகளை ஆவணப்படுத்துவதற்கு இறுவட்டு வெளியீடு செய்தல் சிறந்த உபாயமாகும். நீர்வேலியின் வரலாற்றைப் புலம்பெயர் தேசத்தவரும் உணரும் வகையில் அழ கொளிரும் நீர்வேலி என்ற இறுவட்டு ஆவணப்படுத்தியிருக்கிறது எனப் புகழாரம் சூட்டினார் வடக்கு மாகாணக் கல்வி, பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளரும், கௌரவ ஆளுநரின் செயலாளருமாகிய இ.இளங்கோவன்.

நீர்வேலி கலை பண்பாட்டு மன்றம் நடத்திய பெருவிழா கடந்த சனிக் கிழமை நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் கோயில் முன்றிலில் சிவசங்கர பண்டிதர் பெயரில் அமைந்த அரங்கில் இ.குணநாதன் தலைமையில் இடம்பெற்றது.

இதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர் குறிப்பிட்டதாவது:

இன்று புலம்பெயர்ந்து சென்ற எம் தேசத்தவரை எம்முடன் இணைத்துவைத்திருப்பதற்கு இத்தகைய இறுவட்டுக்கள் துணை செய்கின்றன. கொட்டும் மழையின் மத்தியிலும் விழாவை நடத்துவோம் என்ற துணிச்சலுடன் மிக நீண்ட பந்தலில் ஆயிரக்கணக்கான மக்கள் கூடியிருப்பதைப் பார்க்கும்போது கலைகள் மீதான இக்கிராமத்தின் ஈடுபாட்டையும் ஒற்றுமையுணர்வையும் அறியமுடிகிறது.

விழாக்கள் ஒப்புக்கு நடத்தப்படுகின்ற நிலைமை சில இடங்களில் காணப்படுகிறது. ஆனால் கலைகளை வெளிக் கொணரவும், மூத்த கலைஞர்களைக் கௌரவிக்கவும் உணர்வு பூர்வமான ஈடுபாட்டோடு எடுக்கப்பட்ட விழாவாக இது இருக்கிறது.-என்றார்.

முன்னதாக நீர்வேலி சிவசங்கர பண்டிதர் சனசமூக நிலையத்தில் இருந்து வரவேற்பு ஊர்வலம் இடம்பெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினர்களாகச் செயலாளர் இளங்கோவனும் அவர் துணைவியார் திருமதி கிருபாகரி இளங்கோவனும் கலந்து கொண்டனர்.

சிறப்பு விருந்தினர்களாக பிரதேச செயலர் ம.பிரதீபன், மற்றும் மத்திய வங்கியின் வடபிராந்திய முகாமையாளர் சி.கௌரிசங்கர், கிளிநொச்சி மாவட்ட விவசாயப் பணிப்பாளர் க.சதீஸ்கரன், யாழ். செயலகக் கணக்காளர் ச.குகதாஸ் மற்றும் வலி. கிழக்கு கலாசார உத்தி யோகத்தர் அ.மிலாசினி ஆகியோர் கலந்து கொண்டனர். (ம-38-26)

# வாழ்வாதாரத்தை உயர்த்தும் நெடுந்தீவு தையல் நிலையம்

வறுமைக்கோட்டுக்குக் கீழ் உள்ள குடும்பங்களைச் சேர்ந்த நாற்பத்து ஆறு யுவதிகளுக்கு இப்பொழுது மாதம் ஒன்றுக்கு வருமானமாக ஒன்பதாயிரம் ரூபா முதல் பத்தாயிரம் ரூபாவரை கிடைக்கிறது என்பதால் குடும்பத்தில் உள்ள அனைவருமே ஓரளவு நிம்மதிப் பெருமூச்சு விடத்தான் செய்வார்கள். குடும்பச் செலவுக்கு இது ஓர் உதவியும் ஆறுதலும் என்கிறார் நெடுந்தீவு ஆடை உற்பத்தி நிலையத்தில் பணியாற்றும் யுவதிகள்.

கிராமங்கள் தோறும் காணப்படும் மூலவளங்களைப் பயன்படுத்தி சிறு தொழில்மையங்களை உருவாக்குவதன் மூலம் அந்தக் கிராமத்து மக்களின் வாழ்வாதாரத்துக்கு ஓரளவு பயன்கள் கிடைக்கும். நெடுந்தீவைப் பொறுத்த வரை அங்கு பனை வளங்கள், கடல் வளங்கள் காணப்பட்ட போதும் அங்குள்ள மக்கள் அவற்றினூடாகத் தமது வாழ்வாதாரங்களைப் பெருக்கிக் கொள்ளக் வடியதான தொழிற்சாலைகள் இல்லை என்பது ஒரு பெரிய குறை. சிறிய தொழிற்சாலைகளை உருவாக்கி கஷ்டப்பட்ட மக்களுக்குக் கைகொடுக்கக் கூடிய வாய்ப்புக்களை வழங்க வேண்டும் என்பதில் அங்குள்ள சங்கங்களுக்கும் அக்கறை கிடையாது. இந்த நிலையில் தான் நெடுந்தீவு கடற்படையினர் வறுமைக் கோட்டுக்குக் கீழ் உள்ள மக்களின் வாழ்வதாரத்தை வளப்படுத்தக் கூடியதாக நெடுந்தீவில் ஒரு தையல் நிலையத்தை அமைக்க முன்வந்துள்ளனர்.

கடற்படை தமது இந்த நோக்கத்தைச் சிறந்த முறையில் செயற்படுத்த வேண்டும் என்பதால் தையல் பயிற்சி பெற விரும்புவர்களிடம் விண்ணப்பங்களைக் கோரியது.

பயிற்சிகளினூடாகத் தொழில் வாய்ப்புகளைப் பெற முடியும் என்ற நம்பிக்கையுடன் வறுமைக் கோட்டுக்கு குடும்பங்களைச் சேர்ந்த யுவதிகள் இதற்கு விண்ணப்பித்தனர். இவற்றைப் பரிசீலனை செய்த கடற்படை அதிகாரிகள் மிகவும் வறுமைக்கோட்டுக்கு கீழ் உள்ள யுவதிகளைத் தெரிவு செய்து அவர்களுக்கான தையல் பயிற்சிகளை மிகவும் சிறந்த முறையில் காலியில் வழங்கி தற்போது நெடுந்தீவில் அவர்களுக்கு தொழில் வாய்ப்புகளையும் வழங்கியுள்ளனர்.



கடந்த மூன்று மாதங்களாக இந்த தையல் நிலையம் ஆரம்பிக்கப்பட்டு ஆடைகள் உற்பத்தி இடம்பெறுகின்றது. ஆரம்பத்தில் ஒருவர் வருமானமாக 7 ஆயிரத்து500 ரூபா கிடைத்தது. இரண்டு மாதங்களில் ஒருவருக்கு மாதவருமானமாக 9 ஆயிரம் ரூபா கிடைக்கின்றது. தற்போதைய உற்பத்தி கடற்படையினருக்கான சீருடைகளைத் தயாரிப்பது மட்டுமே.

இவர்களுக்கான தையல் பயிற்சியை கடற்படையைச் சேர்ந்த ஜமால்ரீன், பிரசன்ன பண்டார ஆகியோர் வழங்கியுள்ளனர். இவர்களே காலியில் ஆரம்ப பயிற்சியையும் வழங்கியவர்.

இங்கே தொழிற் புரியும் யுவதிகளில் சிலர் ஏற்கனவே நெடுந்தீவு உதவி அரச அதிபர் பணிமனையூடாக இடம்பெற்ற தையல் பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெற்றுள்ளனர்.

சிங்கர் மெஷின் உதவியு டன் பயிற்சி பெற்ற நாங்கள் மின்சார தையல் இயந்திரங்களின் மூலம் தொழில் செய்வதில் இலகுவாகவும் உள்ளது. இது இங்கே பணி செய்யும் எங்களுக்கு மகிழ்ச்சியாக உள்ளது. நாளொன்றுக்கு நூற்றி இருபத்தி ஐந்துக்கும் அதிகமான சீருடைகள் தயாரிக்கப்படுகின்றன. ஆடையின் ஒவ்வொரு பாகமும் ஒவ்வொருவரால் வடிவமைக்கப்பட்டபின் பொருத்தப்படுவதால் கூடுதலான உடைகளைத் தயாரிக்கக் கூடியதாக உள்ளது.

இந்தத் தொழிலகத்தில் நாற்பத்தி ஆறு பேர்கள் வேலை செய்தாலும் அறுபத்திதொரு இயந்திரங்கள் உள்ளன. மேலும் சிலரை இதில் இணைத்திருக்கலாம். தொழில் செய்யும் யுவதிகள் அனைவருமே மிகவும் மகிழ்ச்சியாகவும் தங்கள் சேவைகளில் கண்ணும் கருத்துமாகவும் செயற்படுகின்றார்கள். படையினர் கௌரவமாக வேலை செய்பவர்களுடன் நடந்து கொள்கிறார்கள். நெடுந்தீவு கடற்படை அதிகாரி கப்டன் சி.றூனா ரணசிங்க வறுமைக் கோட்டுக்குக் கீழ் உள்ள எல்லா மக்களுமே இதுபோன்ற தொழில் பயிற்சிகளைப் பெற்று தமது வாழ்வாதாரத்தை வளப்படுத்த பொதுத்தாபனங்கள் முன்வர வேண்டும் என்று விரும்புகிறார்.

**லக்ஸ்மன்**

தொழில் வாய்ப்புகளின்றி மிகவும் கஷ்டநிலையில் வாழ்ந்த எங்களுக்கு இந்தத் தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்டது ஒரு நல்ல சகுனமாகவே தென்படுகின்றது. மேலும் பயிற்சிகளைப் பெற்று, தொழில் வாய்ப்பைத் தேடும் மக்களுக்கும் உதவவேண்டும் எல்லோருமே வெளியிடங்களுக்குச் சென்று வெவ்வேறு தொழிற் பயிற்சிகளைப் பெறுவதென்பது கஷ்டமானது.நெடுந்தீவு ஒரு பின்தங்கிய பிரதேசம் என்பதால் வறுமைக் கோட்டுக்குக் கீழ் உள்ள பிள்ளைகள் தமது குடும்பத்துக்கு உதவக் கூடியதாக இது போன்ற தொழிற்சாலைகள் அமைப்பது அவசியம். மக்களின் கஷ்டம், துன்பங்களைத் தெரிந்து கொண்டு அப்படியான மக்களுக்கு உதவ வேண்டும் என்ற பண்பு நிறைந்த கடற்படை அதிகாரி ரணசிங்க என தையல் நிலையத்தில் பணியாற்றுபவர்கள் கூறுவது நியாயமானதே.

தற்சமயம் படையினருக்கான சீருடை மட்டுமே இங்கு தயாரிக்கப்பட்டாலும் எதிர்காலத்தில் ஏனைய ஆடை தாயாரிப்புக்களிலும் ஈடுபடக் கூடியதாக இதன் வளர்ச்சியும் வாய்ப்புக்களும் இடம்பெறவேண்டும். இங்கு பணியாற்றும் அனைத்து யுவதிகளுமே தமது திறமைகளை வெளிக்காட்டும் வகையில் தயாரிப்புக்கள் உள்ளன. ஒரு நல்ல முன்னேற்றத்தின் ஆரம்பம் இந்தத் தொழிலகம் என்பதில் சந்தேகமில்லை.

மின்பிறப்பாக்கி விற்பனைக்கு (Generator)

(10KVA)

(250KVA)


புத்தம் புதிய ஜெனரேற்றர்
(10KVA-250KVA)
வரையான அளவுகளில் கிடைக்கும்
யப்பானில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட
(Denyo) ரக ஜெனரேற்றர்கள் (10KVA - 250KVA) வரை விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: Cool Air Kings, சிறுப்பிட்டி தெற்கு, நீர்வேலி
0777738888
(C/6140)(6-9-8)

## வேலணை பிரதேச சபை

### வேலணை 2012 ஆம் ஆண்டுக்கான மீள் கேள்வி அறிவித்தல்

11.11.2011 ஆம் திகதி செய்யப்பட்ட கேள்வி அறிவித்தலின் பிரகாரம் பின்வருவனவற்றுக்கு மீள் கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கும் இறுதித்திகதி : 2011.12.07 நண்பகல் 12.00 மணி வரை
கேள்விப்பத்திரம் ஏற்றுக் கொள்ளும் திகதி: 2011.12.08 நண்பகல் 12.00மணி வரை
கேள்வி திறக்கும் திகதி: 2011.12.08 பிற்பகல் 1.30 மணி

2012 ஆம் ஆண்டுக்கான மீள் கேள்வி

| இல | குத்தகை விவரம் | மீளளிக்கப்படாத கேள்விப்படிவக் கட்டணம் (VAT தவிர) | மீளளிக்கப்படும் வைப்புப் பணம் (VAT தவிர) | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக்குறைந்த கேள்வித் தொகை (VAT தவிர) |
|---|---|---|---|---|
| | மண்டைதீவு உப அலுவலகம் | | | |
| 01. | மண்டைதீவு மீன் சந்தை | 500.00 | 5,000.00 | 11,000.00 |
| | வேலணை உப அலுவலகம் | | | |
| 01 | செட்டிப்புலம் மீன் சந்தை | 500.00 | 5,000.00 | 36,316.50 |
| 02 | அம்பிகை நகர் மீன் சந்தை | 500.00 | 5,000.00 | 29,700.00 |
| 03. | சாட்டி சிற்றூண்டி சாலை | 500.00 | 5,000.00 | 36,000.00 |
| 04. | சாட்டி வாகனத் தரிப்பிடம் | 500.00 | 5,000.00 | 150,000.00 |
| | புங்குடுதீவு உப அலுவலகம் | | | |
| 01. | குறிகட்டுவான் வாகனத் தரிப்பிடம் | 500.00 | 5,000.00 | 1,000,000.00 |
| | நயினாதீவு உப அலுவலகம் | | | |
| 01. | நயினாதீவு வடக்கு மீன் சந்தை | 500.00 | 5,000.00 | 27,500.00 |
| 02. | நயினாதீவு தெற்கு மீன் சந்தை | 500.00 | 5,000.00 | 27,500.00 |

கேள்வி சம்பந்தமான மேலதிக விவரங்களைத் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

வேலணை பிரதேச சபை,
வேலணை.
2011.11.22

சி. சிவராசா
தவிசாளர்,
வேலணை பிரதேச சபை.
(C/6135)(2-9-8)

## மரண அறிவித்தல்



### இராமன் சீதை

சரவணை ஸ்ரீசெல்வக் கதிர்காமமுருகன் ஆலயத்தின் சாமியம்மா இராமன் சீதை நேற்று (23.11.2011) புதன்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இராமனின் அன்பு மனைவியும், மாரிமுத்தன், சோதி,பாக்கியம், இராசம்மா, கனகமணி, விநாயகன், செல்லம்மா, நல்லம்மா ஆகியோரின் பாசமிகு தாயும், சின்னத்தங்கம், சண்முகம், அருஸ்தீன், அப்புத்துரை, மயில்வாகனம், பஞ்சலிங்கம், சேகர், புவனேஸ்வரி ஆகியோரின் பாசமிகு மாமியாரும், காலஞ்சென்றவர்களான கந்தையா, சதாசிவம், தெய்வி ஆகியோரின் அன்புச் சகோதரியும், செட்டி, கந்தன், ஐயன், வேலன், குமரன், அந்தோனியாள், சின்னாச்சி ஆகியோரின் மைத்துனியும், சத்தியசீலன், சத்தியநாதன், நீதி, சத்தியவாணி, தயாபரன், ஈஸ்வரி, அருணகிரி, இராசசூரி, தங்கம், வடிவேல், மல்லிகா, வளர்மதி, சசிகுமார், லோகேஸ், அருள்தேவி, பற்றிஸ்ரா, ஜீவதாஸ், ஜசிந்தா, ஜஸ்ரின், ஜெயமலர், இருதயநாயகி, பகிதரன், பாஸ்கரன், விஜியகுமார், விஜயகுமாரி, சிற்பரன், தருமரா்சா, நித்தியானந்தன், சஜேந்திரன், நளினி, பிரியதர்ஷன், பிரதாபன், சர்ண்யா, கபிலன், சாந்துஷா, பவிதா, கமின்டன், யோதிகா, துர்சிகா, ஆகியோரின் பேர்த்தியும், தூய்மா, டிகாஸ், சமிகா, விக்னேஸ்வரன், விதுஷன், விதுஷா, வைஸ் ணவி, கிருத்திகா, கிரிஜன், கபிசேக், லவனேஸ், சாந்தரூபி, டயானா, நிறோஜ், கஷ்ரோ, தனுஷன், மதுஷான், திபிசா, அனிபரசன், அபிஷான், யனிதரன், ஜென்சிகா, லோஜிகா, ஜீபிகா, சாஜன், றஜீவன், மீரா, குணாள், ஸ்ராலின், தரணிகா, புகழினி, தீபிகா, விக்னேஸ்வரி, விக்னேஸ்வரன், ரிசிகீர்தன் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24 .11.2011) வியாழக்கிழமை பி.ப.2.30 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சரவணை பொன்னங்கண்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், பக்தர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

2 ஆம் வட்டாரம்,
சரவணை மேற்கு, வேலணை.

தகவல்:
இ. விநாயகன் (மகன்)
(10722)(6/9/8)

# 'கொழும்புத் தமிழ்ச் சங்க ஒழுங்கை' பிரேரணை முன்வைப்பதற்கு தீர்மானம்

கொழும்புத் தமிழ்ச்சங்கம் அமைந்துள்ள 57ஆவது ஒழுங்கைக்கு ''கொழும்புத் தமிழ்ச் சங்க ஒழுங்கை'' எனப் பெயர் மாற்றுவதற்கான பிரேரணை ஒன்றை, அடுத்த மாதம் இடம் பெறவுள்ள கொழும்பு மாநகர சபை பொதுச் சபைக் கூட்டத்தில் முன் வைப்பதற்கு ஜனநாயக மக்கள் முன்னணியின் கொழும்பு மாநகரசபை உறுப்பினர் வேலணை வேணியன் தீர்மானித்துள்ளார்.

தனது இந்தத் தீர்மானத் துக்கு மாநகர முதல்வர் உட்பட அனைத்து உறுப்பினர்களும், மேல் மாகாண சபை முதலமைச்சர் மற்றும் உறுப்பினர்களும் ஆதரவு வழங்குவார் கள் எனத் தான் நம்புவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

70 வருடங்களுக்கும் மேல் பழைமைவாய்ந்த கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் பல்வேறு இலக்கியக் கூட்டங்களையும் மாநாடுகளை யும் நடத்துவதற்குரிய மண்டப வசதிகள் உள்ளன.

அத்துடன், 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட நூல்கள் கொண்ட பெரிய நூலகமும் காணப்படுகின்றது. எனவே, அதிகளவானோர் பயன் படுத்தும் இந்த ஒழுங்கைக்கு கொழும்புத் தமிழ்ச் சங்க ஒழுங்கை எனப் பெயர் வைப்பது பொருத்தமானதாக அமையும் என எதிர் பார்க்கப்படுகிறது.

# கற்பிட்டி பள்ளிவாசல் துறையில் வாகன விபத்தில் இருவர் பலி

கொழும்பு, நவ.24

கற்பிட்டி - பள்ளிவாசல் துறை பிரதேசத்தில் நேற்றுமுன் தினம் மாலை இடம்பெற்ற வாகனவிபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர் பலியாகியுள்ளனர்.

கற்பிட்டி பிரதேசத்தைச் சேர்ந்த 40 மற்றும் 26 வயது டைய இருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

இவர்கள் பயணித்த மோட்டார் சைக்கிள் வானொன்றுடன் மோதியதனாலேயே இந்த விபத்து சம்பவித்துள்ளது என கற்பிட்டி பொலிஸார் தெரிவித்தனர். குறித்த வானின் சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி மேபல் கண்மணி குலராஜசிங்கம்

(இளைப்பாறிய ஆசிரியை நவீல்ட் பாடசாலை, வகைநர.)



மலேசியாவைப் பிறப்பிட மாகவும் சாவகச்சேரியை வசிப் பிடமாகவும் கொண்ட திருமதி மேபல் கண்மணி குலராஜசிங் கம் (21.11.2011) திங்கட் கிழமை கர்த்தருக்குள் நித்தி ரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வண. திருமதி ஜோன் - பரராஜ சிங்கத்தின் அன்பு மகளும், காலஞ்சென்ற குலராஜசிங்கத் தின் அன்பு மனைவியும் ராஜி, மாலினி, (ஆசிரியை, நவீல்ட் பாடசாலை), சுரேஸ் (கனடா), சாமினி (கனடா), டினேஸ்(லண்டன்), பாஸ்டர் சுரேஸ்(லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயும், காலஞ்சென்ற ஜெயரஞ்சன் பீடில்ஸ், பிரின்ஸ், தேவகுமார், பவானி (கனடா), தேவ பாலன் (கனடா), விஜயந்தி(லண்டன்), ரஞ்சியா (லண்டன்), ஆகியோரின் அன்பு மாமியும், அகல்யா (கனடா), நிரோஜன் (லண் டன்), மிதிலா(லண்டன்), சிந்தியா(லண்டன்), வித்யா (பேராதனைப் பல்கலைக் கழகம்), பிரதுஷா(கனடா), பிரவீண் (கனடா), கண்ணிஷா (கனடா), சர்மியா (கனடா), விஜேஸ்(லண்டன்), அனுக்ஷி(லண்டன்), ஜோவல் (லண்டன்), நோயல் (லண்டன்), யூலியா (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் சங்கீத், சஞ்சே, பிரன், அபிகேஸ், ஏமின், கேப்ரியேல் ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதி நல்லடக்க ஆராதனை நாளை (25.11.2011) வெள்ளிக்கிழமை மு.ப. 9.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தாமஸ்கந்தோர் வீதி,
சாவகச்சேரி. (C/2871)(6/9/8)

தகவல்:
ராஜி, மாலா (மகள்)

### குரும்பசிட்டி ஆ.சி. நடராசா

(முன்னாள் அதிபர், வயாவிளான் ம.ம. வித்தியாலயம், யாழ். தினக்குரல் முன்னாள் முகாமையாளர்)



குரும்பசிட்டி ஆ.சி. நடராசா கடந்த 21.11.2011 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை-கண்ணம்மா தம்பதியரின் அன்புப் புதல்வனும், காலஞ்சென்றவர்களான கந்தையா- அன்னம்மா தம்பதியரின் மருமகனும், பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற அமரசிங்கம், குகராசா, இந்திராணி ஆகியோரின் அன்புச் சகோதரனும், வலன்ரீனா (ஆசிரியை, இந்து மகளிர் கல்லூரி), அஞ்சலா(சுவிஸ்) ஆகியோரின் அன்புத்தந்தையும், இளங்கோவன்(ஆசிரியர், மண்டைதீவு மகாவித்தியாலயம்), பிரபாகரன்(சுவிஸ்) ஆகியோரின் மாமனாரும், இலக்கியா, ஓவியா(யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை), அபினயா, சாகித்தியன் (சுவிஸ்) ஆகியோரின் பேரனும் காலஞ் சென்ற சிவபாக்கியம், சிந்தாமணி, கதிரவேலு ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24 .11.2011) வியாழக்கிழமை மு.ப.10.00 மணிக்கு அவரின் உரும்பிராய் இல்லத்தில் நடைபெற்று அஞ்சலி நிகழ்வுகளின் பின்னர் பூதவுடல் உரும்பிராய் கிழக்கு இளங்காடு மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பிரதேச சபை ஒழுங்கை,
உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய். (10770)(6.8.9)

தகவல் :
குடும்பத்தினர்.

## மன்னாரின் எரிவாயு அகழ்வின் மூலம் பொருளாதார நன்மை கிடைக்குமா?

மன்னார் எரிவாயு அகழ் வின் மூலம் பொருளாதார நன்மை கிடைக்குமா என்பது சந்தேகமே என தெரிவிக்கப்படுகிறது.

மன்னார் கடற்படுகையில் அண்மையில் எரிவாயு வளம் காணப்படுவதாக அறிவிக்கப் பட்டது. எனினும் மிகவும் ஆழத் தில் காணப்படும் இந்தக் கனிய வளம் பொருளாதார ரீதியில் பலனை அளிக்குமா என்பது சந் தேகமே என சுட்டிக்காட்டப்பட் டுள்ளது.

4,000 மீற்றர் ஆழத்தில் எரி வாயு வளம் இருப்பதாக இந்திய நிறுவனமான கெய்ரன் அறிவித்தி ருந்தது. முதல் இரண்டு எரி வாயுக் கிணறுகளிலும் பொருளா தார ரீதியில் நன்மை ஏற்படக் கூடிய வகையிலான அகழ்வு களை மேற்கொள்வதற்கான சாத்தி யங்கள் அரிது எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இதேவேளை, மூன்றாம் கிணறு ஒன்றில் அகழ்வுப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.


### வேலைக்கு ஆள் தேவை

கணக்கு வேலையில் தேர்ச்சியுடைய கம்பியூட்டரில் வேலை செய்யக் கூடியவர் தேவை.சம்பளம் பேசித் தீர்மானிக் கப்படும். நேரில் வரவும்.(இருபாலாரும்).

சுரன் ரேடர்ஸ்
130,ஸ்ரான்லிவீதி,
யாழ்ப்பாணம். (10726)

தொலை பேசி:
0212222664
0212227184

### தவறிவிட்டது

அம்மன் வீதி, சுதுமலை வடக்கு, மானிப்பாயை நிரந்தர வதிவிடமாகக் கொண்ட தம்பிப்பிள்ளை காசிலிங்கம் என்பவரது 706, பாடசாலை வீதி மட்/ மாவடிச்சேனை எனும் முகவரியினை உடைய தே.அ.அட்டை (380981831X) சுதுமலைக்கும் பழம் நகருக்கும் இடையில் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து 0776032339 உடன் தொடர்பு கொள்ளவும் சன்மானம் வழங்கப்படும். (10771)

யா/கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகா வித்தியாலயம், காரைநகர்

### பழைய மாணவர் சங்கம்

### பொதுக்கூட்ட அறிவித்தல் - 2011

இடம் : நடராஜா ஞாபகார்த்த மண்டபம்
காலம் : 04.12.2011 ஞாயிறு முற்பகல் 10 மணி
தலைவர் : பொ.சிவானந்தராஜா (அதிபர்)

பாடசாலையின் எதிர்கால வளர்ச்சி கருதி தவறாது சமுகம் தரும்படி அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

20.11.2011 - செயலாளர். (C/6141)(2-6-9)

விளம்பர அனுசரணை:
சீமாட்டி புடைவைக்கடல்
மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

### அருள்மிகு ஸ்ரீலாவண்ய காளி அம்பாள் திருக்கோயில்

### ஏகதின லட்சார்ச்சனை வைபவமும் அமாவாசை தின அபிஷேகமும்.


இன்று (24.11.2011) வியாழக்கிழமை
7.00 மணிக்கு அபிஷேகம்
8.00 மணிக்கு அர்ச்சனை ஆரம்பம்
மதியம் அன்னதானம் வழங்கப்படும்.

மேற்படி நிகழ்வுகளில் அடியவர்கள் அனைவரும் கலந்து கொண்டு அம்பாளின் திருவருளுக்குப் பாத்திரமாகுமாறு வேண்டிக்கொள்கின்றோம்.

- ஆலயக்குரு. (7853)(2-6-9)

விளம்பர அனுசரணை:
ஹோட்டல் ஓங்காரபவன்,
கண்டி வீதி, சாவகச்சேரி.


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
பாலசுப்பிரமணியம் கனகாலன்

மண்ணில்
19 ★ 03 ★ 1949

விண்ணில்
05 ★ 12 ★ 2010

குடும்பத்தின் ஒளி விளக்காய் திகழ்ந்து அன்புடனும் பண்புடனும் பாசத்துடனும் எம்மையெல்லாம் வழி நடத்தி இந்த வையகத்தில் வாழ்வாங்கு வாழ்ந்து இன்று வானுறையும் தெய்வமாகிவிட்ட எங்கள் குடும்ப விளக்கின் பாதக் கமலங்களில் இந்த மலரினை ஓராண்டு நினைவாக நினைவு கூருகின்றோம்.

பலாலி வீதி,
திருநெல்வேலி. (10772) (2-6-9)

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.




ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர்ஜி அவர்கள் அருளிய

## சஹஜ் சமாதி தியானம்

(மந்திரம் மூலம் செய்யப்படும் அதிசக்தி வாய்ந்த எளிமையான தியானம்)

இடம்: மகேஸ்வரன் மணி மண்டபம், நல்லூர்.
காலம்: 26.11.2011 சனி - 28.11.2011 திங்கள் வரை
நேரம்: பி.ப. 3 மணி

(10773) (2-6-9)

மேலும் விவரங்களுக்கு:
0777740593, 0779434879

# சைவ ஆலய அமைவிடச் சிறப்பியல்புகள் கொண்ட 'உரும்பிராய் மூன்று கோயில்' பர்வதவர்த்தனி அம்மன்



யாழ். மாவட்டத்தில் சைவ ஆலயங்கள் நிறைந்த ஊர்களில் உரும்பிராய்க்குத் தனித்துவமான சிறப்பும் முக்கியத்துவமும் உண்டு. உரும்பிராய் என்றதும் நினைவுக்கு வருவது மூன்று கோயில்கள். மூன்று கோயில்களும் ஒன்றுக்கு முன் ஒன்றாக ஒரே வரிசையில் கிழக்கு மேற்காக அமைந்துள்ளன.

பர்வதவர்த்தனி அம்மன், முருகன் அதை அடுத்து கருணாகரப் பிள்ளையார் என்று மூன்று கோயில்களும் விசாலமான சுற்றுப் பிரகாரங்களுடன் அழகுற அமைந்திருப்பதும்; அங்கு செல்லும் அனைவரையும் ஆலயத்தின் முன்பால் கவர்ந்து இழுக்கும் தெய்வீக உணர்வும் வேறு எங்கும் இல்லாத சிறப்பம்சமாகும்.

உரும்பிராய் சந்தியில் இருந்து மேற்கு நோக்கிச் செல்லும் மருதனார்மடம் வீதியின் அண்மையில் தெற்கு நோக்கிச் செல்வது ''அம்மன் வீதி''. இந்த அம்மன் என்ற சொல்லே பர்வதவர்த்தனியைக் குறித்து நிற்பதே. அம்மன் வீதியால் செல்லும் போது 400 மீற்றர் தூரத்துக்கு உள்ளே ஆலய தரிசனம் கிட்டும் ஒரே பார்வையில் மூன்று ஆலயங்களும் அடியவர்களுக்குத் தரிசனம் தரும். நடுவில் முருகப்பெருமானை முன்னிறுத்தி முருகனுக்கு முன்னாக அம்பாள் ஆலயமும் முருகனின் தென் மேற்கு வீதியில் வரலாற்றுச் சிறப்பு மிக்க கருணாகரப் பிள்ளையாரும் கோயில் கொண்டு அருள்பாலிப்பது உரும்பிராய்க்கே உரிய தனிச்சிறப்பு. ''கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம்'' என வலியுறுத்தும் சைவ சிந்தனையில் மூன்று கோயில்களும் ஒருங்கு அமைந்திருக்கும் உரும்பிராயில் குடியிருப்பவர்கள் கொடுத்து வைத்தவர்கள்.

ஆலயங்கள் அமைந்திருக்கும் அமைவிடம் மூன்று கோயில்களும் ஒருங்கே அமைந்துள்ள கண்கொள்ளாக் காட்சி ''பரத்தைப்புலம்'' குறிஞ்சிக்கு அழகு ஊட்டுவதோடு ஆத்மீக ஒளி மிளிர்வதை உணர்ந்தறியலாம். வரலாற்றுச் சிறப்பு மிக்க மூன்று கோயில்களும் முதல் தரிசனத்துக்குரியதாக பர்வதவர்த்தனி அம்பாள் தூலலிங்கமாகிய கோடி தரிசனத்துடன் கோயில் கொண்டுள்ளார்.

பர்வத வர்த்தனி அம்மன் கோயிலின் தற்போதைய பரிபாலன சபை 2004 ஆம் ஆண்டிலிருந்து ஓய்வு பெற்ற வங்கியாளர் ஏ.நாகரத்தினம் தலைமையில் செயற்படுகின்றது. மூன்று கோயில்களும் ஒருங்கே அமைந்ததன் பூர்வீக வரலாறு எத்தகையது அத்துடன் தொடர்பான கர்ணபரம்பரைக் கதைகள் ஏதும் உண்டோ என ஊர் பிரமுகர் மற்றும் ஆலயங்களின் முக்கிய நிர்வாகிகள் மற்றும் ஆலயப் பூசகர்கள் ஆகியோரிடம் தேட்டறிய முயன்ற போது ''அத்தகைய முக்கிய வரலாறு இருக்கலாம்; நாங்கள் அறியவில்லை அதனைத் தற்போது கேட்டறிவதற்கு உரிய மூத்தோர் சிவபதம் அடைந்து விட்டார்கள்'' என்பதே பதில் ''ஈழத்தமிழர்களின் ஆவணப் படுத்தலில் ஏற்பட்ட தவறுகள் ஆலயங்களின் பூர்வீகத்தைக் கூட அறிய முடியாமல் செய்து விடுகின்றது.

உரும்பிராய் பர்வதவர்த்தனி அம்மன் கோயிலின் தோற்றம் தொடர்பான காலவரையறை இது தான் என்று வரையறை செய்யப்படாமல் காலவரையறைக்கு அப்பாற்பட்டது எனக் கூறப்படுகின்றது. பூர்வீக ஆலயம் அந்நியர் படையெடுப்புக்களினால் காலத்துக்குக் காலம் இடித்தழிக்கப்பட்டு சேதமாக்கப் பட்டதும் பின்னர் ஊர் பிரமுகர்களினால் மூலமூர்த்தங்கள் ஸ்தாபனம் செய்யப் பட்டதும் பர்வதவர்த்தனி ஆலய வரலாற்றின் பூர்வீகம் தொடர்பாக விசாரித்த வேளையில் கண்டறிய முடிந்தது.

'கோயில் சிறந்த குடி சிறக்கும்' என்ற மூத்தோர் வாக்குக்கு அமைய உரும்பிராய் மூன்று கோயில்கள் சிறப்புடன் மிளிர்வதும் அதில் பர்வதவர்த்தனியின் அருளாட்சியும் உரும்பிராய்க்கே உரிய சிறப்பாகும்.

சரித்திரவியலாளர்களின் காலத்துக்கு முற்பட்டதாகவும் அவர்களின் கண்ணுக்கு எட்டாதவளாகவும் நீண்ட காலமாகக் கோயில் கொண்டு அருள்பாலிக்கும் அம்பாள் வில்வ மரத்தடியில் கோயில் கொண்டு அருள் பாலித்ததாகவும் அந்தமரம் காலத்தால் அழியாத அம்மன் அருளால் தெற்கு வீதியில் எழுந்தருளி வாசலுக்கு அருகில் இன்றும் விருட்சமாக இருப்பதைக் காணமுடிகின்றது.

வில்வ மரத்தடியில் பொங்கரவங்களை அணிகலனாகப் பூண்டு வீற்றிருந்த அன்னையின் மடியில் தவழ்ந்த பாம்புகளுக்கு பால் வார்த்து அன்னையைப் பூசித்து வந்தவர் விநாசித்தம்பி என்ற அருளாளர் என்றும் அவரின் கனவில் தோன்றிய அம்மன் ''ஆலயம் அமைத்து ஆகம விதிப்படி பூசைகள் செய்து வழிபடும் படி'' கேட்டுக் கொண்டதற்கு இணங்க சிவகுடில் அமைத்து அம்பாளுக்கு நித்திய பூசை செய்வதற்கு வரணியில் இருந்து அந்தணர் குடும்பம் ஒன்றை வரவழைத்து ஆலயச் சூழலில் குடியமர்த்தி அவர்களுக்கு ஆவன எல்லாம் வழங்கி அம்பாளுக்கு ஆகம விதிப்படி பூசை வழிபாடு செய்து வந்ததாகவும் 1930 ஆம் ஆண்டளவில் தூபியும் மண்டபங்களும் அமைக்கப்பட்டு உள் வீதியைச் சுற்றி மதிலும் வெளி வீதியைச் சுற்றி முட்கம்பி வேலிகளும் அமைக்கப்பட்டதாகவும் இந்தத் திருப்பணியை முன்னின்று அமைத்தவர் இராசா என்று அழைக்கப்பட்ட ஆறுமுகம் வேலுப்பிள்ளை என்றும் இவர் விநாசித்தம்பியின் பரம்பரை வழி வந்தவர் என்றும் கூறப்படுகின்றது.

ஞான ஆதவன்

(தொடரும்)

---

## நெஞ்சில் நீங்கா நினைவுகளில் ஏழு ஆண்டுகள்

தோற்றம்
22 ★ 12 ★ 1944



மறைவு
11 ★ 12 ★ 2004

### அமரர் பூதத்தம்பி சந்திரமௌலீசன்

(ஓய்வுபெற்ற நீதிமன்ற ஊழியர், சாவகச்சேரி)

திதி நாள்: 24.11.2011

பாசமுடன் எமைக் காத்து அனைத்தும் எமக்களித்து
எங்களுக்காக இவ்வுலகில் வாழ்ந்த எங்கள் தெய்வமே !
உங்களை நாம் இழந்து வருடங்கள் ஏழு ஆனபோதும்
எங்கள் நெஞ்சங்களில் எல்லாம் உங்கள் நினைவுகள் !
ஆண்டு பலவனாலும் மாறாது எங்களின் மனத்துயரம்
நீங்கா நினைவுகளால் என்றும் நீங்கள் எங்களுடன்

உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(7946)(2-6-9)

கைதடி நுணாவில்,
சாவகச்சேரி.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

---

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
08.08.1932



அமரர்

### கந்தசாமிப்பிள்ளை இராசரத்தினம்

(ஓய்வுபெற்ற
வல்வெட்டித்துறை
அரசினர்
வைத்தியசாலை
ஊழியர்)

உதிர்வு
09.12.2007

அன்பை ஊட்டி அறிவைப் பெருக்கி அகிலம் போற்ற எமை வளர்த்தெடுத்து
பார்புகழ சீரும் சிறப்புடனும் வாழவைத்து உங்களின் வாழ்நாள்
கனவுகள் யாவும் நனவாகிவிட்ட இவ்வேளை இன்புற்றிருக்க
நீங்கள் இல்லை ஐயா! நிலையற்ற இவ் வாழ்வுலகில்
பசுமையான உங்கள் நினைவுகளுடன்
உம் பாதையால் தொடரும் எம் பயணம்!

(8018)(8-6-9)

என்றும் உங்கள்
ஆத்ம சாந்திக்காக வேண்டி நிற்கும்
மனைவி-கனகம்மா, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

சோளங்கன் நாத்தன் தோட்டம்,
கரணவாய் மேற்கு,
கரவெட்டி.

# தபால் ஊழியர் வேலை நிறுத்தத்தால் பரீட்சை அனுமதிப் பத்திரங்கள் தாமதம்

## பாடசாலை அதிபர்கள் கூறுகின்றனர்

கொழும்பு, நவ.24

தபால் திணைக்கள தொழிற்சங்கங்கள் மேற்கொண்ட வேலைநிறுத்தத்தால் இவ் வருடம் ஜீ.சீ.ஈ சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் பரீட்சை அனுமதிப்பத்திரங்கள் இன்னும் வந்து சேரவில்லை என்று பாடசாலை அதிபர்கள் தெரிவித்துள்ளனர்.

காவத்தை பிரதேச கல்வி வலயத்துக்கு உட்பட்ட பல பாடசாலை அதிபர்கள் இது பற்றி காவத்தை பிரதான தபாலகத்துக்கு கடந்த திங்கட்கிழமை முறைப்பாடு செய்துள்ளனர்.

தபால் ஊழியர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டிருந்த சமயத்திலும் சில பாடசாலைகளுக்கு பரீட்சை பிரவேசப் பத்திரங்கள் கிடைத்துள்ளன. எனினும், பெரும்பாலான பாடசாலைகளுக்கு அவை இன்னமும் விநியோகிக்கப்படவில்லை என்று அதிபர் ஒருவர் கூறினார்.

அவ்வாறே கொழும்பில் இருந்து வெளிமாவட்டங்களுக்கு தபால் பொதிகள் அனுப்பப்படாத காரணத்தால் தொழில்வாய்ப்புகளுக்கு விண்ணப்பித்தவர்களுக்கு கிடைக்க வேண்டிய நேர்முகப் பரீட்சைகளுக்கான கடிதங்களும் உரிய நேரத்தில் வரவில்லையென விசனம் தெரிவிக்கப்படுகிறது.

கடித விநியோகம் மட்டுப்படுத்தப்பட்டதால் இரத்தினபுரி மாவட்டத்தில் காவத்தை, பெல்மதுளை, கொட்டகாவல போன்ற தபால் அலுவலகங்களிலும் கடிதங்கள் தேங்கிக்கிடப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ச)

# ஜனாதிபதி எம்மை ஏமாற்றிவிட்டார்

## விரிவுரையாளர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்

கொழும்பு, நவ.24

அரசு உறுதி அளித்தது போன்று வரவு - செலவுத் திட்டத்தில் தமக்கு சம்பள உயர்வு வழங்கப்படவில்லை என்று பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இன்று வியாழக்கிழமை இது தொடர்பில் கலந்துரையாடவென பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் ஒன்றிணைந்த சம்மேளனத்தின் உயர்மட்டக் குழு கூடும் என்று அதன் தலைவர் கலாநிதி நிர்மால் ரஞ்சித் தேவசிறி தெரிவித்துள்ளார்.

அதில் அடுத்தகட்ட நடவடிக்கைகள் குறித்து முடிவெடுக்கப்படும் என்று அவர் குறிப்பிட்டார். வரவு - செலவுத் திட்டத்தில் சம்பள உயர்வு வழங்கப்படும் என ஜனாதிபதி தமக்கு அளித்த வாக்குறுதியை அடுத்தே கடந்த காலத்தில் மேற்கொள்ளப்பட்ட தொழிற்சங்க நடவடிக்கை கைவிடப்பட்டது என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார். எனினும், தாம் ஜனாதிபதியால் ஏமாற்றப்பட்டுள்ளோம் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச)



வலி.மேற்குப் பிரதேச மாணவர்களின் இலவசப் பண்ணிசை வகுப்பு நடைபெற்று வருகின்றது. இந்த வகுப்பில் கலந்து கொண்ட மாணவர்கள் நோயாளர்களது நலம் வேண்டி சங்கானை அரசினர் வைத்தியசாலையில் பிரார்த்தனையில் ஈடுபடுகின்றனர்.(ச)

# டெங்கு நோய்த் தாக்கம் தீவிரம்; மேல்மாகாணத்தில் 156 பேர் சாவு

## சுகாதார அமைச்சு அறிவிப்பு

கொழும்பு, நவ.24

மேல்மாகாணத்தில் டெங்குநோயின் தாக்கம் அதிகரித்து வருவதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது. இவ்வருடத்தில் இதுவரையான காலப் பகுதியில் 57 சதவீதமான டெங்கு நோயாளர்கள் மேல்மாகாணத்திலேயே இனங்காணப்பட்டுள்ளனர் என்றும் அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தவருடம் இதுவரை நாடுமுழுவதும் 22,430 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவர்களில்156 பேர் உயிரிழந்துள்ளனர்.

டெங்குநோயின் தாக்கம் தீவிரமாகி வருவதையடுத்து அண்மையில் கொழும்பு மாவட்டத்தில் 2,215 இடங்கள் சோதனையிடப்பட்டன. அவற்றில் 1,200 இடங்கள் டெங்குநுளம்பு பரவும் பிரதேசங்களாக இனங் காணப்பட்டன என்றும் அமைச்சு தெரிவித்துள்ளது.

எனவே, பொதுமக்கள் நோய்த்தாக்கத்தை தவிர்க்கும் முகமாக தமது சுற்றுச்சூழலை துப்புரவாக வைத்திருக்க வேண்டும் என அமைச்சு கோரிக்கை விடுத்துள்ளது. (ச)

# பொலிஸ் சார்ஜன்ட் பணி நிறுத்தம்

கொழும்பு, நவ.24

அநுராதபுரம் தலைமையகப் பொலிஸ் நிலைய போக்குவரத்துப்பிரிவு பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் 25,000 ரூபா லஞ்சம் பெற்றார் என்ற சந்தேகத்தின்பேரில் கடந்த திங்கட்கிழமை முதல் சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளார்.

வர்த்தகரொருவரிடம் அவரது வாகனத்திற்கான ஆவணங்கள் எதுவும் இல்லாத நிலையில், அந்த வர்த்தகருக்கு எதிராக வழக்குத் தொடராமலிருப்பதற்கு 25,000 ரூபா பணத்தை லஞ்சமாக குறித்த பொலிஸ் சார்ஜன்ட் பெற்றுக்கொண்டார் என அநுராதபுரம் தலைமையகப் பொலிஸ் நிலைய போக்குவரத்துப் பிரிவு பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் பாலித்த நிஸ்ஸங்க தெரிவித்தார். (ச)

**மணமகள் தேவை**

கனடா பிரஜாவுரிமையுடைய இந்து கௌரவ குடும்பம், 1976 பரணி நட்சத்திரம், 7இல் செவ்வாய், கிரகபாவம் 71¼ ஒரு கிழமைக்குள் விவாகரத்துப் பெற்றவர். இந்து மணமகள் தேவை.
தொடர்பு: 0774705137
(7947)(6/8/9)

**கண்ணீர் அஞ்சலி**

சரவணை ஸ்ரீ செல்வக்கதிர்காம முருகன் ஆலயத்தின்
முருகன் அருளைப் பெற்று
இலங்கையின் பல பாகத்தில் இருந்தும்
வருகை தந்த பக்த அடியார்களின்
நோய்களையும் பிணிகளையும், தீராத
வியாதிகளையும் தீர்த்த




**சாமியம்மா சீதை**

அவர்கள் இறைபதம் அடைந்ததையிட்டு பக்த அடியவர்கள், உறவினர்கள், குடும்பத் தினர்கள், நண்பர்கள் அனைவரும் மிகுந்த கவலையுடன் உள்ளனர். அம்மையார் ஆலயத்தின் பூசை வழிபாடுகள் சிறப்புற நடக்கவும், ஆலயச் சிறப்பை 1965 இல் இருந்து இன்றுவரை மேன்மையடையச் செய்யவும், சைவத்தின் மேன்மையையும், பக்தி மயத் தன்மையையும் அறியச் செய்த அம்மையாரின் இழப்பு எம் அனைவருக்கும் பேரிழப்பாகும். அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்போமாக. அன்னாரின் குடும்பத்தினர்க்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்

சரவணை ஸ்ரீ செல்வக்கதிர்காம
ஆலய பரிபாலன சபையினர். (10723) (2>6>9)

**7ஆம் ஆண்டு நினைவஞ்சலி**



மலர்வு 19.01.1937
உதிர்வு 11.12.2004

அமரர்
கோவிந்தர்
கணபதிப்பிள்ளை

திதி: (24.11.2011) அமாவாசை

ஆயிரம் உறவுகள் இருந்தாலும் அப்பா
என்று அழைத்து மகிழ நீங்கள் இல்லை.
எமைப் பிரிந்து ஆண்டு ஏழு போனாலும்
எம் நெஞ்சங்களை விட்டு அகலாது
அப்பாவின் நினைவுகள்

என்றும் உங்கள் நினைவுடன்
மனைவி க. இராசமணி
மகள்மார் - ரஞ்சிதமலர், மாலினி, தயாளினி, சுபாஜினி
மகன்மார் - தயாளன், குணாளன்
மருமக்கள் - சிறிஜெயலிங்கம், விக்னராசா, மார்லிஸ், சண்முகலிங்கம், மரியா, தயானந்தம்.
பேரப்பிள்ளைகள்- பிரணவன், ஷாகீர்த்திகா, சாம்பவி, கபில்தேவ், யாமினி, செந்தூரன், மிக்கேல், கிறிஸ்டினா, ஸ்டேலினா, சாளினி, சர்மிகா, ஜயந், அனுஷா ஆகாஸ், அனிதா, ஆஞ்சின்.

கரணவாய் மத்தி,
கரவெட்டி
(10757) (2-8-6-9)

**இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி**



மண்ணில்
21.02.1947
விண்ணில்
15.12.2009
திதி: சதுர்த்தசி
(24.11.2011)

திருமதி
சறோஜினிதேவி பஞ்சாட்சரதேவர்

மலர்ந்த முகமும் - என்றும்
அழியாத திலகமும்
வாடாத புன்னகையுமாய்
எம்மோடு இருந்து - எம்மை
மாறாத் துயரில் ஆழ்த்திவிட்டு
மீளாத் துயிலில் ஆழ்ந்தாயே - அம்மா
ஆண்டுகள் இரண்டல்ல பல சென்றாலும்
உன் நினைவால் கண்ணீர் பெருகும் - தாயே
உனை இனி எந்த ஜென்மத்தில் காண்போம் அம்மா

உங்கள் பிரிவால் துயருறும்:
கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

நீர்வேலி குறுக்கு வீதி,
நீர்வேலி.
(2,6,9)

**அருள் முருகன் திருமண சேவை**

Doctors, Engineers, அரச மற்றும் வங்கி உத்தியோகத்தர்கள், வெளிநாடு மணமக்கள் உட்பட தகுந்த மணமக்கள் தேவைக்கு 0212229334, 0718475114. ஓய்வு நிலை ஆசிரியரது கௌரவ சேவை, 03, யாழ் வீதி, சிறாம்பியடி லேன், ஸ்ரான்லி வீதி, யாழ்ப் பாணம். (பலாலி வீதியாலும் வரலாம்)

**வீடு வாடகைக்குத் தேவை**

மூவர் வசிப்பதற்கான அளவான சிறிய வீடு வாடகைக்குத் தேவை.
தொடர்புகளுக்கு :ப. விஜயகுமார்
0771935457

**CAR FOR SALE**

Nissan - N.16-Super saloon -2001 model
2006 rag - KB xxxx leather - seat
Grey Colour, for immediate sales
expcefan 2.1M Negiorelle
T.P.0756438921
(10719)(6-9-8)

**காணி விற்பனைக்கு**

இல . 37, இராமநாதன் வீதியில் அமைந்துள்ள (மிலேனியத்திற்கு அண்மையில்) 11 பரப்பு 9 குளி காணி ஒரு கிணற்றுடன் உடன் விற்பனைக்கு உண்டு. பகுதியாக பிரித்துக்கொடுக்கப்படும். (தரகர் தேவையில்லை)
தொடர்பு: 0112591720, 07713317 84
(10761) (6-9-8)

# மீனவர்கள் தாக்கப்படுவது குறித்து உடனடியாக நடவடிக்கை எடுங்கள்!

**மத்திய அரசிடம் பாலு வலியுறுத்து**

டில்லி, நவ.24

தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் தாக்கப்படுவது குறித்து மத்திய அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று டி.ஆர். பாலு தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற குளிர் கால கூட்டத் தொடர் நேற்று டில்லியில் ஆரம்ப மாகியது. தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையால் தொடர்ந்து தாக்கப்பட்டு வருவது குறித்து விவாதிக்க வேண்டும் என்று நாடாளுமன்றதில் தி.மு.க. உறுப்பினர்கள் வலியுறுத்தினர். தி.மு.க. நாடாளுமன்றக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு இந்தப் பிரச்சினையை எழுப்பினார்.

இதுகுறித்து பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர் மேற் கண்ட விடயத்தை வலியுறுத் தினார். தொடர்ந்து அவர் கருத்துத் தெரிவிக்கையில்:

எமது மீனவர்களின் உயிருக்கும், உடைமைக்கும் பாதுகாப் பற்ற சூழ்நிலை நிலவுகிறது. இதை கருத்தில் கொண்டு மத்திய அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.



இலங்கை அரசுக்கு தகுந்த விதத்தில் கண்டனம் தெரிவிப்பதோடு அல்ல, இனி இது போன்ற சம்பவங்கள் நடக்காமல் இருக்க இருநாட்டு அரசுகளும் பேசி முடிவு எடுக்க வேண்டும் - என்றார். (வ)

**2ஜி ஸ்பெக்ட்ரம் வழக்கு**

# சிறை வளாக நீதிமன்றுக்கு மாற்ற இடைக்காலத் தடை

ஸ்பெக்ட்ரம் ஊழல் தொடர்பான விசாரணை டில்லி பாட்டியாலா சி.பி.ஐ. சிறப்பு நீதிமன்றத்தில் இருந்து திகார் சிறை வளாகத்தில் உள்ள நீதிமன்றத்துக்கு மாற்றத்துக்கு இடைக் காலத் தடை விதிக்கப்பட்டது.

2ஜி ஸ்பெக்ட்ரம் ஊழல் தொடர்பாக குற்றம் சாட்டப்பட்டு கைது செய்யப்பட்டுள்ள முன்னாள் மத்திய தொலைத் தொடர்புத்துறை அமைச்சர் ஆ.ராசா, கனிமொழி எம்.பி உள்ளிட்ட 14 பேர் திகார் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். இந்த வழக்கின் விசாரணை டில்லியில் உள்ள சி.பி.ஐ. சிறப்பு நீதிமன்றத்தில் நடைபெற்று வருகிறது.

இந்த நிலையில் நேற்று முன்தினம் செவ்வாய்கிழமை நடைபெற்ற விசாரணை யின் போது நீதிமன்றத்திற்கு வந்திருந்த குற்றவாளிகளிடம் நீதிபதி ஒ.பி சைனி, டில்லி உயர் நீதி மன்றத்தின் உத்தரவின்படி இன்றிலிருந்து இருந்து 2ஜி வழக்கு விசாரணை திகார் சிறை வளாகத்திலேயே நடைபெறும் என்று அறிவித்தார்.

2ஜி வழக்கை திகார் சிறை வளாகத்துக்கு மாற்றுவதற்கு கனிமொழி, ஆ.ராசா உள்ளிட்ட குற்றம்சாட்டப்பட்ட அனைவருமே எதிர்ப்புத் தெரிவித்தனர். (வ)

## ஐ.நா. சபையின் உயர் பதவி வெற்றி பெற்றது இந்தியா!

ஐக்கிய நாடுகள் சபையில் உயர் பதவிக்கு நடைபெற்ற போட்டியில் இந்தியா வெற்றி பெற்றுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையில் உறுப்பு நாடுகளாக உள்ள நாடுகளின் நிதிநிலை குறித்த கண்காணிப்பு குழுவுக்கான தலைமைப் பதவி வெற்றிடமாக இருந்தது.

இந்தப் பதவியைப் பிடிப்பதற்காக ஏனைய நாடுகள் போட்டியிட்ட போதிலும் இந்தியா, சீனா இடையே கடும் போட்டி நிலவியது. இந்தப் போட்டியில் இந்தியாவின் சார்பில் கோபிநாத் என்பவர் கலந்து கொண்டார்.

சீனாவின் சார்பில் இந்தியாவுக்கான சீன தூதர் ஷாங் இஸ்கான் போட்டியிட்டார். இந்த போட்டியில் இந்தியாவுக்கு ஆதரவாக 160 வாக்குகளும், சீனாவுக்கு 77 வாக்குகளும் கிடைத்தன. எதிர்வருகிற 2013 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் பதவியேற்க உள்ள கோபிநாத் அடுத்து வரும் ஐந்தாண்டுகள் வரை நிதிநிலை குறித்த கண்காணிப்பு குழுவுக்கான தலைமைப் பதவியில் நீடிப்பார் என்பது குறிப்பிடத்தக்கது.



நாடாளுமன்ற குளிர்காலக் கூட்டத்தொடர் டில்லியில் கூடியது. இதில் பிரதமர் மன்மோகன்சிங், அமைச்சர்கள் ஆகியோர் கலந்து கொள்ள வந்தனர். (வ)

## ஸ்பெக்ட்ரம் வழக்கில் 5 பேருக்கு பிணை

2ஜி ஸ்பெக்ட்ரம் வழக்கில், தனியார் நிறுவன அதிகாரிகள் 5 பேருக்கு பிணை வழங்கி உச்ச நீதிமன்றம் உத்தரவிட் டுள்ளது.

யுனிடெக் வயர்லெஸ் நிறுவன முன்னாள் இயக்குநர் சஞ்சய் சந்திரா, ஸ்வான் ரெலிகொம் இயக்குநர் வினோத் கோயங்கா, ரிலையன்ஸ் அனில் திருபாய் அம்பானி குழும அதிகாரிகள் ஹரி நாயர், கவுதம் தோஷி மற்றும் சுரேந்திர பிபாரா ஆகிய 5 பேரும் இந்த வழக்கில் கடந்த 7 மாதங்களாக சிறையில் உள்ளனர்.

இவர்களை பிணையில்செல்ல சி.பி.ஐ., எதிர்ப்பு தெரிவித்ததால் டில்லி உயர்நீதிமன்றம் பிணை வழங்க மறுத்து விட்டது. இதையடுத்து இவர்கள் 5 பேரும் உச்ச நீதிமன்றில் மனு தாக்கல் செய்தனர்.

இந்தநிலையில், இவர்கள் 5 பேரையும் பிணையில் விடுவிக்க உச்ச நீதிமன்றம் உத்தர விட்டுள்ளது. 2ஜி வழக்கில், குற்றம்சாட்டப்பட்டவர்கள் பிணை பெறுவது இதுவே முதல் முறை என்பது குறிப்பிடத்தக்கது.(வ)

# தமிழகத்தில் குண்டு வைக்க திட்டமிட்ட தீவிரவாதி கைது

சென்னை, நவ.24

தமிழகம் முழுவதும் குண்டு வைக்கத் திட்டமிட்ட தஞ்சை மாவட்டம் அதிராம்பட்டினத்தைச் சேர்ந்த, தீவிரவாதி தவுபீக் கைது செய்யப்பட்டுள்ளான்.

கடந்த 2008 ஆம் ஆண்டு முதல் தலைமறைவாக இருந்து வந்தான். மேலும் இறைவன் ஒருவனே என்ற பெயரில் மறைமுகமாக தீவிரவாத இயக்கம் நடத்தி யதோடு தமிழகம் முழுவதும் குண்டு வைக்கத் திட்டமிட்ட திடுக்கிடும் தகவல் தற்பொழுது வெளியாகி உள்ளது.

இதனைத் தொடர்ந்து டில்லிக்கு அருகே உத்தரப் பிரதேச மாநில எல்லை யில் தவுபீக் பதுங்கி இருப்பதாக தமிழக சிறப்புப் புலனாய்வுக் குழுவுக்கு கிடைத்த தகவலையடுத்து அவர்கள் உத்தரப் பிரதேசம் விரைந்தனர். அங்கு நொய்டாவில் அவனைக் கைது செய்தனர். தமிழ் நாட்டில் உள்ள வழக்குகள் பற்றி விசார ணை நடத்துவதற்காக அவனை சென் னைக்கு கொண்டு வரவுள்ளனர். (வ)

# சொத்துகுவிப்பு வழக்கு ஒத்திவைப்பு

பெங்களூர், நவ.24

சொத்து குவிப்பு வழக்கு விசாரணைக்காக முதல்வர் ஜெயலலிதா பெங்களூர் பரப்பன அக்ரஹாராவில் உள்ள சிறப்பு நீதிமன்றத்தில் நேற்று 4 ஆவது முறையாக ஆஜராகி மீதமுள்ள 192 கேள்விகளுக்கு பதில் அளித்தார். இதையடுத்து வழக்கு விசாரணை எதிர்வரும் 29ஆம் திகதிக்கு ஒத்திவைக் கப்பட்டது.

இந்த வழக்கு தொடர்பாக 1,339 கேள்விகள் தயார் செய்யப்பட்டன. அதில் ஜெயலலிதா இதுவரை 1,147 கேள்விகளுக்கு பதில் அளித்துள்ளார். மீதமுள்ள 192 கேள்விகள் இருந்தன.

நேற்று முன்தினம் இடம் பெற்ற விசாரணை முடிந்தவுடன் சென்னை திரும்பிய ஜெயலலிதா நேற்றுக் காலை தனி விமானம் மூலம் பெங்களூர் வந்தார். நேற்றைய விசாரணையின்போது தனது வளர்ப்பு மகன் சுதாகரனின் ஆடம்பரமான திருமணம் குறித்த கேள்விகளுக்கு பதில் அளித்தார். நேற்று முன்தினம் மட்டும் அவர் 580 கேள்விகளுக்கு பதில் அளித்தார்.

## விலைவாசியைக் கண்டித்து விஜயகாந் உண்ணாவிரதம்

பஸ் கட்டணம், பால் விலை உயர்வைக் கண்டித்து தே.மு.தி.க. நிறுவுநர் விஜயகாந்த் தலைமையில் சென்னையில் கட்சி அலுவலகத்தில் இன்று உண்ணாவிரதப் போராட்டம் நடைபெற உள்ளது. இன்றைய தினம்மாவட்டத் தலைநகரங்களிலும் தே.மு.தி. க.வினர் உண்ணாவிரதப் போராட்டம் நடத்துகின்றனர். இது தொடர்பாக விஜயகாந்த் கடந்த திங்கட்கிழமை வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

அ.தி.மு.க. அரசு பஸ் கட்டணத்தையும், பால் விலையையும் மிக அதிகமாக உயர்த்தியுள்ளது. இதனால் ஏழைகளின் வாழ்க்கைச்செலவு இருமடங்கு அதிகரித்துள்ளது. அரசின் இந்தப் போக்கை மாற்றிக் கொள்ள வலியுறுத்தி இன்று வியாழக் கிழமை காலை 8 மணி முதல் மாலை 5 மணி வரை தே.மு.தி.க. சார்பில் கோயம்பேடு தே.மு.தி.க. தலைமை அலுவலகத்தில் எனது தலைமையில் உண்ணாவிரதம் நடைபெறும் என்றுள்ளது. (வ)

# கச்சதீவை மீட்க உச்ச நீதிமன்றில் விரைவில் வழக்குத் தாக்கல்

**இலங்கை இந்து மக்கள் பேரவைத் தலைவர் தெரிவிப்பு**

மதுரை, நவ.24

கச்சத்தீவை மீட்க உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்படும் என்று இலங்கை இந்து மக்கள் பாதுகாப்புப் பேரவைத் தலைவர் பிரமோத் முத்தாலிக் நேற்று மதுரையில் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

மதுரையில் நேற்று நடைபெற்ற இலங்கை இந்து மக்கள் பாதுகாப்புப் பேரவையின் கருத்தரங்கில் பேசிய பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார். அப்போது அவர் தெரிவிக்கையில்:

இலங்கைப் பிரச்சினையை தேசியப் பிரச்சினையாக மாற்றி, தேசத்தின் அனை வரது கவனத்தையும் கவர பல மொழி களிலும் பிரசாரம் செய்யப்படும்.

தமிழக, கர்நாடக மாநிலங்களுக்கு இடையே நிலவும் காவிரிப் பிரச்சினையைத் தீர்க்க, ஆன்மிக ரீதியாக தீர்வு எட்டப் படவேண்டும்.

இஸ்லாமியர்களுக்கு ஹஜ் பயணத்துக்கு மானியம், நிதி உதவி செய்வதைப் போல, இங்கு ஐயப்ப பக்தர்களுக்கு மத்திய மாநில அரசுகள் நிதியுதவி அளிக்க வேண்டும். (வ)

# காங்கிரஸுக்கு எதிரான பிரசாரம் நிறுத்தப்படும்

**ஹசாரே முடிவு**

டில்லி, நவ.24


நாடாளுமன்றக் குளிர்கால கூட்டத்தொடரில் வலுவானலோக்பால் பிரே ரணை நிறைவேற்றப்படும் என்று உறுதியளித்து பிரதமர் அலுவலகத்தில் இருந்து கடிதம் வந்திருப்பதால் தேர்தல் நடைபெற உள்ள 5 மாநிலங்களில் காங்கிரஸுக்கு எதிராக தேர்தல் பிரசாரம் செய்யும் திட்டத்தை நிறுத்தி வைப்பதாக அன்னா ஹசாரே அறிவித்துள்ளார்.

நாட்டின் பிரதமர் உறுதி அளித்திருக்கும்போது நாம் அவரை நம்ப வேண்டும். நாட்டின் பிரச்சி னைகள் தொடர்பாக அரசுடன் பேச்சு நடத்தும்போது எமது திட்டத்தை நிறுத்தி வைக்க வேண்டும். மகாத்மா காந்திகூட முன்பு இதைத்தான் செய்துள்ளார் என்று ஹசாரே குறிப்பிட்டார்.

முன்னதாக லோக்பால் பிரேரணை நாடாளுமன்ற குளிர் கால கூட்டத்தொடரில் நிறைவேற்றப் படாவிட்டால் சட்டப் பேரவைத் தேர்தல் நடைபெற உள்ள 5 மாநிலங்களில் காங்கிரஸுக்கு எதிராகப் பிரசாரம் செய்வேன் என்று அவர் எச்சரிக்கை விடுத்திருந்தார். (வ)

# உலகுக்கு இலங்கை வழங்கியுள்ள வாய்ப்பு

**அண்மையில் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்ட நல்லிணக்கத்துக்கான படிப்பினைகள் ஆணைக்குழுவின் அறிக்கையையும் நோர்வே வெளியிட்ட 'அமைதிக்கான அடமானங்கள்' என்ற அறிக்கையையும் முன்வைத்து 'ரைம்' இணையத்தில் வெளியிடப்பட்ட கட்டுரையில் முக்கியமாகத் தெரிவிக்கப்பட்டிருப்பவற்றின் மொழியாக்கம் இங்கு வெளியாகிறது.**



கற்றுக்கொண்ட பாடங்களுக்கும் நல்லிணக்கத்துக்குமான ஆணைக்குழுவினால் (LLRC) உருவாக்கப்பட்ட இறுதி அறிக்கை இலங்கை ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டு விட்டது. 2002ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட போர் நிறுத்த ஒப்பந்தத்தின் தோல்விக்கான காரணிகளை ஆராய்வதும், 2009இல் முடிவுக்கு வந்த போரின் இறுதிக் கட்டச் சம்பவங்களுக்கான பொறுப்புக்கூறலைக் கண்டறிவதும் அறிக்கையின் நோக்கமாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இறுதிக்கட்டப் போரின்போது மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படும் போர்க் குற்றங்கள் தொடர்பாக நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையில் எதுவும் குறிப்பிடப்படவில்லை.

இறுதிக் கட்டத்தில் நடந்திருக்கக் கூடிய சம்பவங்கள் தொடர்பாக அரசினால் விசாரிக்கப்பட வேண்டுமென மட்டும் அந்த அறிக்கையில் கேட்கப்பட்டுள்ளது.

ஆனால் சம்பவங்கள், பொறுப்பானவர்கள் பற்றிய எந்த விவரங்களும் குறிப்பிடப்படவில்லை. நல்லிணக்க ஆணைக்குழு பிரிட்டனின் சனல்-4 தொலைக்காட்சி வெளியிட்ட 'சிறிலங்காவின் கொலைக்களம்' ஆவணப் படம் தொடர்பாக எந்தவித ஆய்வுகளையும் முன்னெடுக்காது, அதனை ''முற்றிலும் சோடிக்கப்பட்ட ஒன்று'' எனக் குறிப்பிட்டுள்ளது.

மனித உரிமை மீறல்கள் தொடர்பாகக் குற்றம் சுமத்துபவர்களுக்கு என்ன நேரும் என்பது தொடர்பாகத் தெளிவான செய்தியையும் அண்மையில் இலங்கை அரசு அனுப்பியுள்ளது. விடுதலைப் புலிகளுக்கு எதிரான போர் வெற்றியில் இலங்கைப் படைத் தரப்பை வழிநடத்திய ஜெனரல் சரத் பொன்சேகா மீது ''பொய்ப் பிரசாரத்தை'' முன்னெடுத்தார் என்று குற்றம் சாட்டி 3 ஆண்டுகள் சிறைத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

சரணடைவதற்கு ஒப்புக்கொண்ட தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர்களைச் சுட்டுக்கொல்லுமாறு பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ கட்டளையிட்டார் என்று ஒரு நாளிதழுக்கு பொன்சேகா வழங்கிய செவ்வி தொடர்பாகவே இந்த வழக்குத் தொடரப்பட்டது. இவ்வாறான சம்பவம் ஏதும் நடைபெறவில்லை என கோத்தபாய தொடர்ச்சியாக மறுத்து வந்துள்ளார்.

தமது சமாதான முன்னெடுப்புகள் தோல்வியுற்றமை தொடர்பான மதிப்பீட்டு அறிக்கை அண்மையில் நோர்வேயினாலும் வெளியிடப்பட்டுள்ளது. இறுதிக் கட்டப் போரின் போதான நோர்வேயின் முயற்சிகள் தொடர்பாகவும் அந்த அறிக்கையில் பேசப்படுகின்றது.

பொன்சேகா கூறிய அதே சம்பவம் தொடர்பாக நோர்வேயின் அறிக்கையில், ''17ஆம் திகதிக்கும் 18ஆம் திகதிக்கும் இடைப்பட்ட இரவு, விடு தலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் நடேசன், சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலிதேவன் ஆகியோர் நோர்வே, பிரிட்டன், அமெரிக்கத் தூதரகம், செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு மற்றும் சந்திரநேரு (கொழும்பிலிருந்த தமிழ் அரசியலாளர்) ஆகிய தரப்பினரைத் தொடர்பு கொண்டு, சரணடைவதற்கான தமது விருப் பினைத் தெரிவித்தனர்.

''ஜனாதிபதியின் ஆலோசகரும் சகோதரருமான பஸில் ராஜபக்ஷவுடன் இடம்பெற்ற அவசர பேச்சைத் தொடர்ந்து, வெள்ளைக் கொடியுடன் இராணுவத்தினரின் முன்னரணை நோக்கி நடந்து செல்லுமாறு அவர்கள் அறிவுறுத்தப்பட்டனர். அவர்கள் முன்னரணைச் சென்றடைவதற்குச் சற்று முன்னர் இறுதித் தொலைபேசி உரையாடல் இடம்பெற்றுள்ளது. சில மணிநேரங்களில் அவர்கள் சண்டையில் கொல்லப்பட்டனர் என்ற அறிவிப்பு வந்தது'' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**இதனையும் ஏனைய மனித உரிமை மீறல்களையும் மறுப்பதற்குரிய வலிமை இலங்கை அரசிடம் உண்டு. ஏனெனில் புவிசார் அரசியல் வலுச்சமநிலை கிழக்கை (ஆசியா) நோக்கி வலுவாகத் திரும்பியுள்ளது.** இலங்கையை ஆதரிக்கும் வலுவான சக்தியாக சீனா வளர்ந் துள்ளது.

> **இது இலங்கைத் தீவின் போரினால் உலகின் ஏனைய தரப்புகளுக்கு ஏற்பட்டுள்ள இரண்டாவது பாடமாகும். நோர்வேயின் அறிக்கை மிக நீளமானது. அதில் கையாளப்பட்டிருக்கும் ஆய்வு முறைமை மற்றும் இந்த விவகாரத்தில் வெளிப்படுத்தப்பட்டிருக்கும் சுயவிமர்சனம் ஆகியவற்றுக்காக அது முழுமையான வாசிப்பற்கு உட்படுத்தப் பட வேண்டியது.**

இது இலங்கைத் தீவின் போரினால் உலகின் ஏனைய தரப்புகளுக்கு ஏற்பட்டுள்ள இரண்டாவது பாடமாகும். நோர்வேயின் அறிக்கை மிக நீளமானது. அதில் கையாளப்பட்டிருக்கும் ஆய்வு முறைமை மற்றும் இந்த விவகாரத்தில் வெளிப்படுத்தப்பட்டிருக்கும் சுயவிமர்சனம் ஆகியவற்றுக்காக அது முழுமையான வாசிப்பிற்கு உட்படுத்தப்பட வேண்டியது.

சமாதான முன்னெடுப்பின் தோற்றமும் வீழ்ச்சியும் இலங்கைத்தீவின் அரசியலில் ஒரு மைல்கல் என்பதற்கு அப்பால், மேற்குலகத்தின் செல்வாக்குச் சரிவைக் காட்டும் உலக வரலாற்றின் ஒரு பகுதியாகவும் அது உள்ளது.

இலங்கையைப் பொறுத்தமட்டில் கடந்த பல ஆண்டுகளாக அமெரிக்க மற்றும் மேற்கு ஐரோப்பிய நாடுகளின் பொருளாதார, அரசியல், மற்றும் படைத்துறை உதவிகளின் முக்கியத்துவம் குறைவடைந்து வந்துள்ளது. நோர்வேயின் அறிக்கையின்படி, சீனா, பாகிஸ்தான், ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் அமெரிக்கா ஆகியன இலங்கையின் முக்கிய வர்த்தக உறவு நாடுகள். ஆனால் இலங்கையில் பல பில்லியன் பெறுமதியான உட்கட்டுமான முதலீடுகளில் சீனா விரைந்து ஈடுபட்டு வருகின்றது. எனவே அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றிய மட்டத்திலிருந்து எழும் இராஜதந்திர அழுத்தங்களை இலங்கையால் புறக்கணிக்க முடியும். ஏனெனில் ஐ.நாவில் போர்க்குற்ற விவகாரம் எழுப்பப்படும் பொழுதெல்லாம் தனது பக்கத்தில் சீனாவையும் ரஷ்யாவையும் இலங்கை வைத்துள்ளது. இந்தியாவும் கூட இறுதிக்கட்டப் போரின்போது, இரட்டை இராஜதந்திரத்தைக் கையாண்டதாக நோர்வேயின் அறிக்கை குறிப்பிடுகிறது. இலங்கைப் படைத்தரப்புக்கு ராடார் மற்றும் புலனாய்வுத் தகவல்களை இந்தியா வழங்கியது. இந்திய ஆயுதங் கள் தமிழ் மக்களுக்கு எதிராகப் பயன் படுத்தப்படுகின்றது என்ற அரசியல் உணர்வு சார்ந்த சர்ச்சைகளைத் தவிர்ப்பதற்காக தாக்குதற் படைக்கருவிகளை வழங்கவில்லை என டெல்லி தெரிவித்து வந்துள்ளது. ஆனாலும் வேறு நாடுகளிடமிருந்து இலங்கை ஆயுதங்களைக் கொள்வனவு செய்வதை இந்தியா எதிர்க்கவில்லை.

**விடுதலைப்புலிகள் காப்பாற்றப்பட வேண்டுமென்று இந்தியா விரும்பியிருக்கவும் வாய்ப்பில்லை. மேற்குலக நாடுகளின் அழுத்தங்களைப் பொருட்படுத்தாது போரை முடிக்குமாறு மேற்குலகம் அல்லாத நாடுகள் இலங்கைக்குக் கூறியதாக இலங்கையைச் சேர்ந்த இராஜதந்திரி ஒருவர் சாட்சியளித்துள்ளார். போர்** முடிவுற்றதிலிருந்து, தமிழ் மக்களின் கவலைகளைக் கருத்திலெடுக்குமாறும் ஓர் அரசியல் தீர்வு நோக்கிச் செயற்படுமாறும் கொழும்பு அரசுக்கு இந் தியா அழுத்தம் கொடுத்து வந்துள்ளது. ஆனாலும் விடுதலைப் புலிகளை அழித்த போது ராஜபக்ஷ அரசுக்கு ஆதரவினை வழங்கிய இந்தியா, மஹிந்தவின் போர்க் குற்ற நடவடிக்கைகள் வெளிவரும்போது அவரைக் கைவிடும் என்று எதிர்பார்க்க முடியாது. ஆனால் இந்த விவகாரத்தில் அமெரிக்காவுக்கு ஒரு முக்கிய வகிபாகம் உண்டு.

அமெரிக்க இராஜாங்கத் திணைக் களத்தின் தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான துணைச் செயலர் ரொபேர்ட் ஓ பிளேக், பொறுப்புக்கூறல் விவகாரத்தில் இலங்கைக்கு அழுத்தம் கொடுத்து வந்துள்ளார். தமிழ் அரசியல் கட்சிகளுடனும் நெருங்கிய தொடர்பினைக் கொண்டுள்ளார்.

நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிக்கை நம்பகத்தன்மையானதாக இருக்க வேண்டுமென கடந்த செப்ரெம்பர் மாதம் கொழும்புக்குப் பயணம் செய்திருந்த போது பிளேக் கோரியிருந்தார். அறிக்கை நம்ப கத் தன்மை அற்றதாக இருப்பின் மாற்றுப் பொறிமுறை அவசியம் எனவும் அவர் தெரிவித்தி ருந்தார். வேறுவழி யில்லாவதானால் சுதந்திரமான அனைத்துலகப் பொறி முறை அவசியம்.

தற்போது ஆணைக் குழுவின் அறிக்கை கையளிக்கப்பட்டுள்ள நிலையில், ஆசியாவின் பெரும் சக்திகளான சீனாவுடனும் இந்தியாவுடனும் ஒட்டு றவாடும் சின்னஞ்சிறிய இலங்கைத் தீவில் தனது இராஜதந்திர மூலதனத்தை பயன்படுத்துவது பயனுடையதா என்பதைத் தீர்மானிக்க வேண்டிய நிலையில் அமெரிக்கா உள்ளது.

எது நடப்பினும், 3ஆவது பாடத்தையும் உலகுக்கு இலங்கை தருகின்றது. முற்றுமுழுதான மேற்கத்திய கருத்தியலாக பார்க்கப்படுகின்ற ''மனித உரிமை'' என்ற சொல்லாடல் அதன் உளரீதியான வலுவை இழந்துள்ளது. இலங்கையைப்போல் எந்த நாடும் இரட்டை இராஜதந்திரத்தைக் கையாளவில்லை. மேற்குலக அரசுகள் அல்லது ஊடகங்கள் ராஜபக்ஷ மீது விமர்சனங்களை முன்வைக்கும்போது அவற்றைத் தனது நலன்களுக்குச் சார்பாகப் பயன்படுத்த ராஜபக்ஷ தவறவில்லை.

**மேற்குலகின் தலைமையிலான இராஜதந்திர அழுத்தங்களும் பொருளாதாரக் கட்டுப்பாடுகளும் பர்மாவில் வலுவாகத் தொழிற்படத் தொடங்கியிருக்கலாம். ஆனால் புதிய ஆசிய நூற்றாண்டில் இந்த ''மாதிரி (மொடல்)'' இனிமேல் செல்லுபடி ஆகாது. எதி நடக்கப் போகின்றது என்பதற்கான பதிலை மேற்குலகு மட்டுமன்றி முழு உலக முமே கண்டறியும் வாய்ப்பினை இலங்கை வழங்கியுள்ளது.**

(நன்றி பொங்குதமிழ்)

## ஈரான் மீது கனடா புதிய கட்டுப்பாடுகள் விதிப்பு

தெஹ்ரான், நவ.24

ஈரானின் நிதி மற்றும் அணு சக்தித் துறைகளின் மீது கனடா புதிய கட்டுப்பாடுகளை விதிக்கிறது என்ற தகவலை கனடாவின் வெளியுறவுத்துறை அமைச்சர் ஜோன் பேர்ட் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் தெரிவிக்கையில்; ஈரானின் மத்திய வங்கி உட்பட வேறு பல வங்கிகளோடும் எந்தவித நிதிப் பரிவர்த்தனைகளையும் செய்யக் கூடாது. ஈரானில் இருக்கும் கனடா நாட்டைச் சேர்ந்தவர்களுக்கு தம் தாய் நாட்டில் உள்ள தன் உறவினர்களுக்கு பணம் அனுப்பலாம். இது தவிர கனடா நாட்டினர் எவரும் ஈரானோடு எந்த தொழில் தொடர்பும் வைக்கக்கூடாது என்றும் தெரிவித்துள்ளார்.

மேலும் பொருளாதார நடவடிக்கைக்கான சிறப்புச் சட்டத்தின்படி கனடாவைச் சேர்ந்தவர்கள் ஈரானில் உள்ள 47 தனிமனிதர் மற்றும் 279 நிறுவனங்களோடு தொடர்பு இல்லாமல் தங்களுக்குள் நிதிப் பரிவர்த்தனைகளை மேற்கொள்ளலாம். ஈரானிய புரட்சிக் காவல் படையின் தலைமையின் மீது அதிருப்தி கொண்டுள்ள கனடா முறித்துக் கொள்ள விரும்புகிறது. இதற்கு அடிப்படைக் காரணம் சர்வதேசச் சமூகத்தோடு ஈரான் இசைந்து வராததேயாகும். அணுசக்தி உற்பத்தியிலும் உள்ளூர் மக்களின் அடிப்படை உரிமைகளைக் காப்பதிலும் ஈரான் சர்வதேசக் கருத்துக்களை அலட்சியப்படுத்துகிறது என்று அமைச்சர் ஜோன் பேர்ட் தெரிவித்துள்ளார். (ந)

# சிரியாவில் நடக்கும் போராட்டங்கள் உள்நாட்டுப் போராக மாறி விடும்

## பிரிட்டன் பிரதமர் கமரூன் எச்சரிக்கை



டமாஸ்கஸ், நவ.24

கடந்த எட்டு மாதங்களாக சிரியாவில் நடந்துவரும் போராட்டங்கள் உள்நாட்டுப் போரை உருவாக்கும் நிலையில் உள்ளன என்று பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன் தெரிவித்துள்ளார்.

முதன்முறையாக விடுதலைப் போராளிக் குழுக்களின் பிரதிநிதிகள் கூட்டம் லண்டனில் நடைபெற்றுள்ளது. இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே கமரூன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

துருக்கி ஜனாதிபதி அப்துல்லா குல்லுடன் போருக்கான சாத்தியக் கூறுகள் இருப்பது பற்றி முக்கிய பேச்சில் ஈடுபட்டதாகவும் குறிப்பிட்ட கமரூன் சிரியாவின் இராணுவ எதிர்ப்புக் குழுக்கள் அனைத்தும் ஒன்று திரண்டு வலிமை பெற்றுத் திகழ வேண்டும் என்று கூறினார்.

அது மட்டுமன்றி சிரிய ஜனாதிபதி பஷார்-அல் அசாத்தின் இராணுவப் பிடியிலிருந்து சிரியாவை மீட்க அந்த இராணுவத்துடன் போர் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில் சிரியாவுக்கு எதிராகத் துருக்கி, அரபு நாடுகளின் கூட்டமைப்புடன், பிரிட்டனும் சேர்ந்து ஓர் அணியாகத் திரண்டதற்காக மகிழ்ச்சி தெரிவிக்கிறேன் எனக் கூறிய கமரூன் கடந்த செவ்வாய்க்கிழமை மனித உரிமைக்கான சிரியாவின் கூர்நோக்கு அமைப்பு, ஹோம்ஸில் ஐந்து சிறுவர்கள் உட்பட 13 பேரைச் சிரிய இராணுவம் சுட்டுக் கொன்றதாகத் தகவல் வெளியிட்டுள்ளது. சிரிய இராணுவத்தினரின் இவ்வாறான அட்டூழியங்கள் அதிகமாகி வரும் நிலையில் சிரியாவை இராணுவத்திடமிருந்து மீட்க விடுதலைப் போர் உருவாவது உறுதி என்றார்.

இதேவேளை பிரிட்டனின் வெளியுறவுச் செயலர் வில்லியம் ஹேக், சிரிய பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார். (ந)

## பாகிஸ்தானில் குண்டுவெடிப்பு: பொலிஸ் மரணம்

இஸ்லாமாபாத், நவ.24

பாகிஸ்தானில் உள்ள பாடசாலையொன்றுக்கு அருகே வைக்கப்பட்டிருந்த வெடிகுண்டை செயலிழக்கச் செய்யும் முயற்சியில் ஈடுபட்டிருந்த வேளையில் அந்தக் குண்டு வெடித்ததில் பொலிஸ்காரர் ஒருவர் உயிரிழந்ததுடன் 8 பேர் காயமடைந்துள்ளனர்.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது;

பாகிஸ்தானின் மார்தான் என்ற நகரத்தில் உள்ள பெண்கள் பாடசாலையைத் தகர்க்க, தீவிரவாதிகள் குண்டு வைத்திருப்பதாக பொலிஸாருக்கு ரகசியத் தகவல் கிடைத்தது. அதைத் தொடர்ந்து பொலிஸார் மேற்கொண்ட சோதனையின்போது 2 வெடி குண்டுகள் மீட்கப்பட்டன. அவற்றைச் செயலிழக்கச் செய்யும்போதே இந்த வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றது. (ந)


## இடைக்கால அரசின் தீர்மானத்தை ஏற்க எகிப்து இராணுவக் கவுன்சில் புதிய நிபந்தனை

எகிப்து இடைக்கால அரசின் பதவி விலகல் தீர்மானத்தை இராணுவக் கவுன்சில் ஏற்றுக்கொண்டுள்ள அதே வேளை பொதுமக்கள் வாக்கெடுப்பு ஒன்றின் மூலம் இந்த முடிவை ஆமோதிப்பதாகத் தெரிவித்தால், உடனடியாக இராணுவ அரசு தனது அதிகாரத்திலிருந்து விடுபடும் எனவும் ஜனாதிபதித் தேர்தல் 2012 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் இடம்பெறும் எனவும் இராணுவக் கவுன்சில் புதிய நிபந்தனை விதித்துள்ளது.

கடந்த நான்கு நாள்களாகத் தலைநகர் கெய்ரோவில், இடைக்கால அரசுக்கு எதிராக நடைபெற்றுவரும் மக்கள் போராட்டங்களின் போது ஏற்பட்ட உயிர்ச் சேதம் மற்றும் உருவாகிய சர்வதேசக் கவனம் என்பவற்றைக் கருத்தில் கொண்டு, இராணுவக் கவுன்சில் இந்த அறிவிப்பை விடுத்துள்ளது.

இந்நிலையில் அதிபர் எஸ்ஸாம் ஷாராஃ அரசின் இராஜினாமாவை, ஏற்றுக்கொள்வதாக இராணுவத் தளபதி மார்ஷல் மொஹமட் ஹுஸேய்ன் தண்டாவியும் தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்;

உயர்கவுன்சிலைப் பிரதிநிதித்துவப்படுத்தியே இராணுவப் படைகள், இதுவரை நாட்டை வழிநடத்தி வந்தன. தற்போது தனது அனைத்து இராணுவ அதிகாரப் பொறுப்புக்களையும் கையளித்து விட்டு, நாட்டின் தேசிய பாதுகாப்பு எனும் தனது நிலைப்பாட்டுக்கு மட்டும் மீண்டும் செல்ல இராணுவம் முடிவெடுத்துள்ளது. ஆனால் இது நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் எனில், மக்கள் வாக்கெடுப்பு ஒன்றின் மூலம் தங்களது கோரிக்கையை உறுதிப்படுத்த வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார். (ந)



ஸ்லோவேனியா தலைநகர் ஜுப்ல்ஜானாவில், அந்நாட்டுப் பிரதமர் போரட் பஹோரை (வலது), கொசோவா வெளியுறவுத்துறை அமைச்சர் என்வர் ஹோக்ஹாஜ் சந்தித்து பேசினார்.

## சோமாலிய குண்டுவெடிப்பில் 11 பேர் சாவு

சோமாலியாவில் சக்தி வாய்ந்த குண்டு வெடித்ததில் குழந்தைகள் உள்பட 11 பேர் உடல் சிதறி பலியானார்கள்.

மக்கள் நடமாட்டம் அதிகம் உள்ள ஜேகா வீதியிலேயே இந்தக் குண்டு வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அந்த வீதி அரச அதிகாரிகளால் வழக்கமாக பயன்படுத் தப்படும் வீதி என்பதால் அவர்களைக் குறிவைத்து தீவிரவாதிகள் இந்தத் தாக்குதலை நடத்தி இருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

குண்டு வெடிப்பை நேரில் பார்த்த சாதிக் முகமது என்பவர் கூறுகையில், காதை பிளக்கும் சத்தத்துடன் குண்டு வெடித்தது. எங்கு பார்த்தாலும் ரத்தமும் சதையுமாக கிடந்தன. குழந்தைகளும் இறந்து கிடந்தனர் என்றார். (ந)

## காஷ்மீர் தொடர்பான தவறான படத்தை நீக்கியது அமெரிக்கா

வாஷிங்டன், நவ. 24

காஷ்மீர் தொடர்பாகத் தவறாக வரையப்பட்ட வரைபடத்தை அமெரிக்கா நீக்கியது.

அமெரிக்க அரசில் ‘டிபார்ட்மென்ட் ஒப் ஸ்டேட்’ என்ற துறையின் இணையத் தளத்தில் இடம்பெற்றுள்ள நாடுகள் பற்றிய பிரிவில் உலக நாடுகளைப் பற்றிய குறிப்புகள் மற்றும் வரைபடங்களில் இந்தியாவின் வரைபடத்தில் இடம்பெற வேண்டிய பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் பகுதியை, பாகிஸ்தானுடன் சேர்த்து வெளியிட்டிருந்தனர்.

இதற்கு இந்தியா கடும் எதிர்ப்பு தெரிவித்ததுடன் இந்தப் பிரச்சினையை அமெரிக்க அரசின் கவனத்துக்கு மத்திய வெளியுறவுத் துறை அமைச்சகம் கொண்டு சென்றது. அத்துடன் சர்ச்சைக்குரிய பகுதியை எப்படி பாகிஸ்தானுடன் சேர்த்து வெளியிடலாம் என அமெரிக்காவிடம் கேள்வியும் எழுப்பப்பட்டது. இதையடுத்து, அந்த வரைபடத்தை அமெரிக்கா நீக்கியுள்ளது.

இது குறித்து அமெரிக்க அரசின் குறிப்பிட்ட துறையின் செய்தித் தொடர்பாளர் விக்டோரியா நுலந்த் நேற்றுமுன்தினம் கூறுகையில், தவறான படம் வெளியிடப்பட்டதற்கு எந்த விதமான உள்நோக்கமும் இல்லை என்றார். (ந)

## சர்வாதிகாரி கடாபியின் மகன் சயீப் ஒரு பெண் பித்தர்!

### அவரது முன்னாள் மனைவி தகவல்

லண்டன், நவ.24




லிபியாவின் முன்னாள் சர்வாதிகாரி கடாபியின் மகன் சயீப், ஒரு பெண் பித்தர் என அவரது முன்னாள் மனைவி தெரிவித்துள்ளார்.

சயீப் அல் இஸ்லாமின் முன்னாள் மனைவியான உக்ரைன் நாட்டைச் சேர்ந்த நாடியா, பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் இந்தத் தகவலைக் கூறியுள்ளார்.

பேட்டியில் அவர் மேலும் கூறியதாவது:

ஹோட்டலில் நடனமாடி வந்த நான், சயீப்பைத் திருமணம் செய்து கொண்டேன். இதற்காக நான் முஸ்லிம் மதத்துக்கும் மாறினேன். ஆனால், அவரது குடும்பத்தினர் என்னை மருமகளாகவே நடத்தவில்லை. அத்துடன் சயீப் ஒரு பெண் பித்தர். எங்கள் வீடு விபசார விடுதி போலத்தான் இருக்கும். எப்போதும் அவரது நண்பர்களும், பெண்களும் எங்கள் வீட்டில் இருப்பார்கள். அவரது செயலால், இருவருக்கும் இடையே பிரச்சினை ஏற்பட்டது. இந்தப் பிரச்சினையின் போது என்னை உதைத்து, ஜன்னல் வழியாகத் தூக்கி எறிந்தார். இதனால் படுகாயமடைந்து, 47 நாள்கள் கோமா நிலையில் இருந்தேன். இதை அறிந்த கடாபி இந்தச் சம்பவத் தால் குடும்பத்துக்கு கெட்ட பெயர்ஏற்பட்டுவிட்டதாக அவரது மகனைக் கண்டித்திருந்தார். இதனால், அவர்கள் குடும்பத்திலும் குழப்பம் ஏற்பட்டது. இதனையடுத்து அவரிடமிருந்து பிரிந்துவிட்டேன். மீண்டும் சேர்ந்து வாழ 2008 இல், என்னை அழைத்தார். ஆனால் நான் மறுத்துவிட்டேன். இவ்வாறு நாடியா தெரிவித்துள்ளார். (ந)

## 3 வீரர்களுடன் பாதுகாப்பாக திரும்பியது சோயூஸ் விண்கலம்



மாஸ்கோ, நவ.24

விண்வெளியில் ஐந்து மாத காலம் தங்கியிருந்த ரஷ்ய, அமெரிக்க, ஜப்பானிய விண்வெளி வீரர்கள், சோயூஸ் விண்கலம் மூலம் நேற்றுமுன்தினம் பூமிக்குத் திரும்பியுள்ளனர்.

அமெரிக்கா, ரஷ்யா, ஜப்பான் உள்ளிட்ட பல நாடுகளின் ஒத்துழைப்புடன் விண்வெளியில் சர்வதேச ஆராய்ச்சி நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த விண்வெளி ஆராய்ச்சி நிலையத்தில், கடந்த ஐந்து மாதங்களுக்கும் மேலாகத் தங்கியிருந்த, அமெரிக்காவின் மைக் போசம், ஜப்பானின் சதோஷி புருகவா, ரஷ்யாவின் செர்ஜி வோல்கோவ் ஆகியோர், சோயூஸ் விண்கலத்தின் மூலம் பூமிக்குத் திரும்பியுள்ளனர். கஜகஸ்தானில் உள்ள அர்கல்யங்க் என்ற இடத்தில் தரையிறங்கிய சோயூஸ் விண் கலத்திலிருந்து, மூன்று நாட்டு வீரர்களும் வெளியே வந்தனர். அவர்கள் நல்ல உடல் நிலையில் இருந்த போதும் சம்பிரதாயத்துக்காக மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர். (ந)

# இந்தோனேசியா-மலேசியா உதைபந்தாட்ட மோதல்; நெரிசலில் சிக்கி ரசிகர்கள் இருவர் உயிரிழப்பு

தென்கிழக்காசியப் போட்டிகளில் நேற்றுமுன்தினம் நடந்த மலேசிய - இந்தோனேசிய அணிகளுக்கிடையேயான உதைபந்தாட்ட இறுதிப் போட்டியின்போது ஏற்பட்ட நெரிசலில் சிக்கி ரசிகர்கள் இருவர் உயிரிழந்தனர். பலர் காயமடைந்தனர். தென்கிழக்காசிய விளையாட்டுப் போட்டிகளில் உதைபந்தாட்ட இறுதியாட்டம் நேற்று முன்தினம் ஜகார்த்தாவில் உள்ள குளோரா மைதானத்தில் நடந்தது.

பரம வைரிகளான மலேசிய-இந்தோனேசிய அணிகள் இந்தப் போட்டியில் மோதின.

போட்டியைக் காண ஒரு லட்சம் ரசிகர்கள் குளோரா அரங்கத்தினுள் திரண்டிருந்தனர். அரங்கத்துக்கு வெளியே நுழைவுச் சீட்டுக்காகத் திரண்டிருந்த ஆயிரக் கணக்கான ரசிகர்கள், நுழைவுச் சீட்டுகள் கிடைக்காத ஆத்திரத்தில்



வன்முறையிலும் ஈடுபட்டனர்.

போட்டி நிறைவடைந்த வேளை மலேசியா வெற்றி என்ற தகவல் 'வன்முறைக் கும்பலுக்குக் கிடைத்தது.

இதனால், ஆத்திரமடைந்த இந்தோனேசிய ரசிகர்கள் மைதானத்தின் 15ஆவது எண் வாயிற்கதவை உடைத்துக் கொண்டு உள்ளே நுழைந்தனர்.

உதைபந்தாட்ட அரங்கப் பகுதியில், 5 ஆயிரம் பொலிஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்தனர். எனினும், அவர்களால் இந்த ரசிகர்கள் கும்பலை கட்டுப்படுத்த முடியாமல்போனது.

மைதானத்தில் ஏற்கனவே ஒரு லட்சத்துக்கு மேற்பட்ட ரசிகர்கள் திரண்டிருந்த நிலையில், மேலும் ஆயிரக் கணக்கான ரசிகர்கள் புகுந்தமையால் கடும் நெரிசல் ஏற்பட்டது.

இந்த நெரிசலில் சிக்கிய ரசிகர்கள் ஒருவர் மீது ஒருவர் விழுந்தனர். இதனையடுத்து பெண்கள், குழந்தைகளை மைதானப் பாதுகாவலர்கள் முதல் கட்டமாக மீட்டனர்.

ஆனாலும், இந்த நெரிசலில் சிக்கி இரு ரசிகர்கள் பலியாகினர். பலர் காயமடைந்தனர். இவர்களுள் ஒரு சிறுவன் கோமா நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

## நடாலை பந்தாடினார் பெடரர்

உலக இறுதிச் சுற்று டென்னிஸ் தொடரில் நேற்று முன்தினம் நடந்த ஆட்டம் ஒன்றில், ரபேல் நடாலை, ரோஜர் பெடரர் வீழ்த்தினார்.

தரவரிசையில் முதல் எட்டு இடங்களில் உள்ள டென்னிஸ் வீரர்கள் பங்கேற்கும் உலக இறுதிச் சுற்று டென்னிஸ் தொடர் லண்டனில் நடைபெற்று வருகிறது.

இதில், நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டம் ஒன்றில், இரண்டாம் நிலை வீரரான ஸ்பெய்னின் ரபேல் நடால், நான்காம் நிலை வீரரான சுவிட்ஸர்லாந்தின் ரோஜர் பெடரரை எதிர்கெண்டார்.

முதல் சுற்றை 6-3 என்ற கணக்கில் வெற்றிகொண்ட பெடரர், இரண்டாவது சுற்றை மிகவும் இலகுவாகத் தனதாகிக் கொண்டார்.

6-3, 6-3 என்ற கணக்கில் நடாலை வீழ்த்திய பெடரர், இரண்டாவது வெற்றியைப் பதிவுசெய்தார்.

இதேவேளை நடைபெற்ற மற்றொரு ஆட்டத்தில் ஆறாம் நிலை வீரரான டி சொங்கா, எட்டாம் நிலை வீரரான மார்டி பிஸ்ஸை எதிர்கொண்டார்.

இந்த ஆட்டத்தில், சிறப்பாக ஆடிய டி சொங்கா, 7-6, 6-1 என்ற செற் கணக்கில் வெற்றி கொண்டார்.

## போராடி இந்தியா பிடித்தது இரண்டாமிடம்

ஐ.சி.சி டெஸ்ட் அணிகளுக்கான தரவரிசைப் பட்டியலில் இந்திய அணி இரண்டாம் இடத்துக்கு முன்னேறியது.

சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐ.சி.சி) சார்பில், டெஸ்ட் அரங்கில் சிறந்து விளங்கும் அணிகளுக்கான தரவரிசைப் பட்டியல் வெளியிடப்பட்டது. சமீபத்திய ஆஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரை சமநிலை செய்ததால், 2 புள்ளிகளை இழந்த தென்னாபிரிக்க அணி மூன்றாவது (116) இடத்துக்கு தள்ளப்பட்டது. இதனால், மூன்றாவது இடத்தில் இருந்த இந்திய அணி (117 புள்ளி), இரண்டாவது இடத்துக்கு முன்னேறியது.

தற்போது நடைபெற்று வரும் மேற்கிந்தியத்தீவுகளுக்கு எதிரான டெஸ்ட் தொடரில், இந்திய அணி (2-0) முன்னிலை யில் உள்ளது. இந்த நிலையில், இந்தத் தொடரை 2-0 என்று வென்றால், 118 புள்ளிகள் கிடைக்கும். 3-0ணில் 119புள்ளிகள்பெறும்

ஒருவேளை மும்பை டெஸ்டில் இந்திய அணி தோல்வியடைந்தாலும், இரண்டாவது இடத்துக்கு (117) ஆபத்தில்லை. முதல் இடத்தில் இங்கிலாந்து (125) நீடிக்கிறது. ஆஸ்திரேலியா (105), இலங்கை (99), பாகிஸ்தான் (98) அணிகள், 4, 5 மற்றும் 6 ஆவது இடங்களில் உள்ளன. (15)

## கிரிக்கெட் சபைத் தேர்தல் வேட்புமனு தாக்கல்

### நாளை ஆரம்பம்

இலங்கைக் கிரிக்கெட் சபை நிர்வாகிகளைத் தெரிவுசெய்வதற்காக அடுத்த மாதம் 27ஆம் திகதி நடைபெறவுள்ள தேர்தலுக்கான வேட்புமனுக்கள் நாளை முதல் ஏற்றுக்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இந்த வேட்புமனுக்கள் நாளை (25ஆம் திகதி) முதல் 14 நாள்களுக்கு ஏற்றுக் கொள்ளப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஜமைக்க ஓட்ட வீரருக்கு ஆயுள்காலத் தடை

ஜமைக்காவின் ஓட்ட வீரரான ஸ்டீவ் மல்லிங்ஸிற்கு இரண்டாவது தடவையாக ஊக்கமருந்துச் சோதனையில் சிக்கியமையால் அவருக்கு விளையாட ஆயுள்காலத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தடையை எதிர்த்து அவர் விளையாட்டு விவகாரங்களுக்கான சர்வதேச நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்யவுள்ளார்.

## வடேகருக்கு விருது

இந்தியக் கிரிக்கெட் சபை சார்பாக வழங்கப்படும் உயரிய விருதான 'சி.கே.நாயுடு வாழ்நாள் சாதனையாளர் விருது' இந்த முறை இந்திய அணியின் முன்னாள் தலைவரான அஜித் வடேகருக்கு வழங்கப்படவுள்ளது.

இதற்கான விழா சென்னையில் அடுத்த மாதம் 10ஆம் திகதி நடக்கவுள்ளது.

வடேகர் (வயது-70) தலைமையில்தான் இந்திய அணி முதல் முறையாக வெளிநாட்டு மண்ணில் டெஸ்ட் தொடரை வென்று சாதனை படைத்தது.

## ஐ.சி.சி. அதிகாரி பதவி விலகல்

சர்வதேச கிரிக்கெட் சபையின் (ஐ.சி.சி) தலைமைச் செயல் அதிகாரியான ஹரூன் லோர்கட், 2012ஆம் ஆண்டு ஜூன் மாதத்துடன் தமது பதவியிலிருந்து விலகவுள்ளார்.

## தினந்தோறும் பறக்கும் இரண்டு கோடி

லண்டனில் அடுத்த ஆண்டு ஒலிம்பிக் போட்டிகள் நடைபெறுகிறது. இதற்காக மைதானங்கள் தயார் செய்யும் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. இதுவரை கூடைப்பந்து, நீச்சல் உள்ளிட்ட 5 மைதானங்களின் பணிகள் முழுமையாக நிறைவடைந்துள்ளன.

இங்கு பயங்கரவாதத் தாக்குதலோ அல்லது வேறு அசம்பாவித சம்பவங்களோ நடைபெற வாய்ப்பு இருப்பதால் மிகப்பெரிய அளவில் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இதற்காக தினந்தோறும் ரூ.2 கோடி செலவிடப்பட்டு வருகிறது என்று இங்கிலாந்து பத்திரிக்கை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. மேலும் இந்த மைதானங்களின் பாதுகாப்பு செலவை கடந்த ஆண்டோடு ஒப்பிடும்போது இப்போது மும்மடங்காக அதிகரித்துள்ளது தெரியவந்துள்ளது.

மற்றொரு ஊடகம் வெளியிட்டுள்ள செய்தியில், 2011 ஆம் ஆண்டு பாதுகாப்புக்காக சுமார் ரூ.250 கோடி செலவிட்டுள்ளதாகவும், செப்டம்பர் மாதத்தில் மட்டும் சுமார் ரூ.61 கோடி செலவிடப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

ஒலிம்பிக் போட்டி தொடங்க இன்னும் சற்றேறக்குறைய 8 மாதங்கள் உள்ளன. ஒலிம்பிக் போட்டி 2012 ஜூலை 27 ஆம் திகதி தொடங்கி ஆகஸ்ட் 12 ஆம் திகதி நிறைவடைகிறது. (15)

## இலங்கை டெஸ்ட் அணியில் மீண்டும் மெண்டிஸ்

தென்னாபிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் தொடருக்கான இலங்கை அணியில் அஜந்த மெண்டிஸ் மீண்டும் சேர்க்கப்பட்டுள்ளார்.

தென்னாபிரிக்க - இலங்கை அணிகளுக்கிடையிலான டெஸ்ட் தொடர் அடுத்த மாதம் 15ஆம் திகதி தென்னாபிரிக்காவில் தொடங்கவுள்ளது.

இந்தத் தொடருக்கான இலங்கை அணி நேற்று அறிவிக்கப்பட்டது.

இந்த அணியில் சுழற்பந்து வீச்சாளரான அஜந்த மென்டிஸ் சேர்க்கப்பட்டுள்ளார்.

டிசம்பர் 9ஆம் திகதி தென்னாபிரிக்க 'ஏ' அணியுடனான



பயிற்சி ஆட்டத்திலும், பின்னர் 3 டெஸ்ட்கள் மற்றும் 5 ஒருநாள் போட்டிகளிலும் இலங்கை அணி விளையாடவுள்ளது.

முதல் டெஸ்ட் செஞ்சூரியனில் டிசம்பர் 15ஆம் திகதி தொடங்குகிறது. இரண்டாவது டெஸ்ட் டிசம்பர் 26ஆம் திகதி டர்பனிலும், 3ஆவது டெஸ்ட் ஜனவரி 3ஆம் திகதி கேப்டவுனிலும் ஆரம்பமாகும்.

தென்னாபிரிக்காவுக்கு எதிரான இலங்கை டெஸ்ட் அணி வருமாறு:-

திலகரட்ண டில்ஷான் (அணித்தலைவர்), அஞ்சலோ மத்யூஸ் (துணைத்தலைவர்), தரங்க பரணவிதாண, குமார் சங்கக்கார, மஹேல ஜெயவர்தன, டினேஸ் சந்திமால், கௌசல் சில்வா, லஹிரு திருமன்னே, டிமுத் கருணாரத்ன, ஷானக வெலகெதர, டில்ஹார பெர்னாண்டோ, நுவான் பிரதீப், சுரங்க லக்மல், திஸார பெரேரா, அஜந்த மெண்டிஸ், ரங்கன் ஹேரத்.

## ஜெயவர்தன 'அவுட்'

பாகிஸ்தானுக்கு எதிரான ஒரே ஒரு 'ரி-20' ஆட்டத்திலிருந்து, காயம் காரணமாக இலங்கைஅணியின் முன்னணி வீரர் மஹேல ஜெயவர்தன நீக்கப்பட்டுள்ளார்.

ஐக்கிய அரபு எமிரேட்ஸ் (யு.ஏ.இ.) சென்றுள்ள பாகிஸ்தான், இலங்கை அணிகள் ஐந்து ஆட்டங்கள் கொண்ட ஒரு நாள் தொடரில் பங்கேற்கின்றன. நான்கு ஆட்டங்களின் முடிவில் பாகிஸ்தான் அணி 3-1 என்ற கணக்கில், ஏற்கனவே தொடரை கைப்பற்றி முன்னிலை வகிக்கிறது. ஐந்தாவது மற்றும் கடைசி ஆட்டம் அபுதாபியில் நேற்று நடைபெற்றது. இந்த ஆட்டத்துக்கு பின்னர், நாளை இந்த இரு அணிகளும், ஒரே ஒரு சர்வ தேச 'ரி-20' ஆட்டத்தில் மோதுகின்றன.

சமீபத்தில் சார்ஜாவில் நடந்த நான்காவது ஒருநாள் ஆட்டத்தின் போது, இலங்கை வீரர் மஹேல ஜெயவர்தனவின் முழங்காலில் காயம் ஏற்பட்டது. இதனால் இவர், ஒரே ஒரு 'ரி-20' ஆட்டத்திலிருந்து அதிரடியாக நீக்கப்பட்டார். உடனடியாக சொந்த ஊர் திரும்பிய இவருக்கு பதிலாக, சமர சில்வா தேர்வு செய்யப்பட்டுள்ளார். இதுவரை சில்வா, 11 டெஸ்ட், 74 ஒரு நாள் போட்டியில் விளையாடி உள்ளார்.

இடதுகை கட்டைவிரலில் ஏற்பட்ட காயத்தால் பாதிக்கப்பட்ட இலங்கை அணித்தலைவர் டில்ஷான், எஞ்சிய ஆட்டத்தில் விளையாடுவார். இவரது காயம் பெரிய அளவில் பாதிப்பை ஏற்படுத்தாது என்பதால், 'ரி-20' ஆட்டத்தில் விளையாட உள்ளார். (15)

# இறுதி ஆட்டத்திலும் விடாத பாகிஸ்தான்

பாகிஸ்தானுடனான இறுதி ஒரு நாள் ஆட்டத்திலும் இலங்கை அணி 3 இலக்குகளால் தோல்வியைத் தழுவியது. பாகிஸ்தான் வீரர்கள் சகலதுறைகளிலும் ஜொலிக்க இலகுவாக நேற்றைய தினமும் வெற்றியை பதிவு செய்தது. இதன் மூலம் 5 ஆட்டங்கள் கொண்ட ஒரு நாள் தொடரை 4-1 என்று கைப் பற்றியது.

இலங்கை மற்றும் பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான ஒரு நாள் தொடரர் ஐக்கிய அரபு எமிரேட்டில் நடைபெற்றது. இதில் முன்னதாக நடைபெற்ற மூன்று டெஸ்ட் ஆட்டங்கள் கொண்ட தொடரை இலங்கை அணி 1-0 என்ற கணக்கில் இழந்தது. இதன் பின்னர் இடம்பெற்ற ஒரு நாள் தொடரில் நடைபெற்று முடிந்த 4 ஒரு நாள் ஆட்டங்களில் 3-1 என்ற கணக்கில் தோல்வியடைந்து இந் தத் தொடரையும் பறிகொடுத்த நிலையில் ஆறுதல் ஆட்டம் டுபாயில் நேற்று இடம்பெற்றது.

இதில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணியின் தலைவர் டில்ஷான் முதலில் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தார். ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக் களமிறங்கிய தரங்க, டில்ஷான் இருவரும் வழமை போன்று அணிக்கு ஏமாற்றத்தையே கொடுத்தனர். தரங்க 3, டில்ஷான் 12, சந்திமால் 7 என்று அடுத்தடுத்து இலங்கையின் முன்வரிசை துடுப்பாட்ட வீரர்கள் பவிலியனுக்கு விரைந்தனர். 32 ஓட்டங்களுக்கு அணி 3 இலக்குகளை இழந்து தடுமாறியது. மஹேல ஜெயவர்தனவுக்கு பதிலாக அணியில் இணைக்கப்பட்ட சாமர சில்வா ஒரு ஓட்டத்துடன் வெளியேற இலங்கையின் ஆட்டம் தலைகீழாய் மாறியது.

10.5 பந்து பரிமாற்றங்களில் 46 ஓட்டங்களுக்கு 4 இலக்குகளை இழந்து தடுமாறியது. இதன் பின்னர் இணைந்த சங்ககார, மத்தியூஸ் ஜோடி அணியை மீட்டெடுத்தது. 5 ஆவது இலக்குக்காக இருவரும் 118 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பகிர்ந்து கொண்டனர். சிறப்பாகத் துடுப்பெடுத்தாடிய சங்ககார 55 பந்துகளில் தனது 67 ஆவது சர்வதேச ஒரு நாள் அரைச்சதத்தை பூர்த்தி செய்தார். இந்த ஜோடியின் சிறப்பான ஓட்டக்குவிப்பின் மூலம் இலங்கை அணி 150 ஓட்டங்களைத் தாண்டியது. மறுமுனையில் சங்காவுக்கு இணையாக ஆடிய மத்தியூஸும் 88 பந்துகளில் தனது 8 ஆவது அரைச் சதத்தை பூர்த்தி செய்தார்.

இந்த ஜோடி 28 பந்து பரிமாற்றங்களில் 118 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பகிர்ந்த நிலையில் பிரிக்கப்பட்டது. அணி 38.5 பந்து பரிமாற்றங்களில் 164 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் சங்ககார 100 பந்துகளில் 8 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 78 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அடுத்து நுழைந்த ஜீவன் மெண்டிஸ் 2 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

சிறப்பாக ஆடிய மத்தியூஸும் 101 பந்துகளில் 2 ஆறு ஓட்டங்கள், 2 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 61 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டமிழக்க இலங்கை அணி 180 ஓட்டங்களுக்கு 7 ஆவது இலக்கையும் இழந்தது. இதன் பின்பு இணைந்த திஸ்ஸர பெரேரா, சீகுகே பிரசன்ன ஜோடி பாகிஸ்தானின் பந்து வீச்சை சமாளித்து ஓட்டங்களைக் குவித்தது. இந்த அணியின் நம்பிக்கையான போராட்டத்தின் மூலம் இலங்கை அணி 200 ஓட்டங்களை தாண்டியது. அதிரடியாக ஆடிய பெரேரா 18 பந்துகளில் 25 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் இறுதிப்பந்து பரிமாற்றத்தில் ஆட்டமிழந்தார். அடுத்து நுழைந்த மலிங்க முதலாவது பந்திலேயே 4 ஓட்டங்கள் விளாசினார். இருப்பினும் அடுத்த பந்து வீச்சில் ஆட்டமிழந்து வெளியேற இலங்கை அணியின் ஆட்டம் முடிவுக்கு வந்தது. பிரசன்ன ஆட்டமிழக்காமல் 8 ஓட்டங்களைப் பெற்றார்.

இறுதியில் 50 பந்து பரிமாற்றங்கள் நிறைவில் இலங்கை அணி 9 இலக்குகளை இழந்து 218 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. பந்து வீச்சில் பாகிஸ்தான் சார்பில் தன்வீர் 4 இலக்குகளை கைப்பற்றினார்.

பதிலுக்கு இலகுவான இலக்கை விரட்டத் தொடங்கியது பாகிஸ்தான் அணி. இருப்பினும் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் பாகிஸ்தான் அணிக்கு சிறப்பான அடித்தளத்தை அமைத்துக் கொடுக்கவில்லை. அணி 25 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஹபீஸை 14 ஓட்டங்களுடன் இழந்தது. தொடர்ந்து நிதானமாகவே ஆட்டத்தை தொடர்ந்த பாகிஸ்தான் அணி 76 பந்துகளில் தனது முதலாவது 50 ஓட்டத்தை தொட்டது.

இரண்டாவது இலக்கு 51 ஓட்டங்களில் வீழ்த்தப்பட்டது. அஷாட் சயிக் 26 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். இதன் பின்னர் இணைந்த யுனிஸ்கான் மற்றும் அணித்தலைவர் மிஷ்பா உல்ஹக் சிறப்பாக அணியை வழிநடத்தி சென்றனர். மெதுவாக ஓட்டங்களை பாகிஸ்தான் அணி சேர்த்தது. 142 பந்துகளில் பாகிஸ்தான் அணி தனது 100 ஓட்டங்களை எட்டியது. சிறப்பாக மூன்றாவது இலக்குக்காக இணைப்பாட்டம் பகிர்ந்து கொண்டிருந்த யுனிஸ்கானை இலங்கை அணி 26 ஆவது பந்து பரிமாற்றத்தில் வீழ்த்தியது. அணி 113 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் 34 ஓட்டங்களுடன் யுனிஸ்கான் ஆட்டமிழந்து வெளியேறினார். அடுத்து நுழைந்த மலிக் ஓட்டமெதனையும் பெறாத நிலையில் 'கோல்டன் டக்' ஆகி வெளியேறினார். சடுதியாக பாகிஸ்தான் அணி 113 ஓட்டங்களுக்கு 4 இலக்குகளை இழந்தது.

அதன் பின்பு களம்புகுந்த உமர் அக்மல் அணித்தலைவர் மிஷ்பாவுடன் இணைந்து துடுப்பாட்டத்தை தொடர்ந்தார். இந்த ஜோடி ஓட்டக்குவிப்பில் வேகமாக ஈடுபட்டது. சிறப்பாக ஆடிய மிஷ்பா 72 பந்துகளில் தனது 18 ஆவது அரைச்சதத்தை பூர்த்தி செய்தார். சிறப்பாக ஆடிய இந்த ஜோடி அணியை வெற்றிக்கு அழைத்துச் சென்றது. இருப்பினும் 200 ஓட்டங்களை எட்டுவதற்கு 3 ஓட்டங்கள் தேவையான நிலையில் மிஷ்பாவின் இலக்கு இலங்கை அணியால் வீழ்த்தப்பட்டது. மிஷ்பா 66 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேறினார். அடுத்து 'பூம் பூம்' அப்ரிடி களமிறங்கினார். வந்த வேகத்தில் 4 ஓட்டங்களுடன் மலிங்கவின் பந்து வீச்சில் அப்ரிடி ஆட்டமிழந்து வெளியேற பாகிஸ்தான் 202 ஓட்டங்களுக்கு 6 இலக்குகளை இழந்தது.

இருப்பினும் மறுமுனையில் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடிய உமர் அக்மல் 52 பந்துகளில் தனது 10 ஆவது அரைச்சதத்தை எட்டினார். பாகிஸ்தான் அணியும் வெற்றியிலக்கை எட்டும் தறுவாயில் 7 ஆவது இலக்கை இழந்தது. தன்வீர் ஒரு ஓட்டத்துடன் ஆட்டமிழந்து வெளியேறினார். அடுத்த பந்திலேயே உமர் அக்மல் நான்கு ஓட்டம் விளாச பாகிஸ்தான் அணி வெற்றியைத் தொட்டது. 47.2 பந்து வீச்சுக்களில் 219 ஓட்டங்களை 7 இலக்குகளை மாத்திரம் இழந்து எட்டியது. இதன் மூலம் இலங்கை அணியை 3 இலக்குகளால் பாகிஸ்தான் அணி வெற்றி கொண்டது.

பந்து வீச்சில் இலங்கை அணி சார்பில் ஜீவன் மெண்டிஸ் 3, பெர்னாண்டோ 2 இலக்குகளை கைப்பற்றினர். ஆட்ட நாயகனாக உமர் அக்மல் தெரிவு செய்யப்பட்டார். (15)

# டரன் பிராவோ அதிரடி; விழி பிதுங்கிய இந்தியா!

## 500 ஓட்டங்களை கடந்தது மேற்கிந்தியா!



டரன் பிராவோ

டரன் பிராவோவின் அசத்தலான சதத்தின் உதவியுடன் மேற்கிந்தியத்தீவுகள் அணி முதலாவது இன்னிங்ஸில் பலமான நிலையை அடைந்தது. நேற்றைய இரண்டாவது நாள் ஆட்ட நேர முடிவில் 9 இலக்குகளை இழந்து 575 ஓட்டங்களை மேற்கிந்தியத்தீவுகள் அணி பெற்றுள்ளது.

இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள மேற்கிந்தியத்தீவுகள் 3 டெஸ்ட் ஆட்டங்கள் கொண்ட தொடரில் விளையாடிவருகின்றது. இதில் முதலிரு ஆட்டங்களிலும் இந்திய அணி வெற்றி பெற்று தொடரை ஏற்கனவே கைப்பற்றியுள்ளது. இந்த நிலையில் மூன்றாவதும் இறுதியுமான டெஸ்ட் ஆட்டம் மும்பையில் நேற்று முன்தினம் ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற மேற்கிந்தியத்தீவுகள் அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களின் சிறப்பான அடித்தளத்துடன் மேற்கிந்தியத்தீவுகள் அணி நேற்றுமுன்தினம் முதலாவது நாள் ஆட்டத்தை நிறைவு செய்தது. நேற்று முன்தினம் ஆட்ட நேர முடிவில் 2 இலக்குகளை மாத்திரம் இழந்து 267 ஓட்டங்களை மேற்கிந்தியத்தீவுகள் அணி பெற்றிருந்தது. கிரிக் எட்வேட்ஸ் 65, டரன் பிராவோ 57 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தனர்.

பலமான நிலையுடன் நேற்றைய இரண்டாவது நாள் ஆட்டத்தை மேற்கிந்தியத்தீவுகள் அணி தொடர்ந்தது. மதியபோசன இடைவேளைக்கு முன்பதாக சிறப்பாக ஆடிக் கொண்டிருந்த கிரிக் எட்வேட்ஸ் 164 ஓட்டங்கள் பகிரப்பட்ட நிலையில் 86 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து நுழைந்த கெரன் பவல், டரன் பிராவோவுடன் இணைந்து ஆட்டத்தை தொடர்ந்தார். சிறப்பாக ஆடிய டரன் பிராவோ தனது மூன்றாவது டெஸ்ட் சதத்தை பூர்த்தி செய்தார். இந்த ஜோடி வேகமாக ஓட்டங்களைச் சேர்த்தது. இந்திய அணியினர் ஒவ்வொரு வீரரையும் ஆட்டமிழக்கச் செய்ய திணறினர். 4 ஆவது இலக்குக்காக 160 ஓட்டங்கள் பகிரப் பட்ட நிலையில் கரன் பவல் 81 ஓட்டங்க ளுடன் ஆட்டமிழந்தார்.

அடுத்து நுழைந்த சாமுவேல்ஸ், டரன் பிராவோவுடன் இணைந்து ஆட்டத்தை தொடர மேற்கிந்தியத்தீவுகள் அணி 500 ஓட்டங்களைக் கடந்தது. அணி 518 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆரம்பம் முதல் சிறப்பாக ஆடி வந்த டரன் பிராவோ 166 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேறினார். அதன் பின்னர் மேற்கிந்தியத்தீவுகளின் பின்வரிசை வீரர்களின் இலக்குகள் சீரான இடைவெளியில் சரிந்த போதும் சாமுவேல்ஸ் தனித்துப் போராடி அரைச்சதம் கடந்தார். இறுதியில் அவரும் 61 ஓட்டங்களுடன் வெளியேற 566 ஓட்டங்களுக்கு மேற்கிந்தியத்தீவுகள் அணி 9 ஆவது இலக்கை இழந்தது.

பந்து வீச்சில் இந்திய அணி சார்பில் அஸ்வின் 4, ஆரோன் 3 இலக்குகளைக் கைப்பற்றினர். நேற்றைய இரண்டாம் நாள் ஆட்டநேர முடிவில் மேற்கிந்தியத்தீவுகள் அணி 9 இலக்குகளை இழந்து 575 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டுள்ளது. களத்தில் பிடல் எட்வேட்ஸ் 7, பிஷூ 2 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காது களத்தில் உள்ளனர். (15)

## வீடு விற்பனைக்கு

யாழ். பிறவுண் வீதியில் ¾ பரப்பு காணியுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு
(10279)
தொடர்பு :- 0778282783, 0776994391

## மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா கற்கை நெறி

யாழ்ப்பாணம்,நவ.24

யாழ்.பல்கலைக்கழக, முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீடத்தின் மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா கற்கைநெறி நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ மண்டபத்தில் ஆரம்பமாகவுள்ளது.

இந்தக் கற்கை நெறிக்கு விண்ணப்பித்தவர்களை கலந்து கொள்ளுமாறு அதன் பீடாதிபதி பேராசிரியர் தி. வேல்நம்பி அறிவித்துள்ளார். (ஒ-10)

## மாதாந்த ஆய்வரங்கம்

யாழ்ப்பாணம்,நவ.24

அபிவிருத்திக்கான சமூக அமைப்புக்களின் வலையமைப்பு(சொண்ட்) நிறுவனத்தின் ஏற்பாட்டில் ''யாழ். குடாநாட்டில் பரவக்கூடிய தொற்று நோய்களும் அதன் தாக்கமும், அவற்றைத் தடுக்கும் வழிமுறைகளும் '' என்னும் தலைப்பில் ஆய்வரங்கு நாளை மறுதினம் சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். அரசடி வீதியிலுள்ள அதன் செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இந்தஆய்வரங்கில்பிராந்தியசுகாதார சேவைகள் பணிமனையைச் சேர்ந்த வைத்திய கலாநிதி எஸ். சிவகணேசன் கலந்து கொண்டு கருத்துக்களை வழங்குவார். (ஒ-10)

## பஜிரோ சாரதி விளக்க மறியலில்

தென்மராட்சி, நவ.24

மீசாலையில் கடந்தவாரம் இடம்பெற்ற தனியார் பஸ்- பஜிரோ விபத்துத் தொடர்பாக பஜிரோ வாகனச் சாரதி சாவகச்சேரி நீதிமன்றினால் விளக்க மறியலில் வைக்கப்பட்டார்.

இந்த விபத்தில் பஜிரோவில் பயணித்த யாழ். நகர வர்த்தகரின் மனைவி பர்ஞ்சோதி தேவகுஞ்சரி (வயது-52) மரணமானது தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் பஜிரோ சாரதியைக் கைது செய்து நீதிமன்றில் ஆஜர் செய்தனர்.

வழக்கை விசாரித்த நீதிவான் மா.கணேசராஜா சாரதியை எதிர்வரும் 28ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (ஒ-207)

## கல்விமாணி கற்கைநெறி

தேசிய கல்வி நிறுவனத்தின் ஏற்பாட்டில் யாழ். மத்திய கல்லூரியில் நடைபெற்றுவந்த கல்விமாணிக் கற்கைநெறி வகுப்புக்கள் நாளை மறுதினம் சனிக்கிழமை காலையும் 9.00 மணிக்கு அங்கு இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)

## புராதன பொருள்கள்சேகரிப்பு- கொக்குவில் பொது நூலகம்

எமது பொது நூலகத்தில் புராதனப் பொருள்கள் சேகரிப்பு பகுதியை எமது மாணவர்களுக்காகவும் வளரும் சந்ததியினருக்காகவும் உருவாக்கிப் பாதுகாக்கவுள்ளோம்.

அரிதான புராதன பொருள்களை வைத்திருப்போர் அவற்றை நூலகத்துக்கு அன்பளிப்பாக வழங்கி உதவுமாறு கேட்டுக் கொள்கின்றேன். இந்தப் பொருள்களை பிறவுண் வீதியில் அமைந்துள்ள கொக்குவில் பொதுநூலகத்தில் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

தொடர்புக்கு:- 0779050319, 0776621652.
ப.வசந்தகுமார், தவிசாளர், நல்லூர் பிரதேச சபை, கொக்குவில்.

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

### பரமநாயகம் மயூரன்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 26 | 09 |
| 12 | 12 |
| 1980 | 2007 |

திதி: அமாவாசை

அன்பான அப்பாவே!
பிஞ்சுப் பாலகனைத்
தவிக்க விட்டுச் சென்றாயோ!
ஆண்டு பல சென்றாலும்
என் துயரம் நீங்காது.....

ஏழாலை மேற்கு,
தேவி கோயிலடி.
மகன்
ம.விஜேஷ்.

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியர் திருமதி ஜெயலக்சுமி வரதராஜன் அவர்களின் அன்பு மாமன்

**முத்தையா மாணிக்கம்**

அவர்கள் 22.11.2011 அன்று காலமானார். அன்னாரின் இழப்பால் துயரத்தில் இருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.

**ஆசிரியர் நலன்புரிகழகம்,**
**யா/இராமநாதன் கல்லூரி, சுன்னாகம்.**

## கண்ணீர் அஞ்சலி



*செல்வன் ஜெகநாதன் செந்தூரன்*
*(2010 வரணி சைவப்பிரகாச முன் பள்ளியின் பழைய மாணவன்)*

*21.11.2011 அன்று அகால மரணமடைந்த எமது பாடசாலையின் பழைய மாணவனின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

யா/வரணி சைவப்பிரகாச முன்பள்ளி, வரணி.
முன்பள்ளி ஆசிரியர்கள். ஞா.மதுரா, கி.ஜெயமதி.

## கண்ணீர் அஞ்சலி



கோப்பாய் சீ.டி ஹவுஸ் உரிமையாளரான நா.ஜெகரூபன் அவர்களின் அன்புப் போர்த்தியும் நிறுவனத்தின் ஆரம்ப கர்த்தாவும் ஆன

**சிவஸ்ரீ சோமசுந்தரக்குருக்கள் தையலம்மா**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப்பிரார்த்திக்கின்றோம்.

சீ.டி.ஹவுஸ்(CD House)
கோப்பாய் சந்தி, கோப்பாய்.
வாடிக்கையாளர்.
(C/6154)

## முதியோர் இல்லம்

"யாழில் முதியோர் இல்லம்" திருநெல்வேலி Central Nursing Home உடன் இணைந்து முதியோர், நோயாளர் யாழ்நகரிலும் பராமரிக்கப்படுகின்றனர், Home Nursing வசதியுண்டு.
தொடர்பு:0718234691,0752555689

## தவறிவிட்டது

யாழ்.நகரில் அன்னை புத்தகசாலைக்கு முன்பாக நிறுத்தப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளில் வைக்கப்பட்டிருந்த பாடசாலை ஆவணங்கள் அடங்கிய பை ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் அன்னை புத்தகசாலையில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும்.

# மரண அறிவித்தல்கள்

## பொன்னர் கனகசபை

(ஓய்வுபெற்ற ஆசிரியரும், புலோலி வில்லிபாதி முருகன் ஆலய பரிபாலன சபையின் பொருளாளரும்)



புலோலி வடமேற்கு, முருகன் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னர் கனகசபை நேற்று (23.11.2011) புதன்கிழமை அதிகாலை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் திலகவதியின் அன்புக் கணவரும், இரவீந்திரன், உமா (ஆசிரியை, புளியம்பொக்கணை நாகேந்திரா வித்தியாலயம்), ராதா (பிரான்ஸ்), திலகாஸ்வரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், யசோதா, யோகராசா, கருணாகரன்(பிரான்ஸ்) ஆகியோரின் மாமனும், அப்பையா (ஓய்வுபெற்ற பிரதம எழுதுவினைஞர்), பூபாலன் (ஓய்வுபெற்ற ஆசிரியர்) ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (23.11.2011) புதன்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கருகம்பன் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

முருகன் கோயிலடி,
புலோலி வடமேற்கு.
தகவல்:
குடும்பத்தினர்.

## திருமதி சோமசுந்தரக்குருக்கள் தையலம்மா



கோப்பாய் வீதி, உரும்பிராய் தெற்கு, உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சோமசுந்தரக்குருக்கள் தையலம்மா நேற்று (23.11.2011) புதன்கிழமை சிவைக்கியம் ஆனார்.

அன்னார் சிவபதமடைந்த கந்தையா சோமசுந்தரக் குருக்களின் அன்பு மனைவியும், சிவஸ்ரீ தெட்சணாமூர்த்தி குருக்கள்(கொழும்புத்துறை முத்துமாரி அம்மன் தேவஸ்தான நித்திய பூசகர்), சிவஸ்ரீ சத்தியமூர்த்திக்குருக்கள் (ஏழாலை- மயிலங்காடு பர்வத பத்தினி அம்மன் கோயில் குரு), கனகாம்பிகை, கருணாமூர்த்தி(சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயும், தெ.சறோஜினிதேவி, ச.பரமேஸ்வரி, இ.நாகேந்திரராசா(ஓய்வுபெற்ற ஊழியர், மின்சாரசபை ) ஆகியோரின அன்பு மாமியும், திருமதி செந்தூர்ச்செல்வி கோடீஸ்வரன்(கொழும்பு), சத்தியசீலன்ஐயர்(பூசகர்- அனலைதீவு), ஜெயசீலன்ஐயர்(பூசகர், அனலைதீவு), சிவரூபன்(சந்தை ஆய்வாளர்- விவசாயத் திணைக்களம், மன்னார்; பொருளாதார ஊடகவியலாளர்), ஜெகரூபன்(உரிமையாளர்,CD HOUSE, கோப்பாய்), அபிராமி(மட்டு. விபுலானந்தா நுண்கலைக் கல்லூரி) ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.11.2011) வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று சமாதிக்கிரியைகளுக்காக உரும்பிராய் வேம்பன் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கோப்பாய் வீதி, உரும்பிராய் தெற்கு,
உரும்பிராய்.
தகவல்:
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## வன்னிக்குட்டி செல்லத்துரை

(கொழும்பான்) (ஓய்வுபெற்ற சீமெந்துக் கூட்டுத்தாபன ஊழியர்)



கிளானை, கொல்லங்கலட்டியை பிறப்பிடமாகவும் தாவடி பிள்ளையார் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்டவன்னிக்குட்டி செல்லத்துரை நேற்று (23.11.2011) புதன்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வன்னிக்குட்டி - கொத்தியார் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கிட்டினர்- சின்னன் தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற தங்கம்மாவின் அன்புக் கணவரும், வைரவநாதன், இராசேந்திரம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்றவர்களான சேனர், சின்னாச்சிப்பிள்ளை, சோதிப்பிள்ளை, தருமர் மற்றும் மகாலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், தர்மலட்சுமி, வரதராசா(உடையார்), அருள்ராசா(பிரான்ஸ்), தெய்வநாயகி, செல்வராசா, நாகராசா, நகுலேஸ்வரி(ராதா- லண்டன்), உதயரஞ்சினி, உதயராசா (சுவிஸ்), உதயமலர் ஆகியோரின் பாசமிகு தந்தையும், தர்மலிங்கம், காசிநாதன், சிவனேஸ்வரி, விஜயலட்சுமி, கமலாதேவி, சிவதாசன், சிவகுமார், குகதாஸ் ஆகியோரின் அன்பு மாமனாரும், ரிஷிகேசன், காலஞ்சென்ற நித்தியகேசன் மற்றும் ஜெகதீஸ்வரி, இராஜேஸ்வரி, பரமேஸ்வரி, பரமேஸ்வரன்(சுவீடன்), யசோதா, சரஸ்வதி கஜேந்திரன், நளாயினி, வித்தியாதரன், நிர்மலன், சியாமளா, பிந்துஜன், லக்ஷன், சதிஷா, சாரங்கன், சபேசன், வேனுசன், தனுசன், சதுர்ஷா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.11.2011) வியாழக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரின் தற்காலிக இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பிள்ளையார் கோயிலடி, தாவடி.
(ஒ/6152)
தகவல்:
வைரவநாதன்.

# கிணற்றில் தவறி விழுந்து இளைஞர் சாவு

தென்மராட்சி, நவ.24

கிணற்றில் குளிக்கச்சென்ற இளைஞர் தவறி வீழ்ந்து மரணமானார். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை சாவகச்சேரி கச்சாய் வீதி, ஓராம் கட்டையடியில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த தங்கராசா தங்கரூபன் (வயது-25) என்பவரே கிணற்றில் வீழ்ந்து மரணமானார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக சாவகச்சேரி பொலிஸார் நீதிவானிடம் அறிக்கை சமர்ப்பித்தனர். நீதிவானின் உத்தரவின் பிரகாரம் சாவகச்சேரிப் பிரிவு திடீர் மரண விசாரணை அதிகாரி செல்வி இ.சசிகலா பொலிஸாருடன் ஸ்தலத்துக்குச் சென்று பார்வையிட்டுச் சடலத்தைச் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை சவச்சாலையில் ஒப்படைத்து வைத்தியசாலை சட்ட வைத்திய அதிகாரி மூலம் உடற்கூற்றுப் பரிசோதனை நடத்துமாறு உத்தரவிட்டார்.

நேற்றுமுன்தினம் இரவு 11 மணிக்கு கிணற்றில் இருந்து சடலம் மீட்கப்பட்டு சாவகச்சேரி வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது. (த-207)

## தற்போதைய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிதி அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எதிர்கொண்ட சவால்களைப் போல் எந்தவொரு நிதி அமைச்சரும் எதிர்கொள்ளவில்லை. அத்தனை சவால்களையும் தாண்டி ஒவ்வொரு வருடமும் வெற்றிகரமான வரவு - செலவுத் திட்டத்தை சமர்ப்பித்தார்.

மக்களுக்குப் பாதிப்பு ஏற்படுத்தும் வகையில் வரவு செலவுத் திட்டம் ஒருபோதும் சமர்ப்பிப்பதில்லை. இப்போது சமர்ப்பிக்கப்பட்டுள்ள வரவு செலவுத் திட்டத்தால் மக்கள் அதிகளவில் நன்மையடைவர்.

இலங்கையிலுள்ள அனைவரும் வரி செலுத்துகின்றனர். பணக்காரர்களில் நேரடியாக அறவிடப்படுகின்றது. இலங்கை, இந்தியா, பூட்டான் போன்ற நாடுகளில் வரிகள் மறைமுகமாக அறவிடப்படுகின்றன. இந்த வரி அறவீட்டைத் தவிர்க்க முடியாது.

எமது நாட்டின் பொருளாதார வளர்ச்சி எட்டு வீதத்தை எட்டியுள்ளது. இதற்கு நிதி அமைச்சராக உள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவே காரணம். இலங்கை வரலாற்றில் எந்தவொரு அரசும் செய்யாத சாதனையைநமது அரசு செய்து வருகின்றது. பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ அபிவிருத்தியையும், அமைச்சர் பஸில் ராஜபக்ஷ பொருளாதார அபிவிருத்தியையும் மேற்கொண்டு வருகின்றனர். இவைபோல் இன்றும் பல அபிவிருத்திகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இந்த வரவு செலவுத் திட்டம் இவ்வாறான அபிவிருத்தித் திட்டங்களை மேலும் விரிவுபடுத்துகின்றது. உண்மையில் இந்த வரவு-செலவுத் திட்டம் மக்கள் நலன்களை முழுமையாக முதன்மைப்படுத்திய ஒன்றாகும் - என்றார் அவர்.

## தமிழ்மொழியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களுக்கும், ஏனைய இனத்தவர்களுக்கும் இடையிலான பரஸ்பர நல்லுறவுக்குப் பாதிப்பு ஏற்படும் என்பதை அமைச்சர் அறிவாரா? அதனை இந்தச் சபையில் அறிவிப்பாரா என்று தயாசிறி ஜயசேகர கேள்வி எழுப்பினார்.

இந்தக்கேள்விக்குப் பதிலளித்த அமைச்சர் வாசுதேவ நாணயக்கார, இப்படியான ஒரு சட்டம் கொண்டுவரப்படும் நோக்கம் இல்லை; கொண்டுவரப்படமாட்டாது - என்றார்.

அப்போது இடைமறித்த தயாசிறி, அப்படியானால் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற அரச மற்றும் பொது நிகழ்வுகளில் தமிழ்மொழியில் தேசிய கீதம் பாடுவதற்குத் தடைவிதிக்கப்பட்டதே. அது ஏன் என இடைக்கேள்வி ஒன்றை எழுப்பினார்.

யாழ்ப்பாணத்தில் சில அதிகாரிகள் தன்னிச்சையாகச் செயற்பட்டதாலேயே அங்கு பிரச்சினை ஏற்பட்டது. இப்போது அந்த நிலைமை இல்லை. தமிழ்மொழியிலேயே தேசிய கீதம் பாடப்படுகின்றது என்று விளக்கமளித்தார் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார. (ஒ-சி)

## வெளிநாட்டுத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது அந்தக்கட்சியின் பிரசாரச் செயலாளர் விஜித ஹேரத் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தார்.

அவர் அங்கு தொடர்ந்து கூறியவை வருமாறு:-

2012ஆம் ஆண்டுக்கான இந்த வரவு -செலவுத் திட்டத்திலே எந்தவொரு நிவாரணமும் இல்லை. கடந்த வருட வரவு-செலவுத் திட்டத்தையே மீண்டும் நடைமுறைப்படுத்த அரசு எண்ணியுள்ளது.

நாடாளுமன்றில் வரவு-செலவுத் திட்டத்தை முன்வைக்கும் முன்னரே அத்தியாவசியப் பொருள்களின் விலையை அதிகரித்துவிட்டது. அதன் பின்னர் பால்மா, சீனி, எரிவாயு, எரிபொருள் என்பவற்றுக்கான இறக்குமதி வரியைக் குறைத்துள்ளது அரசு.

ஜனாதிபதி பொதுமக்களை முற்றிலும் ஏமாற்றி இந்த வரவு-செலவுத் திட்டத்தை முன்வைத்துள்ளார்.

வியட்நாம், கென்யா போன்ற பல நாடுகளுக்கு மத்தியில், எமது நாட்டு தேயிலைக்கு அதிக கேள்வி நிலவும் நிலையில் அரசு ரூபாவின் பெறுமதியை மூன்று சதவீதமாகக் குறைத்துள்ளது.

இந்த நிலையில் தொடர்ந்தும் தேயிலையின் கேள்வி நிலை உயர்வாக இருக்குமா என்பது சந்தேகமே.

அரச ஊழியர்களுக்கு இனிப்பைக் காட்டி ஏமாற்றுவதுபோல சம்பள உயர்வைக் காட்டியுள்ளனர். ஆனால், தனியார்துறைக்குப் பாரபட்சமே காட்டியுள்ளனர்.

வருமானம் எதுவுமே இல்லாத இந்த வரவு-செலவுத்திட்டத்தில் 468.8 பில்லியனைத் துண்டுவிழும் தொகையாகக் காட்டியுள்ளது அரசு. இந்தத் தொகையை கடன் பெறுவதால் மட்டுமே அடைய முடியும் என்றாலும் பாதிக்கப்படப் போவது பொதுமக்களே.

இதனால், நாங்கள் ஏற்கனவே திட்டமிட்டப்படி நாடுமுழுவதும் ஆர்ப்பாட்டங்களை நடத்தவுள்ளோம்.

நாளை அநுராதபுரத்தில் பகல் 11 மணிக்கு ஆர்ப்பாட்டத்தை ஆரம்பித்து தொடர்ந்து 25ஆம், 28ஆம் திகதிகளில் நடத்தவுள்ளோம். அடுத்த மாதம் 4ஆம், 6ஆம் திகதிகளிலும் ஆர்ப்பாட்டங்கள் நடைபெறவுள்ளன - என்றார் விஜித ஹேரத்.

இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சந்திரசேகரன் ஆகியோரும் கலந்துகொண்டனர். (ஒ-சி)

## அரசியல் தீர்வை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிறிசேன, வாசுதேவ நாணயக்கார, டியூ குணசேகர, பஸில் ராஜபக்ஷ, ஆறுமுகன் தொண்டமான், சம்பிக்க ரணவக்க, டக்ளஸ் தேவானந்தா, ரவூப் ஹக்கீம், அநுர பிரியதர்ஷன யாப்பா, பேராசிரியர் திஸ்ஸ வித்தாரண, ரஜீவ விஜேசிங்க, ஏ.எச்.எம்.அஸ்வர், பி.பியசேன ஆகியோர் கையெழுத்திட்டுள்ளனர்.

* இந்தத் தெரிவுக்குழுவில் மக்கள் பிரதிநிதிகளான 31 பேர் இடம்பெறவேண்டும்.

* தெரிவுக்குழுவின் தலைவரைச் சபாநாயகரே நியமிப்பார்..

* இத்தெரிவுக்குழுவினர் தமது பரிந்துரை அறிக்கையை நியமிக்கப்பட்ட தினத்திலிருந்து ஆறு மாதங்களுக்குள் சமர்ப்பிக்கவேண்டும்.

**ஆராயப்பட வேண்டிய விடயங்கள்**

* அனைத்து இனமக்களும் தமது தனித்துவத்தையும், பாதுகாப்பையும், மேம்படுத்தவும், கண்ணியமாகவும், பாதுகாப்பாகவும் ஒரே தேச மக்களாக வாழ்வதை உறுதிப்படுத்தல்.

* இலங்கையில் வாழும் மக்களின் மத்தியில் ஐக்கியத்தை மேம்படுத்துதல்.

* சமூக, பொருளாதார, அரசியல் மற்றும் கலாசார அபிவிருத்திகளை மேம்படுத்துவதற்குத் தத்துவமளித்தல்.

**தெரிவுக்குழுவுக்கான அதிகாரங்கள்**

* அவசியம் எனக் கருதும் எவரையும் அழைத்து விசாரிக்கவும், ஆவணங்களைப் பரிசீலனை செய்யவும் -

* இவ்வாறு அழைக்கப்படும் நபரை சத்தியப்பிரமாணம் அல்லது உறுதிமொழியின்பேரில் விசாரணை செய்யவும் -

* தெரிவுக்குழுவுக்கு துணைபுரியும் பொருட்டு உரிய துறையிலுள்ள நிபுணர்களினதும், வல்லுநர்களினதும் சேவைகளைப் பெற்றுக்கொள்ளவும் -

* காலத்திற்குக் காலம் இடைக்கால அறிக்கைகளைச் சமர்ப்பிக்கவும் இந்தத் தெரிவுக்குழுவுக்கு அதிகாரம் அளிக்கப்படவேண்டும் எனவும் இந்தப் பிரேரணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஒ-சி)

## எதிர்க்கட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

எனினும் தாக்குதல் நடத்தும் வழக்கத்தை ஐக்கிய தேசியக் கட்சியே ஆரம்பித்து வைத்துள்ளது. 1977 மற்றும் 1994ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஐக்கியத் தேசியக் கட்சியினர் அப்போதைய எதிர்க்கட்சி எம்.பிக்களாகிய எம்மீது சபையில் தாக்குதல் நடத்தி சித்திரவதை செய்தனர். இம்முறை வரவுசெலவுத் திட்டத்தை ஜனாதிபதி சமர்ப்பித்தபோது அதனை தடுக்கும் முகமாகவே எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க தலைமையில் நாடகம் அரங்கேற்றப்பட்டது. அங்கு என்ன நடக்கும் என்று தெரிந்திருந்த எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க, கையை அசைத்து எதிர்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களை உசுப்பேற்றினார். வரவு செலவுத் திட்டம் சமர்பிக்கப்படுவதைத் தவிர்க்க எதிர்கட்சி சூழ்ச்சி செய்ததன் காரணமாகவே குழப்பநிலை ஏற்பட்டது. சபை கலரியில் வெளிநாட்டு தூதுவர்கள் இருந்த நிலையில் ஐக்கியத் தேசியக் கட்சி இதனை திட்டமிட்டு மேற்கொண்டது. - என்றார் அவர். (த-சி)

## யசூசி அகாசி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விருந்தினராக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கலந்து கொள்வார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் முன்னெடுக்கப்பட்ட சமாதான முனைப்புக்களில் அகாசி முக்கிய பங்காற்றினார் அத்துடன் யுத்தத்தின் பின்னரும் அகாசி பல தடவைகள் இலங்கைக்கு விஜயம் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அரசுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளன. இலங்கையின் பங்கு சந்தையில் இந்தப்பணம் முதலீடு செய்யப்பப்பட்டு, செயற்கையான பங்கு சந்தை உயர்வு காண்பிக்கப்பட்டதாகவும் லங்கா லீக்ஸ் என்ற இணையம் செய்தி வெளியிட்டுள்ளது.

தமிக்க பெரேரா மற்றும் நிமால் பெரேரா ஆகியோரே இந்த முதலீட்டை மேற்கொண்டனர் எனவும் சட்டவிரோத பணத்தை அண்மையில் பங்கு சந்தையிலிருந்து இவர்கள் மீளப் பெற்றுக்கொண்டதால் சந்தை மறுபடி வீழ்ச்சியடைந்ததுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## விசாரணை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தன தெரிவித்தார்.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்கீழ் கைதுசெய்யப்பட்டுள்ளோர் தொடர்பாக ஐ.தே.க நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர நேற்றுமுன்தினம் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த ஆளுங்கட்சிப் பிரதம கொறடாவான அமைச்சர் தினேஷ் குணவர்த்தன, மேற்படி 259 பேருக்கு எதிராக எவ்வித வழக்குகளும் தாக்கல் செய்யப்படவில்லை என்றும், 64 பேருக்கு எதிராகவே இதுவரை சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது என்றும் விளக்கினார்.

இந்த நிலையில், யுத்தம் முடிந்து குறிப்பாக வட பகுதி மக்கள் அனைவரும் ஓரளவேனும் சமாதானம், சாந்தி அடைந்துள்ளபோதிலும், சந்தேகத்தின் பேரில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைதாகி அநியாயமாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு எதிராக எவ்வித நடவடிக்கைகளும் எடுக்காமல் இருக்கின்ற அரசு, இலங்கை சட்டத்திலுள்ள குறைபாடுகளை வெளிக்கொணர்ந்து வருகின்றது. அது, சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் பலவீனங்கள் மற்றும் தொழில் வினைத்திறனின்மையையே எடுத்துக்காட்டுகின்றது என்று ஜயலத் ஜயவர்த்தன கூறினார்.

அரசின் குறைபாடுகள் இன்னதென்று சபையிலேயே அரச அமைச்சர் வெளிச்சமிட்டுக் காட்டிய நிலையிலும், ஜனாதிபதி இது தொடர்பாகத் தொடர்ந்தும் அக்கறையின்றிச் செயற்படுவது ஆரோக்கியமானதன்று.

எனவே, இது தொடர்பாகச் சட்டம் படித்த ஜனாதிபதியே நேரடியாகத் தலையிட வேண்டும் - என்றார். (ஒ-சி)

## 'பட்ஜெட்'...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாக, முதலாவது ஆர்ப்பாட்டம் இன்று காலை 11 மணிக்கு அநுராதபுரம் நகரில் நடத்தப்படும் என ஜே.வி.பியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், தேசிய தொழிற்சங்க மத்திய நிலையத்தின் தலைவருமான கே.டி. லால் காந்த கூறினார். (த-சி)

## கோயிலில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாவீரர்கள் தொடர்பான எந்தவொரு நிகழ்வும் வெளிப்படையாக இடம்பெறுவதில்லை.

ஆனாலும் இராணுவத்தினரும் கடற்படையினரும் இந்தக் காலப் பகுதியில் அதிக முன்னெச்சரிக்கையுடனும் விழிப்புடனுமே இருந்து வருகின்றனர். மாவீரர் தின நிகழ்வுகள் இடம்பெறாமல் இருப்பதை உறுதிப்படுத்த அவர்கள் பல்வேறு நடவடிக்கைகளையும் எடுத்து வருகின்றனர்.

''காரைநகரில் அடுத்துவரும் ஒரு வாரத்துக்கு கோயில்களில் மணியோசை எழுப்பக்கூடாது, தீபம் காட்டக் கூடாது, ஒலிபெருக்கி பயன்படுத்தக்கூடாது என இராணுவம் தடை விதித்துள்ளது. இதுவரை காரைநகர் மணற்காடு முத்துமாரி அம்பாள் ஆலயம், பண்டத்தரிப்பான் குளம் சிறி சுந்தரேசன் பெருமாள் கோயில் ஆகியவற்றின் அர்ச்சகர்களுக்கு கடற்படையினர் இந்த அறிவித்தலை நேரில் வழங்கியுள்ளனர். இதனால் கடந்த மூன்று தினங்களாக நித்திய பூசைகளின்போது இந்தக் கோயில்களில் மணியோசை எழுப்பப்படுவதில்லை. தங்களுடைய அரசியல் காரணங்களுக்காக மக்களுடைய அன்றாட வாழ்க்கையைப் பாதிப்பது ஏற்புடையதல்ல'' என்றார் பிரதேச சபைத் தலைவர். (உ-14)

16ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 15 * 11 * 1919



இறப்பு 22 * 11 * 1995

செல்லையா பொன்னுத்துரை

திதி: அமாவாசை.

ஆயிரம் பௌர்ணமி கண்டீர்கள்
எமதருமை தந்தையே
அது போதும் என்றோ நீத்தீர்
எமையும் இவ்வுலகையும்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

25/7 மானிப்பாய் றோட்,
ஓட்டுமடம், யாழ்ப்பாணம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

# வீதியில் பெண்ணைத் தள்ளிவிழுத்தி விட்டு உடைமைகளுடன் பறந்தார் ஓட்டோச் சாரதி

யாழ்ப்பாணம், நவ.24

திருகோணமலையில் இருந்து யாழ். பஸ் நிலையத்துக்கு அதிகாலை வேளை வந்திறங்கிய பெண் ஒருவரை ஆனைக்கோட்டைக்கு ஏற்றிச் சென்ற ஓட்டோச் சாரதி ஒருவர் அந்தப் பெண்ணைக் காக்கைதீவு வெளியில் தள்ளி விழுத்தி விட்டு அவரின் கைத்தொலைபேசி, பணம் அடங்கிய கைப்பை, உடுப்புப்பை போன்றவற்றுடன் தப்பிச் சென்றுள்ளார். இது தொடர்பாகக் குறித்த பெண் மானிப்பாய் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

இது பற்றி மேலும் தெரியவருவதாவது:

திரியாய், திருகோணமலையைச் சேர்ந்த மகாதேவ ஐயர் அமுதச் செல்வி (வயது-45) என்பவர் உறவினர் ஒருவரின் மரணச் சடங்கில் கலந்து கொள்வதற்காக திருகோணமலையிலிருந்து இரவு நேரப் பயணம் மேற்கொண்டு, அதிகாலை 5 மணியளவில் யாழ்ப்பாணம் வந்துள்ளார்.

அங்கு நின்ற ஓட்டோ சாரதி, இவர் போகும் இடத்தை விசாரித்து, தானும் ஆனைக்கோட்டையைச் சேர்ந்தவர் என்றும், மரணம் அடைந்தவரின் பெயர் விவரங்களைக் கூறியுள்ளார். இதனை நம்பி, அப்பெண் அவரது ஓட்டோவில் பிரயாணத்தை மேற்கொண்டுள்ளார்.

ஓட்டுமடம் வீதியால், ஆறுகால்மடம் வரை வந்த ஓட்டோ காக்கைதீவு நோக்கி கல்லுண்டாய் வழியாக ஓட்டோவைச் செலுத்திய சாரதி, இடை வெளியில் நிறுத்திவிட்டு பெற்றோல் இல்லை எனக் கூறி,குறித்த பெண்ணை ஓட்டோவைத் தள்ளுமாறு கேட்க பெண்ணும் ஓட்டோவைத் தள்ளி விட்டு, ஏற முற்பட்ட போது அவரைத் தள்ளி விழுத்தி விட்டு ஓட்டோவில் இருந்த பெண் ணின் கைத்தொலை பேசி, உடுப்புப்பை, 1600 ரூபா அடங் கிய கைப்பை ஆகிய வற்றுடன் அவர் ஓடித் தப்பியுள் ளார்.

இதுபற்றி ஓட்டோ சங்கத்திடம் பெண் முறையிட்ட போது, பத்திரிகைகளில் பிரசுரிக்க வேண்டாம். நாங்கள் நடவடிக்கை எடுக்கிறோம் என்று கூறியுள்ளனர்.

சம்பவம் பற்றி மானிப்பாய் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (த-29)

# வீதியில் நின்ற வெள்ள நீரினால் குடும்பஸ்தரின் உயிரே பிரிந்தது!

அம்பாறை, நவ.24

மட்டக்களப்பு சம்மாந்துறையில் வீதியில் சைக்கிளில் சென்ற ஒருவருக்கு எதிரே ஓட்டோவில் வந்த மூவருக்கும் இடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கொலையில் முடிந்தது. ஆட்டோவில் வந்தவர்கள் இரும்புக் கம்பியால் தாக்கியதில் சைக்கிளோட்டி மரணமானார்.

இந்தச் சம்பவம் நேற்று மாலை இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் நிந்தவூர் 13 ஆம் பிரிவைச்சேர்ந்த இப்ராலெவ்வை அபுல் ஹசன் (வயது-46) என்ற குடும்பஸ்தரே மரணமாகியுள்ளார்.

இந்தச் சம்பவம் பற்றி தெரிய வருவதாவது-

நிந்தவூர் பிரதான வீதியால் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த பிரஸ்தாப நபர் எதிரில் வந்த ஓட்டோ வீதியில் தேங்கி நின்ற வெள்ள நீரை அடித்துச் சென்றுள்ளது. இதனால் ஆத்திரமுற்ற அவர் ஓட்டோவில் வந்தவர்களுடன் தர்க்கத்தில் ஈடுபட்டுள்ளார்.

நிலைமை மோசமானது. ஓட்டோவில் வந்தவர்கள் இவரை இரும்புக் கம்பியால் தாக்கிவிட்டுச் தப்பிச் சென்றுவிட்டனர்.

தலையின் பின்புறத்தில் படுகாயமடைந்த இவரை நிந்தவூர் மாவட்ட வைத்திய சாலைக்கு எடுத்துச் சென்ற சமயம் இடைவீதியில் உயிர் பிரிந்துவிட்டது.

சம்பவம் தொடர்பாக சம்மாந்துறைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (ஒ-10)

## மரண அறிவித்தல்கள்

### நாகலிங்கம் செல்லம்மா



வேலணை, 5 ஆம் வட்டாரம், ஆரவயலைப் பிறப்பிடமாகவும், மணியகாரன் வீட்டடியை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் செல்லம்மா நேற்று (23.11.2011) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம்-நாகத்தை தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான சபாபதி, சின்னத்தம்பி, சின்னத்தங்கம் இராசையா ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்ற நாகலிங்கத்தின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான நாகமுத்து-தையலம்மை தம்பதியரின் மருமகளும், ரகுநாதன் (ஓய்வுபெற்ற விலைமதிப்பீட்டாளர்) மற்றும் காலஞ்சென்ற ஜானகியின் பாசமிகு தாயும், திலகமலர் மற்றும் காலஞ்சென்ற தியாகராசா (ஆசிரியர்) ஆகியோரின் மாமியும், தவமோகன், காலஞ்சென்ற சுந்தராம்பாள், எழிலினி, மனோகரன்-அனுஷா, திவ்வியராசன் (UK), திவ்வியகாந்தன் (கனடா), மகிஷி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.11.2011) வியாழக்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சாட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மணியகாரன் வீதி,
5ஆம் வட்டாரம்,
வேலணை.

தகவல்:
நா.இரகுநாதன் (மகன்)
பேரப்பிள்ளைகள்.

### பண்டிதர் நா.இராசையா



கோண்டாவில் மேற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட பண்டிதர் நாகலிங்கம் இராசையா 22.11.2011 செவ்வாய்க் கிழமை இந்தியாவில் காலமானார்.

அன்னார் சின்னம்மாவின் அன்புக் கணவரும், ஞானசம்பந்தன் (கனடா), ஆதிலட்சுமி, தமிழ்செல்வன் (கனடா), கலைச்செல்வன் (திட்டமிடல் பிரிவு, கச்சேரி, திருகோணமலை), காலஞ்சென்ற அருட்செல்வி ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிவகுமார், கலாரூபி (கனடா), ஹேமலதா (கனடா), தாரணி (காணிப் பிரிவு, கச்சேரி-திருகோணமலை) ஆகியோரின் மாமனும், ராஜீவ் (கனடா), கஜந்தன், சாலிகா (கனடா), ஆதிரா (கனடா) ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறியத் தரப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இரா. சின்னம்மா
இரா. கலைச்செல்வன்.
T.P.: 00919710567173

## இந்திய நாடாளுமன்றில் மீனவர்கள் மீதான தாக்குதல் குறித்து விவாதம்

தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையால் தொடர்ந்து தாக்கப்பட்டு வருவது குறித்து விவாதிக்க வேண்டும் - என்று நாடாளுமன்றத்தில் தி.மு.க. உறுப்பினர்கள் வலியுறுத்தினர்.

டில்லியில் நாடாளுமன்றக் குளிர் காலக் கூட்டத்தொடர் நேற்றுமுன்தினம் தொடங்கியது. அப்போது தி.மு.க. நாடாளுமன்றக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு இந்தப் பிரச்சினையை எழுப்பினார்.

இதுகுறித்து பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய டி.ஆர்.பாலு கூறியவை வருமாறு -

நம்முடைய மீனவர்களின் உயிருக்கும், உடைமைக்கும் பாதுகாப்பற்ற சூழ்நிலை நிலவுகிறது. இதைக் கருத்தில் கொண்டு மத்திய அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். முறைப்படி இலங்கை அரசுக்கு கண்டனம் தெரிவிப்பதோடு அல்ல, இனி இதுபோன்ற சம்பவங்கள் நடக்காமல் இருக்க இரு நாட்டு அரசுகளும் பேசி முடிவு எடுக்க வேண்டும் - என்றார் அவர். (ஒ-சி)

## 3000 ஆசிரியர் நியமனம் வருட இறுதிக்குள்

கொழும்பு, நவ.24

இவ்வருட இறுதிக்குள் 3000 ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்படும் என்று கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன அறிவித்துள்ளார்.

அந்தத் தகவலில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

அண்மையில் நடத்தப்பட்ட பரீட்சையின்படி 3000 பாடசாலை ஆசிரியர்களுக்கான ஆசிரியர் நியமனங்கள் இவ்வருட இறுதிக்குள் வழங்கப்படும் என கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன அறிவித்துள்ளார். (ஒ-சி)

26, 27 ந் திகதிகளில் காலை 08.00 மணி
O/L மாணவர்களுக்கான கருத்தரங்கு
பாடம்: வரலாறு | ஆசிரியர்: R.S. சந்திரன்
இலங்கைப் படம், உலகப்படம் குறிப்பது பற்றிய விளக்கம்.
வினாக்களுக்கு விடையளிக்கும் முறை பற்றிய விளக்கம்.
எதிர்பார்க்கை வினாக்களும், பாடக்குறிப்புக்களும் வழங்கப்படும்.
கல்வியில் புதிய சகாப்தம் படைப்போம்
ROYAL ACADEMY
T.P: 0776649134 நாவலர் வீதி, நல்லூர்.

SPOKEN ENGLISH WITH DIPLOMA CERTIFICATE
A/L எழுதிய மாணவர்கள், பல்கலைக்கழக மற்றும் உயர்கல்வி மாணவர்கள், பட்டதாரிகள், விற்பனை மற்றும் வியாபார பிரதிநிதிகளுக்கான
இலவச ஆங்கில வகுப்பு
24.11.2011 வியாழன் : பிரிவு 1 : 9-11 பிரிவு 2 : 4.30-5.30
26.11.2011 சனி : பிரிவு 3 : மதியம் 12.30-2.00
அனுமதி. புத்தகம். மற்றும் சான்றிதழ் இலவசம்
டிப்ளோமா பயிற்சிக்கான புதிய பிரிவுகள் ஆரம்பம்
MyWay 182, STANLEY RD, JAFFNA
077 33 63 456 222 9505

BRITISH COLLEGE OF HIGHER STUDIES
BCHS
உயர் தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கு
25% கட்டணக் கழிவு
BI Exam - Student Visa மூலம் UK செல்பவர்களுக்கானது
City & Guilds இன் B1 பரீட்சை ஏனைய ஆங்கிலப் பரீட்சைகளை விட மிகவும் இலகுவானதுடன் இது G.C.E. (O/L) English இற்கு ஒப்பானது. இது British High Commission னால் முற்றிலும் அங்கீகரிக்கப்பட்டதுடன் எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கும் தோற்றமுடியும்.
Duration : 2 Months
Spoken English With Grammar - Quick Learning Course (1 1/2 Month)
ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்க விரும்புவர்களுக்காகவே நடாத்தப்படுகிறது. தொழில் புரிபவர்களுக்கு பிற்பகல். சனி மற்றும் ஞாயிறு வகுப்புக்கள் உண்டு.
A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு இது மிகவும் சிறந்தது.
வகுப்புக்கள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைவாகவும் (Video & Audio Visuals) கூடுதலான பயிற்சிகளுடன் நடாத்தப்படுகிறது.
Diploma In English (2 Month)
ஒரு தொழில் தேடுவதாயினும் சரி உயர் கல்வியினைத் தொடருவதாயினும் சரி ஆங்கிலத்தின் தற்காலத்தேவையும் அதிலே உங்களின் புலமை என்பதும் இன்றியமையாதது. இத்தேவைகேற்ப எமது பாடத்திட்டங்களும் வகுப்புக்களும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. தொழில் புரிவோர் மாணவர்களுக்கென வகுப்புக்கள் உண்டு.
A1 Exm - Sponsor / Settlement Visa மூலம் UK செல்பவர்களுக்கான பரீட்சை
U.K. அரசாங்கத்தினால் சிபார்சு செய்யப்பட்டது
எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கு தோற்ற முடியும்
சான்றிதழின் வலிது கால எல்லை அற்றது.
2012 April இல் எதிர்பார்க்கப்படும் புதிய நடைமுறையின் கீழ் ஆங்கிலத்தின் தராதரத்தை B1 நிலைக்கு உயர்த்த முடிவு செய்திருப்பதால் அதற்கு முன் உங்களை பதிவு செய்யுங்கள்.
நம்பிக்கைக்குரிய சர்வதேச பரீட்சை
ஏனைய பரீட்சைகளை விட மிகவும் இலகுவானது
அனைத்துப் பிரிவுகளுக்கும் புதிய வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.
மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.
Head Office: 30 -1/14, w.A.De Silva Mw. Colombo - 6 Tel: 2500207
Jaffna Branch: No. 15, Sirambiyady Lane, off Stanley Road, Jaffna.Tel: 021 222 4550
Vavuniya Branch: No. 13A, Annai Teresa Lane, (Near Rambaikulam Girls Convent) Rambaikulam, Vavuniya. Tel: 024 324 5287

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 24.11.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.